

கல்கி
ALKI 4-7-82 ரூ.1 20
காலேஜ் ஃபாஷன்கள்
கலைஞரிடம் கேட்டோம்!
ஜெயிலசிங்குக்கு ஜே!

முதலீடு செய்பவர்களுக்கெல்லாம் ஓர் அமுதசுரபி இந்துவே

ஆம், இந்து பைனான்ஷியர்ஸிடம் முதலீடு செய்யப்பட்ட உங்கள் பணம் மிக பத்திரமாக இருப்பதோடு மட்டுமின்றி கணிசமானதோர் வட்டித் தொகையையும் — **18%** வரை ஈட்டுத்தருகிறது. இந்துவின் 'ஐஸ்வர்யா' டிபாஸிட்டில் உங்கள் முதலீடு ஐந்தே ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது. அதுமட்டுமல்ல நீங்கள் முதலீடு செய்யும் ரூ. 5000/- உங்களுக்கு அழகியதோர் வெள்ளிப் பரிசையும் பெற்றுத் தருகிறது.

வாடிக்கையாளர்களிடம் இந்து கொண்டுள்ள உன்னத விஸ்வாசம், குறித்த காலத்தில் உங்கள் பணம், மேலும் சீரிய உத்தரவாதம் எல்லாம் இந்துவை ஏனைய பதிவு செய்யப்பட்ட பைனான்ஸ் நிறுவனங்களிடையே ஒளி வீசும் ஒரு ரத்தினமெனத் திகழச் செய்கிறது.

இந்து உறுதியுடனும், உத்தரவாதத்துடனும், உங்கள் முதலீட்டினைக் கட்டிக்காத்து உங்கள் செல்வம் பெருகிட வழிகாட்டுகிறது. வற்றாது வழங்கும் அமுதசுரபியே இந்து.

கிளைகள்:

32, ரங்கநாதன் தெரு.
சென்னை-600 017

18, சிங்கண்ண நாயக்கன் தெரு
சென்னை-600 001

24, வடக்கு மாட வீதி, பூவிருந்தவல்லி,
சென்னை-600 056-போன்: 69566


41, தொப்பா முதலியார் தெரு
பெங்களூர்-560 001
போன்: 579585

194, வக்கீல் புதுத் தெரு,
மதுரை-625 001, போன்: 34940

106, பெரிய தெரு,
திருவண்ணாமலை-606 601, போன்: 681

22, வணிகர் தெரு,
காஞ்சிபுரம்-631 201, போன்: 3048

இந்துவுடன் சேர்ந்து வளம் பெறுங்கள்



INDU FINANCIERS MADRAS-600017

இந்து பைனான்ஷியர்ஸ் (Regd.)

H.O. 155, வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராயநகர், சென்னை-600 017
போன்: 445529

S. Subbarayan, M.A.,
Managing Partner

UIPC: IF:208

அமைச்சர், முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் போன்ற பல பொறுப்புக்களில் இருபத்தைந்து ஆண்டுகள் சட்டமன்றப் பணியாற்றி வெள்ளிவிழா காணும் கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்களுக்கு கல்வி நேயர்கள் சார்பில் நன்றியும் வாழ்த்தும் தெரிவித்ததுடன் சில கேள்விகளையும்

கலைஞரிடம் கேட்டோம்!

1. தமிழகத்தில் இந்திரா காங்கிரசுக்கு எவ்வித பெரிய ஆதரவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க இ. காங்கிரஸ் உறவுக்கு தி. மு. க. ஏங்கித் தவிப்பானேன்?

பதில்: யாருடைய உறவுக்கும் தி. மு. கழகம் என்றைக்குமே ஏங்கித் தவித்ததில்லை. நாட்டின் ஜனநாயகம் காப்பாற்றப்பட; ஒரு கால கட்டத்தில் இந்திரா காங்கிரசின் உறவையே கூட முறித்துக் கொண்டது. ஆட்சி பீடத்தைக்கூடப் பொருட்படுத்தாமல் தனது கருத்தை ஓங்கி ஒலித்தது. ஆனால் இந்தியாவின் பெருந் தலைவர்கள் "ஜனதா" என்ற பெயரால் ஒன்றியிருந்து ஆட்சி நடத்தவும் முடியவில்லை. நன்றியுடனிருந்து கழகத்தின் நட்பை வளர்க்கவும் முற்படவில்லை. இந்தியாவில் இன்றுள்ள நிலையில் இந்திரா காந்தியைத் தவிர நிலையான ஆட்சியைத் தரக் கூடியவர் வேறு யாரும் தென்படவில்லை! அந்த ஒரு முக்கியமான காரணத்துக்காகவே இந்திரா காந்தி அவர்களின் அரசுடன் தோழமை கொண்டிருக்கிறோம். உறவுக்குக் கை கொடுப்போம் — உரிமைக்குக் குரல் கொடுப்போம் — இதில் மாற்றமில்லை.

2. பல மத்திய அரசு அலுவலகங்களிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும் தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் இந்தி திணிக்கப்படுவது கண்கூடு. அவ்வாறிருக்க வெறும் 'ஆகாஷ்வாணி' என்ற பெயர் மாற்றத்தை மட்டும் எதிர்த்து வெற்றி கண்டு விட்டதாகப் பெருமைப்படுவதில் என்ன லாபம்?

பதில்: மெல்ல மெல்ல இந்தி திணிக்கப் படுகிற நிலையை உணராமல் இல்லை! அதனைக் கழக நாடாளு மன்ற உறுப்பினர்கள் உணர்த்தாமலும் இல்லை! 'ஆகாஷ்வாணி' என்ற பெயர் மாற்றத்தை எதிர்ப்பதன் மூலம் "இந்தித் திணிப்பு எதிர்ப்பு", தமிழகத்தில் நீறு பூத்த நெருப்பாக இருக்கிறது என்பதை ஒரு எச்சரிக்கையாக அறிவிக்கிறோம்.

3. ஆந்திராவிலும் கர்நாடகத்திலும் நடிகர்கள் மாநில அரசியலில் புகுந்து சலசலப்பைத் தோன்றச் செய்துள்ளனர். பிற மாநிலங்களிலும் இப்போக்குப் பரவும்போல் தோன்றுகிறது. இதற்கு தி.மு.க. தான் முன்னோடி. தி. மு. க. வின் தலைவர் என்ற முறையில் இதற்குத் தாங்கள் பெருமைப்படுகிறீர்களா? வருந்துகிறீர்களா?

பதில்: கொள்ளிக்கட்டையால் தலையைச் சொறிந்து கொண்ட குற்றத்தை எண்ணி வருந்தாமல் இருக்க முடியுமா?

4. தி.மு.க. என்றைக்கேனும் மறுபடி ஆட்சிக்கு வருமானால் அதன் மதுவிலக்குக் கொள்கை என்னவாக இருக்கும்?

பதில்: இந்தியா முழுவதும் கடைப்பிடிக்கப்



பட்டால்தான் மதுவிலக்கு வெற்றி பெற முடியும். ஆனால் ஒன்று: இன்றைக்குத் தமிழகத்தில் ''மதுவிலக்கு'' — ''மதுவிலக்கு தளர்த்தல்'' – என்ற பெயரால் நடைபெறும் கேலிக் கூத்துக்களும் கோமாளிச் செயல்களும் கொள்ளையும் தி. மு. க. ஆட்சியில் நடைபெறவே யில்லை! இனியும் நடைபெறாது!

5. எதிர்க் கட்சி என்றால் ஆளும் கட்சியின் ஒவ்வொரு செய்கையையும் எதிர்க்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் தி. மு. க. செயல்படுவதாகத் தோன்றுகிறதே?

பதில்: அப்படியில்லையே! காவிரிப் பிரச்சினையில் இதுவரையில் ஒரே கருத்துத்தான்! 'ஆகாஷ்வாணி' பிரச்சினையில் கூட ஆளுங் கட்சியின் தீர்மானத்தை வரவேற்றுப் பாராட்டி யிருக்கிறோம்! காமராசர் காலத்தில் கொண்டுவரப்பட்டுச் செயல்படும் மதிய உணவுத் திட்டத்தை இந்த அரசு விரிவுபடுத்தப்போவதைக்கூட வரவேற்றுள்ளோம். ஊராட்சிகள், ஒன்றியங்களில் தாழ்த்தப்பட்டோருக்கும் பெண்களுக்கும் தனித்-தொகுதிகள் ஒதுக்கீட்டை வரவேற்றுள்ளோம்! ஆனால் இவற்றை யெல்லாம் முறைப்படவும், திறப்பாடுடனும் செயல்படுத்தவில்லையே என்பதுதான் எங்கள் குற்றச்சாட்டு!

6. பத்திரிகைகள் அமைச்சர்களைப் பற்றித் தரக் குறைவாக எழுதும்போது வாளா விருந்துவிட்டுப் பின்னர் அப்பத்திரிகைகள் மீது அரசு சட்டப்படி நடவடிக்கை எடுத்தால் 'கொடுங்கோல் ஆட்சி' என வர்ணிப்பது எவ்விதத்தில் சரியானது?

பதில்: ஆளும் கட்சி ஏடுகளை விட எதிர்க் கட்சி ஏடுகள் தரக் குறைவாக எழுதுவதாக நீங்கள் கருதுவது தவறு! எதற்கும் ஏற்கனவே உள்ள சட்டங்கள் போதுமானவைகளாக இருக்கும்போது புதிய ''பழிவாங்கும் சட்டங்கள்'' எதற்காக?

7. தமிழகத்தை ஒரு 'பின்தங்கிய மாநில'மாக ஏற்றுக் கொண்டு தமிழகத்துக்கு 'விசேஷ உதவி' மத்திய அரசு அளிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளது குறித்து...?

பதில்: தமிழகத்துக்கு மத்திய அரசு அதிக நிதி உதவி அளிக்க வேண்டுமென்று தி.மு.க. இப்பொழுதும் வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கிறது. அதை மாநில அரசு வலியுறுத்திக் கேட்க வேண்டுமென்றும் தூண்டுகிறது. அண்மையில் மத்திய நிதியமைச்சர் சென்னையில் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் கூட எங்கள் எம். பி. தமிழ் நாட்டு தொழில் வளர்ச்சிக்காக வாதாடியது உங்களுக்குத் தெரியுமே! அதற்காக முதல்வர் அவருக்கு அளித்த பட்டங்களையும் ஏடுகளில் படித்திருப்பீர்களே!

8. படிப்பு உத்தியோகம் ஆகிய துறைகளில் பின்தங்கிய வகுப்பினருக்குச் சலுகை அளிக்கப்படுவது போன்று பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்குச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் நியாயம் இருப்பதாகத் தாங்கள் எண்ணுகிறீர்களா? இல்லையா?

பதில்: முதலில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் உயர்ந்த நிலைக்கு வரட்டும். அடுத்த கட்டமாக உங்கள் கோரிக்கையின் நியாயத்தைப் பரிசீலிக்கலாம்!

9. சொற்ப காரணங்களுக் கெல்லாம் தாங்கள் 'பாத யாத்திரை' மேற்கொண்டு 'பாதயாத்திரை'யின் மகத்துவத்தைக் குறைக்கிறீர்கள் என்று விமர்சிக்கப்படுகிறதே... தங்கள் பதில் என்ன?


பதில்: ஒரு நேர்மையான அதிகாரியைக் கோயிலில் கொலைசெய்வது, அவர் மீது திருட்டுக் குற்றம் சுமத்துவது, விசாரணைக் கமிஷன் அறிக்கையைக் குப்பையில் போட்டு விட்டுக் கொலைகாரர்களுடன் குலவி மகிழ்வது! இப்படி எண்ணற்ற சம்பவங்கள் தமிழ் நாட்டில் நடந்துள்ளதை எடுத்துக் காட்டத்தான் நெடிய பயணம் மேற்கொண்டோம். பயணம் மேற்கொண்ட எனக்கு ''மகத்துவம்'' இல்லாமல் இருக்கலாம். அதனால் அந்தப் பயணம் சிலருக்கு மகத்துவத்தைக் குறைப்பதாகத் தெரியலாம்!


10. பிராமணர்கள் மனம் புண்படும்படியாக நடந்து கொள்ளும் திராவிடக் கழகத்தின் போக்குக்குத் தாங்கள் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவும் ஊக்கமும் தேர்தல் நோக்கிலும், அரசியல் ரீதியிலும் தங்களுக்கும், தங்கள் கட்சிக்கும் ஊறு விளைவிக்கும் என்று சொன்னால் தங்கள் பதில் என்ன?

பதில்: யாரையும் புண்படுத்தாமல் பண்படுத்திட முனைய வேண்டுமென்பதே எங்கள் கழகத்தின் கருத்து! தனிப்பட்ட பிராமணர்களைத் தரக் குறைவாகப் பேசுவதையும் அதே போலத் திராவிடர் கழகத் தலைவர்களைத் தனிப்பட்ட முறையில் தரக் குறைவாக பிராமணர்கள் மாநாடுகளில் பேசுவதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை!


பேட்டி: **நாயகன் — ப்ரியன்**

புகைப்படம்: **ஓம். சுப்பிரமணியம்**






"ரெபிடெக்ஸ்
இங்கிலீஷ்
ஸ்பீகிங்
கோர்ஸ்



Rapidex
Self
Letter Drafting
Course



● ஆர்மோனிய ராவ் என்ற தலைப்பில் அன்னூரர் ஜி. வெங்கடரமண ராவ் ஒருவர் தான் தற்சமயம் தனி ஹார்மோனிய கச்சேரி செய்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது தவறான செய்தி.

காரைக்குறிச்சி திரு கே.எஸ். கிருஷ்ணன் பல வருடங்களாகவே தனிக் கச்சேரி செய்து வருகிறார். இரண்டு தவில்கள் வைத்துக் கச்சேரி செய்து புரட்சி பண்ணியிருக்கிறார். வலயப்பட்டியும் இவருக்கு வாசித்திருக்கிறார்.

கோவை என். அலந்தராமன்

● பேரூர் சுப்பிரமணிய தீட்சிதரின் குமாரர் திரு பி. எஸ். சுந்தரம் கடந்த சில வருஷங்களாகவே ஹார்மோனியம் தனிக் கச்சேரி செய்து பிரபலமடைந்து வருகிறார்.

பம்பாய் காரியதரிசி
கானகலா வித்யா நிலையம்

● ''பெங்களூரில் இதுவரையில் இல்லாத அளவுக்கு ராஜ்குமாரின் 70 அடி உயர 'கட் அவுட்' செய்து நிற்க வைத்துள்ளனர். இதனைச் செய்வதற்குச் சுமார் 4000 ரூபாய் ஆயிற்று! மாலைகள் மற்றவைகள் என்று சுமார் 2000 ரூபாய் ஆயிற்று'' என்று டெக்கான் ஹெரால்டு செய்தியைத் தந்துள்ளது. திரைஞானி குறிப்பிட்டுள்ளது போல் 200 அடி உயர 'கட் அவுட்' அல்ல.

பங்களூர் ப. மூர்த்தி

● ''ஞானரதம்'' ஒரு சிறந்த பொதுநல முயற்சி என்று 'தராசு' பாராட்டுத் தெரிவித்ததற்கு நன்றி. புளியங்குடியில் ஞானரதத்துக்கு இடையூறு நேர்ந்தது வருந்தத்தக்கது என்றும் பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கலவரச் சூழல் உருவாக்கப் பட்டிருந்த போதிலும் புளியங்குடியில் ஞானரதம் எடுத்து வந்த ஞானவேல் முருகன் பல பகுதிகளுக்குப் பவனி சென்று தரிசனம் அளிப்பதில் எவ்வித தடங்கலும் ஏற்பட்டுவிடவில்லை. ஹரிஜனங்கள் உள்ளிட்ட எல்லாப் பிரிவினரும் முருகனை ஆராதித்து மகிழ முடிந்தது. கலவரச் சூழ்நிலை இருப்பதால் ஞானரதத்தின் வருகையைச் சாக்கிட்டு ஏதும் அசம்பாவிதம் நடந்துவிடக் கூடாதே என்று ஞானரதம் ஹரிஜனங்களின் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று அதிகாரிகள் ஆலோசனை கூறினார்கள். அமைதியும் ஒழுங்கும் நிலவச் செய்வதில் அனைவரோடும் ஒத்துழைக்கும் விசுவ ஹிந்து பரிஷத் உடனே அதற்கு ஒப்புக்கொண்டது. ஞானரதம் கலவரப் பகுதியிலிருந்து வெளியேறி மதுரை மாவட்டத்தில் தனது பணியைத் தொடர்ந்து வருகிறது.

ஞானரதத்தில் ஞானவேல் முருகன் தனது பவனியைத் தொடங்கிய தினத்திலிருந்து முருகனுக்கு அபிஷேகமும் ஆராதனையும் இல்லாத நாளே இல்லை.

சென்னை-5 மலர்மன்னன்

● ''தேவை ஒரு பார்வை'' — நாம் வாழும் சமுதாயத்தைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான். சமுதாயப் பிரச்னை ஒன்றை 'இன்னும் தெளிவாக — அழகாகச் சொல்லி இருக்கலாம்' என்ற உணர்வோடு கண்டனம் எழுப்பப்பட்டிருந்தால் மகிழ்வோடு ஏற்கலாம். ஆனால் வாசகர் செய்யாத குற்றத்துக்கு ஜென்ம தண்டனை தருவது போல் கடுமையாக எழுதியுள்ளார்.

கேளம்பாக்கம் ஆர்.பி. சாரதி

● எனது 'பழந்தீவு பன்னிராயிரம்' சிறுகதை குறித்து திரு மணி ஸ்தபதியும் திரு இருமாவளவனும் எழுதியுள்ளவை எதுவும் எனக்குப் புதிதல்ல..ஏற்கனவே நான் அறிந்தவையே. நான் கதையில் சொல்லியிருப்பது என்ன?

ராசராசேச்சரத்தை நமது கல் தச்சர்கள் தான் உருவாக்கினர். நான் மறுக்கவில்லை. ஆனால் நிழல் சாயாத தன்மையை அட்ச ரேகை கணக்கிட்டு அமைத்துக் கொடுத்தவன் அந்நியன். அவன் சீனனாக இருக்கலாம் என்பது என் கற்பனை. ராசராசன் காலத்தில் சீனத் தொடர்புண்டு. சீன நாட்டிலிருந்து பல புதுமையான விஷயங்கள் நமக்கு இறக்குமதியாகியிருக்கின்றன. சிற்பத்தில் எப்படி கிரேக்க பாதிப்புகள் ஏற்பட்டனவோ அப்படியே சீன, பாரசீக நாட்டிலிருந்து விஞ்ஞானப் பாதிப்புகள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது என் கணிப்பு.

சென்னை-93 கோவி. மணிசேகரன்

[இந்த விவாதம் இத்துடன் முற்றுப் பெறுகிறது. -ஆர்]

● விஞ்ஞானப் பக்கங்களில் இரு குறை கண்டு வாசகர் எழுதிய கடிதம் பார்த்தேன். லீனியர் ஆக்ஸலரேட்டர் என்பது லீனியர் ஆக்ஸலேட்டர் என்று மாறி வந்துள்ளது அச்சுப் பிழை. என் தவறல்ல.

''சைக்லோட்ரானும் சக்தி வாய்ந்த நியூட்ரான்களை உண்டாக்க முடியாது'' என்று வாசகர் கூறுவது தவறு. முடியும் என்பதற்கு ஆதாரமான Spectrum கட்டுரைப் பகுதியை இத்துடன் இணைத்துள்ளேன்.

நெய்வேலி நளினி சாஸ்திரி

[கடிதத்துடன் வந்துள்ள கட்டுரை நளினி சாஸ்திரி எழுதியது சரி என நிரூபிக்கிறது. -ஆர்]

இன்னொரு குழந்தை உங்களுக்கு கட்டுப்படியாகுமா?





முடியாதல்லவா


குழந்தை ஆரோக்கியமாக வளர, அதன் முதல் நான்காண்டுகள் மிக முக்கியமானவை. இக்காலத்தில் அதற்கு, பராமரிப்பு, அன்பு, சத்தான உணவு, ஆடை ஆகியவை தேவை. இவற்றை வாங்கப் பணம் தேவை. இச்செலவு உங்களுக்கு சிரமமாகப் படக்கூடும்.

பொருளாதார ரீதியில் உங்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய காலம் வரையில், அடுத்த குழந்தையின் பிறப்பை ஒத்திப்போட முடியும்.


நிரோத் உபயோகியுங்கள் உயர் ரக கருத்தடைச் சாதனம்

davp 81/236

விநியோகஸ்தர்கள்: ப்ரூக் பாண்ட், லிப்டன், ஹிந்துஸ்தான் லீவர், யூனியன் கார்பைட், [illegible], ஸ்மித் ஸ்டேனிஸ்ட்ரீட், இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் பாரத் பெட்ரோலியம் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், அசாம் மேட்ச் இண்டஸ்ட்ரி.


ஜனாதிபதி பதவி
ஜெயில்சிங்
உன்னை புகுந்துக்குறுங்க! உங்களை விட உங்க கௌரவம் எவ்வளவு பெரிசாகப் போவுது பாத்தீங்களா!...
கபடி.. கபடி..
மெஜாரிட்டி
பஜன்லால்
தேவிலால்
என்னை மலையாளின்னு திட்றனே!...
அவன் கெடக்குறான்.. அவன் தமிழனே இல்லே!
குழந்தை வேலு
என்னைத் தமிழன் இல்லேன்னு திட்றியே... நான் மம்முத்தி சாப்பிட மாட்டேன் போ!

விழுந்து நொறுங்கும் விமானங்கள்!



எம். ஜி. ஆரின் புகழ் விமானக் கம்பெனிக்குப் புதியதோர் ஏர்ஹோஸ்டஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார் — ஜெயலலிதா. கடலூர் மகாநாட்டில் இவர் அறிமுகப்படுத்தப்பட்ட விதம் உள்பட எதுவுமே பெருமைப்படக்கூடிய விஷயமாக இல்லை. 'பட்டதாரிகளின் வேலை வாய்ப்புக்குத் திட்டம் வைத்திருக்கிறேன்' என்று எம். ஜி. ஆர். அறிவித்ததும் ஹிந்தி திணிப்புக்கு எதிராக வீராவேசம் காட்டியதும் தி. மு. க. தலைவர் மீது வசை புராணங்களும் மாநில சுயாட்சி கோஷமும் கேட்டு அலுத்த வார்த்தை ஜாலங்கள். இதை நோக்கு கையில் எம். ஜி. ஆர். விமானக் கம்பெனியின் புகழ் விமானங்களுள் ஒன்று பெட்ரோல் இல்லாமல் நடு வானில் தத்தளிப்பதாகவே தோன்றுகிறது!

ஏற்கனவே பால்டிகா — பல்கேரியா கப்பல் பேரம் என்ற பெரும் புயலில் சிக்கித் தவித்த ஒரு புகழ் விமானத்தை எப்படியோ தப்பினோம் பிழைத்தோம் என்று ஏர்போர்ட்டுக்குக் கொணர்ந்து சேர்த்தார்கள். அந்த விமானம் புதுப்பிக்கப்பெற்று வேறு ஒரு நாட்டை நோக்கிக் கிளம்பியிருக்கிறது. அங்கு மீண்டும் சூறாவளியில் சிக்காதிருந்தால் சரி!

எம். ஜி. ஆர். கம்பெனியின் மற்றுமொரு புகழ் விமானம் திருச்செந்தூர் என்ற அண்டர் கேரேஜ் திறக்காததால் சக்கரம் இறங்க மறுக்க, விமானத்தை ஃபோம் என்ற வெண் நுரை பரப்பப்பட்ட ரன்வேயில் இறக்கி வழுக்கி ஓடச் செய்து நிப்பாட்டினார்கள். ஒருசில தலைகள் உருண்டாலும் பெரும்பாலோர் உயிர் தப்பினர்.

வேறு ஒரு புரட்சி விமானத்தின் இன்ஜின்கள், டேக்-ஆஃபின் போது மதுவிலக்கு ரத்து எனும் கொடிய கழுகுகளை ஈர்த்து விழுங்கித் தொலைக்கப் பயணத்தையே ரத்து செய்து மெக்கானிக்குகளை அழைக்க நேர்ந்தது. அவர்கள் இன்னமும் அந்தப் புகழ் விமானத்தின் இஞ்சினைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்!

காமராஜ் — வேங்கடராமன் காலத்தில் இந்தியாவிலேயே இரண்டாவது முன்னணி மாநிலமாயிருந்த தமிழகத்தை இன்று 'பிற்பட்ட மாநிலமாக அறிவித்து அதிக நிதி ஒதுக்க வேண்டும்' என்று முதல்வர் மத்திய நிதி அமைச்சரைக் கேட்டுக் கொண்டதானது எம். ஜி. ஆர். நிறுவனத்தின் மேலும் ஒரு புகழ் விமானம் நேவிகேட்டர் இல்லாமலும் திக்குத் திசை புரியாமலும் ஆகாய வெளியில் சஞ்சரிப்பதை உறுதிப்படுத்துகிறது.

மாஜி ஐ. ஜி. மாணிக்கம் சில காலத்துக்கு முன் கூறிய சாட்சியம், எம். ஜி. ஆர். நிறுவனத்தின் ஒரு 747 தரை தட்டும்போது பிரேக் பிடிக்காதது போலாயிற்று! போதாக் குறைக்கு அண்மையில் வருமான வரி உயர் அதிகாரி டி. ஏ. பாலகிருஷ்ணன், தமிழ் நாட்டில் திறக்கப்பட்டுள்ள சாராயக் கலவை மற்றும் புட்டியிலடைக்கும் தொழிற்சாலைகள் பல, பினாமி பெயரில் தொடங்கப்பட்டுள்ளன என்று பகிரங்கமாக அறிவித்ததன் மூலம் ஒரு 707 புகழ் விமானத்தில் எரிபொருள் டாங்க் தீப்பற்றி எரியுமாறு செய்துவிட்டார்! தீயணைப்புப் படை இனிதான் சுருசுருப்படைய வேண்டும்.

எத்தனையோ பல விமான விபத்துக்களுக்குப் பிறகும் ஏர்-இந்தியா, ஐ. ஏ. ஸி. விமானங்களில் ஏற முன்வரும் பயணிகளுக்குக் குறைவில்லை. எம். ஜி. ஆர். விமானக் கம்பெனியின் புகழ் விமானங்களில் ஏறவும் ஏராளமான மக்கள் துடியாக இருக்கிறார்கள் என்பதை ஓரிடத்தைக் கடக்க எட்டு மணி நேரம் எடுத்துக் கொண்ட மிக நீண்ட கடலூர் ஊர்வலம் நிரூபிக்கிறது.

கல்கி
1982 ஜூலை 4
துந்துபி ஆனி 20
மலர்: 40 இதழ்: 49

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்





ஜெயில் சிங்குக்கு ஜே!

"ஜனாதிபதி தேர்தலுக்கு நிறுத்திவைக்கப் போயும் போயும் ஜெயில் சிங்தானா அகப்பட்டார் இந்திரா காந்திக்கு?" என்ற முணுமுணுப்பு எல்லாத் திசைகளிலிருந்தும் கேட்கிறது.

சற்று யோசித்தால் இப்படி அலுத்துக் கொள்வது எவ்வளவு பெரிய தவறு என்பதும் பிரதமர் செய்தது எவ்வளவு புத்திசாலித்தனமான காரியம் என்பதும் புரியவரும்.


எதிர்க் கட்சியினர் முதலில் சிபாரிசு செய்தபடி ஹிதயதுல்லாவை ஜனாதிபதியாக்கப் பிரதமர் ஒப்புக் கொண்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? அவர் குடியரசுத் தலைவராகப் பணியாற்றுகையில் இந்தியாவின் பெருமை உலக அரங்கிலே பெருமளவு உயர்ந்திருக்கும். அப்படி உயரும்போது கூடவே நமது பிரதமரின் செல்வாக்கும் உயரும். இந்திரா காந்தியின் புகழ்பெருக எதிர்க் கட்சியினரின் அசட்டுத்தனமே காரணமாயிருந்திருக்கும்! இதற்கு இடம் தராததால் இந்திரா காந்தி எதிர்க் கட்சிகளுக்கு அளப்பரிய நன்மை தானே செய்திருக்கிறார்? இதற்காகவே எதிர்க் கட்சியினர் ஆளும் கட்சியினரோடு சேர்ந்து ஜெயில் சிங்குக்கு "ஜே" போடலாம் அல்லவா?

'ஜெயில் சிங் அஸ்ஸாம் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் திணறினார்; அவரைப் போய் ஜனாதிபதியாக்குவதா? என்று சிலர் குறைப்படுகிறார்கள். இப்படிப் புலம்புவதை விடப் பித்துக்குளித்தனம் வேறு என்ன இருக்க முடியும்?' ஜெயில் சிங் ஜனாதிபதியாகி விட்டால் அதன் பிறகு புதிதாக உள்துறை அமைச்சராக வரப் போகிறவர் அஸ்ஸாம் பிரச்னையைத் தீர்த்து வைக்கலாம் அல்லவா? அல்லது அஸ்ஸாம் பிரச்னையாவது அவரைத் தீர்த்து விடலாமில்லையா? இழுபறியாக இருந்து கொண்டிருப்பதைவிட இரண்டிலொன்றுக்கு வழி வகுத்து ஜெயில் சிங்கை ஜனாதிபதியாக்கியதற்காக அஸ்ஸாம் கிளர்ச்சியாளர்கள் மட்டுமின்றி அஸ்ஸாமில் குடியேறியுள்ள அந்நியரும் இந்திரா காந்திக்கு நன்றி சொல்ல வேண்டும்.

'பஞ்சாபிலேயே ஜெயில் சிங்கின் விரோதிகள் ரொம்பப் பேர் இருக்கிறார்கள். தமது சொந்த மாநிலத்திலேயே பிரபலமாக இல்லாத ஒருவரை அகில இந்தியாவுக்கும் ஜனாதிபதியாக்குவதா?' என்று பலர் மூக்கால் அழுகிறார்கள். அவர்கள் மூக்கைச் சிந்திக் கண்களைத் துடைத்துக் கொள்ளட்டும்! பஞ்சாபியரில் ஜெயில் சிங்கைப் பிடிக்காதவர்கள் "அப்பாடா நமக்கு இடைஞ்சலாக இருந்த ஆசாமிக்கு அதிகார பீடத்திலிருந்து கல்தா கொடுத்தாகி விட்டது! அவர் வெறும் ரப்பர் ஸ்டாம்ப் ஆகிவிட்டார்!" என்று மகிழலாம். ஜெயில் சிங்கைப் பிடித்திருக்கிறதென்றால் அவர்கள், "ஆகா பாரத நாட்டிலேயே மிக உன்னதமான பதவியையல்லவா பிரதமர் நமது ஜெயில் சிங்குக்கு அவரது விசுவாசத்தைக் கருதி பரிசாக அளித்திருக்கிறார்!" என்று களிப்படையலாம். மற்ற மாநிலத்தவர்களோ, "தகுதி, திறமை அறிவாற்றல் என்றெல்லாம் பாராமல் மாநிலவாரி பிரதிநிதித்துவம் ஜனாதிபதி பதவிக்கு ஆரம்பமாகி விட்டது; அடுத்த ஜனாதிபதியாக நமது மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் வர வாய்ப்பிருக்கிறது" என்றெண்ணி ஆனந்தமடையலாம்.

ஜெயில்சிங் மிகவும் பிரபலமடைந்தது அப்பு விவகாரத்தின்போதுதான். ஐ.ஏ.எஸ். பயிற்சிக் கூடத்தில் கே. பி. சிங் ஒரு சக மாணவியிடம் தகாத முறையில் நடந்து கொள்ள, கே. பி. சிங்குக்கு ஜெயில் சிங் பாதுகாப்புத் தர முயல, பயிற்சிக் கூடத்தின் தலைவர் அப்பாவி அப்பு ராஜிநாமாச் செய்ய நேர்ந்தது. "கே.பி. சிங் போலத் தவறு செய்பவர்களைத் திருத்த வேண்டுமே யன்றி தண்டிப்பதில் பயனில்லை" என்று வாதிட்டார் ஜெயில் சிங். எனவே அண்மையில் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் இருபது வயதான குமாரி தோளைக் கற்பழித்த ஹாஸ்டல் மாணவர்கள் தாங்கள் தண்டிக்கப்படக்கூடாது எனவும் திருத்தப்படவேண்டும் என்றும் புது ஜனாதிபதிக்கு மகஜர் சமர்ப்பித்துக் கொள்ளலாம். தூக்குத் தண்டனை பெற்ற கொலைகாரர்கள் கருணை மனு எழுதலாம். இன்னும் பிக்பாக்கெட்காரர்கள் முதல் கள்ளக் கடத்தல் – கறுப்புப் பணப் பேர்வழிகள் வரை அனைவரும் ஜெயில் சிங் ஜனாதிபதியாவதால் நம்பிக்கையும் தைரியமும் பெறலாம். யோக்கியமாக வாழ்க்கை

கி. ராஜேந்திரன்





நடத்துகிறவர்களோ 'தாங்கள் திருத்தப் பட முடியாவிட்டாலும் தண்டனைக்குள்ளா காமல் தப்பினாலே போதும்' என்ற அளவில் ஆறுதல் பெறலாம்!

உத்தரப் பிரதேசத்தில் வகுப்புக் கல வரங்கள் நடந்தபோது, 'ஹரிஜனங்களை மேல் வகுப்பினர் சுட்டுத் தள்ளுவதால் இனி ஹரிஜனங்களுக்கும் துப்பாக்கி லைசென்ஸ் தாராளமாக வழங்கப்படும்' என்று அறி வித்தார் உள்துறை அமைச்சர் ஜெயில் சிங்! இத்தகைய பொறுப்புணர்ச்சி மிக்க ஒருவர் ஜனாதிபதியாவதில் மத்தியப் பிரதேச கொள் ளைக்காரர்களுக்கு மஜா தான். அவர்களால் தொல்லைக்குள்ளாகிற கிராம மக்களோ தங்களுக்கும் மிஷின்கன்கள் சப்ளை செய்யப் படும் என்று எதிர்பார்த்துத் திருப்தியடைய லாம். திருடர்கள் சந்தோஷப்படலாம்; திருட்டுக் கொடுத்தவர்களோ 'நாமும் திருட அனுமதிக்கப்படுவோம்' என்று ஆவலுடன் காத்திருக்கலாம்.

ஜெயில் சிங் மீது சில குற்றச் சாட்டுக்கள் இருப்பதாகவும், குருதேவ் சிங் கமிஷன் அறிக்கையைத்தூசு தட்டிப் பிரித்துப்படித்துப் பார்த்தால் அவரைப் பற்றி பல வண்ட வாளங்கள் வெளியே வருமென்றும் சரண்சிங் குதிக்கிறார்.

அப்படி பார்க்கப் போனால் கமிஷன் அறிக் கைகளால் களங்கத்துக்கு உள்ளாகாத தலை வரே அநேகமாக இந்தியாவில் இல்லையே! எனவே கமிஷன் அறிக்கை பற்றி கவலைப் படாமல் குற்றச் சாட்டுக்களும் கமிஷன் அறிக்கையும் ஜனாதிபதியாவதற்கு அடிப் படைத் தகுதி என்றே இ. காங்கிரஸ் ஆட்சி சட்டங்களைத் திருத்தலாம்.

நாடாளு மன்றத்தில் ஹிட்லரைப் போற் றிப் பேசுகிற துணிவு ஜெயில் சிங் ஒரு வருக்குத்தான் இருந்தது. எனவே அவர் ஜனாதிபதியானதில் இங்குள்ள சர்வாதிகார சக்திகள் குதூகலிக்கலாம். ஜனநாயக சக்திகளோ, 'ஒரு முதல் தரமான சர்வாதி கார அணியை எதிர்க்க வேண்டிய கடமை யும் பொறுப்பும் நமக்குத்தானே கிடைத் திருக்கிறது' என்று தங்கள் பாக்கியத்தை எண்ணி மனம் குளிரலாம்.

இவ்வாறு எல்லாத் தரப்பினரும் பாராட் டிப் பரமானந்தம் அடையக் கூடியவொருவரைப் பிரதமர் வெகு சாமர்த்தியமாக ஜனாதிபதி யாக்கியிருக்கும்போது முணு முணுப்பு எதற்கு? முனகல்தான் எதற்கு?

எல்லோரும் சேர்ந்து போடுவோம்:

''ஜெயில்சிங்குக்கு ஜே!''

வாய்மையால் உயர்ந்தவர்!

● மதுரை பல்கலைக் கழக துணை வேந்தர் திரு வ. சு. ப. மாணிக்கம் கல்வித் துறைக்கு வந்ததில் சுவையான வரலாறு உண்டு.

பதினெட்டாவது வயதில் அவர் ரங்கூனில் ஒரு கடையில் வேலை செய்து வந்தார். அவ ரது முதலாளியைப் பார்க்க ஒரு நாள் ஒரு வியாபாரி வந்தார். ஆனால் அவரைப் பார்க்க விரும்பாத முதலாளி, மாணிக்கத்திடம் ''நான் இன்று வீட்டில் இல்லை என்று கூறி விடு'' என்றாராம்.

மாணிக்கத்துக்குப் பொய் கூற விருப்ப மில்லை. ''நான் பொய் கூறமாட்டேன். அதற்கு வேறு ஆள்பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறி அக்கடையை விட்டு விலகிவிட் டார். பின்பு கல்வித் துறையில் கவனம் செலுத்தி பி.ஓ. எல், எம். ஓ. எல், பி.லிட். முதலிய பட்டங்களைப் பெற்று இன்று துணை வேந்தராக உயர்ந்திருக்கிறார். 'வாய்மை' அவரை உயர்த்தியிருக்கிறது.

தமிழிசைச் சங்க விழாவில்
நீதிபதி மகராஜன் கூறியது.
கேட்டவர்: ''சங்கரிபுத்திரன்''




ரவிகுல திலகன்

செம்பியன்

25

கொள்ளிடத்தில் புதுவெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. சற்றுக் கலங்கலாக நிறம் மாறித் தோன்றினாலும் ஒரு நிறைவான கம்பீரத்துடன் இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு சென்றது. அதன் வேகத்திலும் சுழலிலும் சில மரக் கிளைகள் சிக்கித் தவித்து அடித்துச் செல்லப்பட்டன. இக்கரையிலிருந்து பார்த்தால் அக்கரை-தெரிந்தபோதிலும், நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் பரவி இருந்த ஆற்றுப் பரப்பும் அதன் வேகமும் ஓர் அச்சத்தைத் தருவதாக இருந்தது.

கரையோரம் நாணற்புதர்களும் மூங்கில் காடுகளும், பலவிதமான மரங்களும் அடர்ந்திருந்த வனாந்தரப் பிரதேசம். அப்பகுதி அரச குடும்பத்தினர் எப்போதாவது வேட்டையாட விரும்பினால் பயன்படுத்துவதற்கென ஒதுக்கப்பட்டிருந்தது. மான்கள் சில சற்றுத் தொலைவில் கூட்டமாய் மேய்ந்தன. தன் எழிலார்ந்த தோற்றத்துக்குச் சற்றும் பொருந்தாத ஓர் ஆண் மானின் கர்ண கடூர அழைப்பு. குரங்குகள் கும்பலாக மரத்துக்கு மரம் பாய, மயில்கள் சில மழையை எதிர்பார்த்துத் தோகை விரித்தாட, வெகு தூரத்தில் சில காட்டு யானைகள் தங்கள் வழக்கமான பாதையில் செல்வதை உணர்த்த, கிளிகளும், வேறு பறவைகளும் தாங்களும் இருப்பதைக் குரலெழுப்பிக் காட்ட இந்த இனிய சூழலினிடையே ஆற்றங் கரையோரமாக அரச குடும்பத்தினரும் நண்பர்களும் அமர்ந்திருந்தனர். வன போஜனத்துக்கு வந்திருந்த அவர்களுக்குக் குரங்குகள் போன்ற



மிருகங்களால் தொல்லை ஏற்படாதிருக்க ஆங்காங்கே சில வீரர்கள் காவல் நின்றனர்.


சித்திரான்னங்களை ருசித்தவாறே ''காலையில் என்ன காரியம்?'' என்றார் முத்தரையர்.

''வாக்களித்தபடியே பரிகள் பராமரிப்பு பற்றிய பல அம்சங்களைத் தங்களது லாயங்களை நிர்வகிக்கிற சிழ்வாயில் கேட்பாரிடம் விளக்கிக் கூறி வந்தான் என் நண்பன்'' என்றான் ஜெயசிங்கன். ''நாம் காலணி தரிப்பது போல் குதிரைக் குளம்புகளுக்கு இரும்பிலே செய்த லாடம் அணிவிக்கலாம் என்கிறான். அதனை எந்த வடிவில் எவ்விதம் தயாரிப்பது, எப்படிப் பொருத்துவது என்றெல்லாம் கற்றுத் தந்தான். பிடரியிலும் உடலிலும் உரோமம் ஓர் அளவுக்கு மேல் வளரும்போது வெட்டி விட வேண்டுமாம். குதிரைகளைக் குளிப்பாட்டித் தினம் ஒரு முறையேனும் வைக்கோலால் உடலை உருவி விடுவது போல் தேய்த்து விட வேண்டுமாம். எந்த வகை உணவு எந்த அளவுக்குத் தர வேண்டும் எவ்விதம் தேகப்பயிற்சி அளிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறான்.''

''திவாகரா!'' என்று அரசர் விளித்ததுமே,

''பயனுள்ள யோசனைகள் எனப் புரிந்து கொண்டேன் பெரியப்பா'' என்றான். ''குதிரைகள் நோயுற்றதற்கான அறிகுறிகளைக் கவனித்து அதற்கேற்ப எந்த நோய்க்கு எந்த மூலிகை மருந்து தரலாம் என்றும் இந்த அராபியன் விளக்கினான். நமது அரண்மனை வைத்தியர்கள் கேட்டுக் கொண்டார்கள்.''

''சரியாய்ப் போச்சு! நாளை நமக்கு ஏதாவது உடம்புக்கு வந்தால் குதிரை மருந்தை நமக்குத் தந்துவிடப் போகிறார், அமிர்தலிங்கம்!''



'கலீர்' என்ற சிரிப்பொலியில் தானும் கலந்துகொண்ட ஜெயசிங்கன், அது ஓய்ந்ததும், ''அரசே! குதிரைகள் இவன் கற்றுத் தந்தபடி பராமரிக்கப்பட்டால் அவற்றுக்கு நோயே வராது. தங்கள் அரசவையிலும் அடிக்கடி வைத்தியருக்கு வேலை வைப்பவர் யாருமில்லையே'' என்றான்.

''இம்மாதிரி வனபோஜனம் என்ற பெயரில் நேர்த்தியான உணவு வகைகளை அளவுக்கதிகமாக உண்ணும்போது மருத்துவரை அழைக்க அவசியம் வந்தாலும் வந்து விடும்'' என்று ஏப்பத்தை மறைத்துக்கொண்டே மொழிந்த முத்தரையர், ஒரு கொன்றை மரத்தடியில் வெண் பட்டை விரித்துப் படுத்தார்.

வேட்டையில் கொடிய விலங்குகள் ஏதும் சிக்குமா என்று பார்க்க திவாகரனும் அவன் நண்பர்களும் புறப்பட்டார்கள். தன் தோழிகளுடன் அம்மானை ஆடத் தொடங்கிய உத்தமசீலி அதில் நாட்டமின்றி ஜெயசிங்கனும் அராபியனும் இருந்த பக்கமாகத் திரும்பினாள். ''நீங்கள் போகவில்லையா?''

''இவன் நாட்டில் இது போன்ற ஆறோ, பசுமையான வயல்களோ, வனங்களோ அதில் வாழும் பலவித விலங்குகளோ கிடையாது. எனவே இவனுக்கு வேட்டையாடிப் பழக்கமுமில்லை.''

''அதிசயமாய் இருக்கிறதே... ஆமாம், உங்கள் நாட்டைப் பற்றிக் கதை கதையாய்ச் சொல்ல முடியும் என்றீர்களே! அங்கு இவையெல்லாம் இல்லை எனில் வேறு என்னதான் இருக்கிறது?''

அராபியன் தன் நாட்டைப் பற்றி ஜெயசிங்கனின் உதவியுடன் எடுத்துரைத்தான். கண்ணுக்கெட்டிய தூரம் மணல் கடல்; பாலைவனத்திலும் திசை கண்டு பிடித்துச் செல்கின்ற ஆற்றல் உள்ள மக்கள்; அவர்களுக்கு உதவும் குதிரைகள், ஒட்டகங்கள்; இடையிடையே அபூர்வமாகத் தென்படும் நீர் நிலை; அதைச் சுற்றிலும் பேரீச்ச மரங்கள்; அவற்றின் பழங்களை உண்டபின் உறங்க அமைக்கப்படும் கூடார வீடுகள்; பகலில் தகிக்கும் வெய்யில்; இரவில் நடுக்கும் குளிர்; மணற் புயல், அதிலிருந்து தப்ப உதவும் நூதன உடை.....

அவள் வியப்பும் ஆர்வமுமாகக் கேட்க அவன் உற்சாகம் அதிகரித்தது.

கடல் பயணங்கள்... கடல் கொள்ளைக்காரர்கள்... புயல் வீசும்போது பனை மர உயரத்துக்கு எழும் அலைகள்...

''அடேயப்பா! இத்தனை கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு வாழ்க்கையை ஓட்டுகிறவர்கள் மாவீரர்கள்தான்!''

''உம்... ஆனால் உங்களுக்குத்தான் வீரம் அவ்வளவு முக்கியமில்லையே!''

''அப்படி எந்தப் புத்திசாலி உங்களுக்குச் சொன்னான்?''

''விஜயாலயன் தூது தங்களது ஏளனத்துக்கு உள்ளானதால் சோழ நாட்டில் நிலவும் கருத்து இது.''

நாகம் போல் நிமிர்ந்தாள். ''எனக்குக் கோபமூட்டுகிறீர்களா, விளையாடுகிறீர்களா?''

''இரண்டுமில்லை; சோழநாட்டில் இவன் கேள்விப்பட்ட ஒரு செய்திக்கு இங்கு விளக்கம் தேடுகிறான்!''

''விஜயாலயன் வீரத்தை நான் மெச்சலாம்; ஆனால் அதற்காக அவரை நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் என்ன?''

''அவனை அழகற்றவன் என்பதற்காகத்தானே ஒதுக்கினீர்கள்? அவன் வீரத்தில் நீங்கள் அழகைக் காணவில்லையா?''

''வீரம் ஓர் அழகுதான், மறுக்கவில்லை. ஆனால் அதற்காக மட்டும் ஒருத்தி ஒருவனுக்கு மாலையிட முடியுமா? அப்படிப் பார்த்தால் விஜயாலயனைத் தங்கள் உயிர் கொடுத்துக் காப்பதாகச் சபதம் எடுத்துள்ள வேளக்காரப் படையினர் விஜயாலயனை விடவும் வீரர்கள்! அவர்களில் ஒருவனுக்கு நான் மனைவியாகலாமே!''

உணர்ச்சிகளை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான் விஜயாலயன். ஜெயசிங்கன்மூலமாக உரையாடல் தொடர்ந்தது:

''தாங்கள் கணவனாக வரிக்கப் போகிறவனிடம் என்னதான் எதிர்பார்க்கிறீர்கள்?''

''அழகும் அறிவும் தவிர, அன்பு, வீரம், சாந்தம், அடக்கம் போன்ற செழுமிய குணநலன்கள் அனைத்தையும்தான். அவ்விதம் நான் எதிர்பார்ப்பதில் என்ன தவறு? ஏன், அந்த விஜயாலயனே என் அழகைப் புலவர் ஒருவர் வர்ணிக்கக் கேட்டுத்தானே என் கரம் பற்ற விரும்பித் தூது அனுப்பினான்? என் கால் ஊனமாகவோ, கை முடமாகவோ இருந்தால் என்னை மணக்க ஆசைப்படுவானா? அவ்வாறிருக்க நான் அவனை அழகற்றவன் என்பதால் மறுக்கும்போதுமட்டும் 'கர்வக்காரி, பிடிவாதக்காரி, வீரத்தின் அழகை உணராதவள்' என்றெல்லாம் ஏன் பழி சுமத்துகிறார்கள்?''

''சோழ நாட்டுக்கு மறுபடியும் போனால் விஜயாலயனைக் கேட்டுத்தான் இதற்குப் பதில் பெற வேண்டும்.''

போலீஸ்காரர்: ''ரெண்டு பக்கமும் தான் நடைபாதை இருக்கே... எதுக்குப்பா நடுரோட்டில் நடந்துக்கிட்டிருக்கே?''

அவன்: ''நடைபாதை வியாபாரிகள் நிறையப்பேருக்கு நான் கடன் தரணும் வார்!''

-உ. ராஜாஜி




சுஜாதா
விடிவதற்குள் வா!
ஆகஸ்டு 1ந் தேதி கல்கி
ஆண்டு மலரில்
ஆரம்பம்

''அவனை என்ன கேட்பது? எனக்கே தெரியும். விஜயாலயன் விரும்பியது என்னை அல்ல; என் அழகை ஆளத்தான் ஆசைப் படுகிறான்! அதற்கு நான் சம்மதிக்காதபோது தனது குடிபடைகளிடையே தான் ஏளனத் துக்கு உள்ளாகக் கூடாது என்பதற்காக என் னைப் பற்றி அவதூறுகளைப் பரப்புகிறான். அவனுடைய தன்மானம் காப்பாற்றப்பட்டு விட்டது!''

''அப்படியானால் அவனை நீங்கள் மணந்து கொள்கிற வாய்ப்பே இல்லை என்று சொல் லுங்கள்!''

''ஹூம்! அவனுக்குத்தான் நான் மாலை யிட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படு மானால் அதைவிட இதோ இந்த அராபிய னுடன் ஓடிப்போய் கப்பலேறி அவன் நாட் டுக்கே சென்றுவிடவும் துணிவேன்!''

''ஆபத்துக்களையும் துன்பங்களையும் ஏற்று என்னுடன் தாங்கள் இணைந்து வருவதானால் அதை என் பெரும் பேறாகக் கருதி விஜயா லயனையும் தங்கள் பெரியப்பாவையும் பகைத் துக்கொள்ளவும் சித்தமாக இருக்கிறேன்.''

''உங்களிடம் எனக்குக் காதல் மலரு- மானால் நான் பெரியப்பாவையும் விஜயா லயனையும் மட்டுமல்ல. அகில உலகையும் விரோதித்துக் கொள்ளத் தயங்க மாட் டேன்! ஆனால் நல்ல வேளை அதற்கு அவசியம் நேரப் போவதில்லை.''

அராபியன் மனம் கனத்தது. ஏமாற்ற மும் வேதனையும் கோபமும் அங்கு பூகம்ப மாக அதிர்ந்தன.

''எல்லோருமே காதல் திருமணம் செய்து கொள்கிறார்களா? கல்யாணம் ஆன பிறகு பழகப் பழக ஆழ்ந்த காதல் மலருவ தில்லையா?''

''அது எனக்குப் பொருந்துமா என்பதை விஜயாலயனை மணந்து கொண்டு நான் சோதித்துப் பார்க்க விரும்பவில்லை... அது சரி, நீங்கள் குதிரை விற்க வந்தீர்களா? பழையாறை இளவரசருக்காக வாதாட வந்தீர்களா?''

''இங்கு வருவதற்கு முன் நந்திபுரியில் விஜயாலயனுக்குச் சில குதிரைகளை விற்று விட்டுத்தான் வந்தேன். அங்கு செவியுற்றது தொடர்பாக இங்கு வினவினேன். அதுவும் பேச்சு இயல்பாக அந்தத் திசையில் திரும் பியதால் கேட்க நேர்ந்தது.''

''தங்களுக்குப் பிடித்தமான விஷயம் பற் றிப் பேசுவோமே'' என்றான் ஜெயசிங்கன். ''நீங்கள் தலைமை தாங்கி நடத்தித் தருவ தாக வாக்களித்தால் தஞ்சையில் ஒரு கலை விழாவுக்கு நான் முழுப் பொறுப்பு ஏற்று நடத்துகிறேன்!''

''அதைச் செய்யுங்கள். என் மனம் குதூகலிக்கும்'' என்றாள் உத்தமசீலி. ''பெரி யப்பா அனுமதி கிட்டினால் அவசியம் வரு கிறேன்.''

''எதற்கு என் அனுமதி?'' என்று கேட்ட வாறே எழுந்து அமர்ந்தார் முத்தரையர். புரிந்து கொண்டதும், ''அழைப்பு எனக்குக் கிடையாதா?'' என்றார்.

''தாங்களும் வரமுடியுமானால் அது என் பாக்கியமல்லவா? அவ்வளவு உயர்ந்த பெரு மையைத் தாங்கள் எனக்கு அளிப்பது உங்கள் கௌரவத்துக்கு உகந்ததாயிராதோ என்ற அச்சத்தால் உத்தமசீலியை அணுகினேன்.''

''எப்படியோ என்னை வரவேண்டாம் என்று மறைமுகமாகக் கூறி ஒதுக்குகிறாய்! இந்திர விழாவில் இந்தக் கிழவனுக்கு என்ன வேலை?''

''பிரபோ!.....''

''பெரியப்பா விளையாட்டாகச் சீண்டு கிறார். உங்கள் மனம் தெரியாதா அவ ருக்கு?'' என்றாள் உத்தமசீலி.

''ஜெயசிங்கா! கலை விழாவுக்கு முன்ன தாக உனக்கு ஒரு முக்கிய வேலை இருக்கிறது. பாண்டியனின் கோரிக்கையை ஏற்பதென்று நான் தீர்மானித்து விட்டேன். நேற்று பேச்சு வார்த்தைகள் நடந்தபோது நீ கூட இருந்த காரணத்தால் இந்த வியாபாரத்தை நீயே பொறுப்பேற்று நடத்தி முடிப்பது தான் நல்லது.''

''சித்தம் அரசே!''

''பெரியப்பா! கலை விழா....''

''ஆகட்டும் மகனே. உன்னையும் திவா கரனையும் ஒரு பாதுகாப்புப் படையுடன்

ஆன்றோர் வழி



மற்ற வஸ்துக்களைக் கொடுத்துவிட்டு. 'நான் கொடுத்தேன்' என்ற எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டே இருந்தால் இந்த அகங்காரமானது தியாகத்தாலும் தானத்தாலும் கிடைக்கிற ஆத்மாவிருத் தியை அப்படியே ஏப்பம் விட்டுவிடும். தியா கம் பண்ண வேண்டும். அதைவிட முக்கிய மாகத் தியாகம் பண்ணினேன் என்ற எண் ணத்தையும் தியாகம் பண்ணிவிட வேண்டும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராசாரிய சுவாமிகள்

இளமைக்கு நான் சொல்ல விரும்பும் அறி வுரை மூன்றே வார்த்தைகளில் அடங்கும். உழையுங்கள்! உழையுங்கள்! உழையுங்கள்!

—ஆட்டோவான் பிஸ்மார்க்

உபயோகமற்ற வாழ்க்கை அகால மர ணத்துக்குச் சமம்! —கத்தே

சந்தனக் காட்டைக் கடந்து மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வரு கிறதே, தென்றல், அது போன்றது வாலிபம்.

—அறிஞர் அண்ணா

அனுப்பி வைக்கிறேன்'' என்ற மன்னர், தாம் தலைநகர் திரும்புவதற்கு அறிகுறியாகக் கொம்பு ஊதப் பணித்தார்.

கோட்டை மதிலை அவர்கள் அணுகும் போது ஓர் அமளி.

''விலகுங்கள்! விலகுங்கள்! மன்னர் வருகிறார், விலகுங்கள்!'' என்று வாசலை அடைத்து நின்ற கூட்டத்தைக் காவலர் ஒதுக்கவும்,

''ஏனய்யா பெண்பிள்ளை என்று கூடப் பார்க்காமல் இப்படிப் பிடித்துத் தள்ளுகிறீர்கள்?'' என்று குவளை கூச்சலிட்டாள்.

வேண்டுமென்றே அவள் குரலை உயர்த்த, அது கேட்டு முத்தரையர், ''திவாகரா! என்ன அசம்பாவிதம் இது? விசாரி'' என்றார்.

'இங்கே எதற்காக வந்தீர்கள்?' என்பது போல் விஜயாலயன் குவளையையும் சீனனையும் அவர்களுடன் வந்த பிறரையும் பார்த்தான். அதில் கோபத்தைக் கண்டு மற்றவர்கள் குறுகினாலும் குவளை துணிவுடன் ஏறிட்டு நோக்கினாள்.

''நாடோடிகள், நகருக்குள் புக அனுமதி கோருகிறார்கள். அந்தி நேரமாகிவிட்டதால் காலையில் வரச் சொன்னேன்'' என்றான் திருவாசல் முதலி.

''இருள் சூழ்வதால்தானே இராத் தங்க நகரில் இடம் தேடுகிறோம்? 'விடிந்த பின் வா' என்று விரட்டுவது என்ன நியாயமோ?'' என்றபோது குவளையின் கண்கள் அராபியனை விட்டகன்று அவனுக்கு அருகில் அவனுக்கு மிகவும் பிரியமான வெண் புரவியைத் தனதாக்கிக் கொண்டு ஆரோகணித்திருந்த உத்தமசீலிமீது நிலைத்தன.


'ஆகா! இவளை அடைவதற்குச் சோழ இளவரசர் என்ன பாடு படுகிறார்' என்று எண்ணியபோது அவள் நெஞ்சத்தில் தீக் கங்குகள் சொரிந்தன!

''ராமு!... தொலைவில் உள்ளது டில்லியா சந்திரனா?''

''டில்லி டீச்சர்!''

''எப்படி சொல்லறே?''

''தினமும் இரவில் சந்திரனை நம்மால் பார்க்க முடியுது. ஆனா டில்லியைப்பார்க்க முடியலையே டீச்சர்!'' -நாகுவேலன்



''நாடோடிகளுக்கு நகரமென்ன, விடுதி என்ன?'' என்றான் திவாகரன்.

''நாங்கள் வெட்ட வெளியிலும் படுப்போம், காடு மலைகளிலும் வாழ்வோம். அதுவா கவலை? அயலூர்க்காரர்களையும் கடல் கடந்து வந்தவர்களையும் முத்தரையர் ஆட்சி எப்படி நடத்துகிறது என்பதல்லவா கேள்வி?'' என்ற குவளை உத்தமசீலியிடமிருந்து சிரமப்பட்டுப் பார்வையை அகற்றி முத்தரையரை நோக்கினாள். ''ஒரு பணக்கார அராபியனுக்குக் காட்டப்படும் மரியாதை ஓர் ஏழைச் சீனனுக்கு இங்கு கிடையாதா?''

வாக்குவாதத்தை வளர விடுவது தனக்கு இழுக்காகவே முடியும் என்று உணர்ந்த முத்தரையர், இடைபுகுந்து, ''இவர்களை நகருக்குள் அனுமதியுங்கள்'' என்று உத்தரவு பிறப்பித்துவிட்டு மேலே சென்றார். உத்தமசீலி அவரைப் பின்தொடர முற்பட்டபோது, அவளை வெறித்து நோக்கிய குவளை, ''அம்மணீ! தனது விலை மதிக்க முடியாத வெண் புரவியை இந்நாட்டின் கலையரசிக்கு இந்த அராபியன் நேற்றுப் பரிசளித்ததாக இங்கு கோட்டைக் காவலர்கள் பேசிக் கொண்டார்கள். இந்தக் குதிரையை விடவும் எங்கள் சீனன் பலசாலி என்று நிரூபித்தால் என்ன தருவீர்கள்?'' என்று கேட்டாள்.

அவள் துணிவைக் கண்டும், வினவைக் கேட்டும் வியப்புற்ற உத்தமசீலி, கடிவாளத்தை இழுத்துப் பிடித்து, ''எப்படி நிரூபிப்பாய்?'' என்று புருவங்களை உயர்த்திப் புன்முறுவலுடன் பதில் கேள்வி எழுப்பினாள்.

''தேரின் ஒரு புறம் இந்தக் குதிரையையும் மறுபுறம் எங்கள் சீனனையும் பூட்டுவோம். குதிரை வென்றால் மாமல்லனை இந்தச் சீனன் உங்கள் அடிமை! சீனன் வென்றால் உங்கள் வெண்புரவி எனக்குச் சொந்தம்!''

''அப்படியே ஆகட்டும்'' என்றாள் உத்தமசீலி. ''நாளைக் காலை அரண்மனை விளாகத்துக்கு நீங்கள் வரலாம்!'' மாறாத மென்னகையுடன் குதிரையைச் செலுத்தியவள் ''இந்த நாடோடிக் கூட்டத்தினர் வித்தைகள் காட்டி வயிறு வளர்ப்பவர்கள் போலும்! ஜெயசிங்கரே! நாளை தாங்கள் தஞ்சை திரும்பு முன் இறுதியாக ஒருசிறு கேளிக்கை!'' என்றாள்.

மன்னர் பரிவாரத்துடன் தானும் முன்னேறியபோதிலும் கோபம் அடங்காதவளைத் திரும்பிப் பார்த்து விழித்தான் விஜயாலயன். கருங்கல்லில் செதுக்கி உயிர் பெற்று வந்த மோகினிச் சிலையாகக் குறும்புச் சிரிப்புடன் அவனை நோக்கி நின்றாள் குவளை.

திவாகரன் பின்தங்கி, வாயில் காப்போரில் ஒருவனை அருகில் அழைத்து அவன் காதோடு குவளையைச் சுட்டிக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

விஜயாலயனின் ஒரு விழிப் பார்வையில் இரு காட்சிகளுமே ஆழப் பதிந்து கலக்கமளித்தன.

(தொடரும்)


எடுத்தாள் சபதம்!
அந்நிலையில் அவளைக் கண்டு
தன்னிலை மறந்த மன்னவன் அவன்
முன்னிலையில் பரவசம் பொங்க
"இந்நிலை அளித்த சாரதா'ஸை
எந்நிலையிலும் மறவேன்" என்று
ஏந்திழையாள் எடுத்தாள் சபதம்.
கண்ணைக் கவரும் காஞ்சிபுரம் பட்டு,
பனாரஸ் தன்சோய், ஜரிகை வேலைப்பாடு
அமைந்த ஷிபான் மற்றும் பலரக
புடவைகள் ஏராளமான டிசைன்களில்
மனதை கவரும் வண்ணங்களில்
ரம்ஜான் பண்டிகைக்கு ஏற்றவாறு
வந்துள்ளன.
சாரதா'ஸ்
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
சாரதா'ஸ் சென்னையிலும், திருச்சியிலும் மட்டுமே. வேறெங்கும் கிளைகள் கிடையாது.

வெள்ளமதம் பொழியும் வேழம்

கீரன்

விநாயகன் என்ற சொல்லுக்குத் தனக்குத் தலைவன் இல்லாதவன் என்று பொருள். தானே தலைவன்.

விநாயகருக்குக் கழுத்து வரை மிருக உடலும், இடுப்பு வரை தேவ உடலும், அதன் கீழ் பூத உடலும் அமைந்திருப்பதால் அவர் உயர்திணை, அஃறிணை இரண்டுக்கும் பொதுவானவர்.

ஒற்றைக் கொம்பிருப்பதால் ஆண் யானையாகவும் பிறிதொரு கொம்பு இன்மையால் பெண் யானையாகவும் இருப்பதால் அவன் ஆண், பெண் அனைவரும் வணங்கப் பொதுவானவன்.

உருவத்தால் யானையாகத் தோன்றினாலும் தான் யானை அல்ல, யானைகளை அடக்கும் ஒருவன் என்பதைக் கையிலுள்ள பாச அங்குசங்கள் நினைவுபடுத்துகின்றன.

விநாயகருடைய முகம் பிரணவ எழுத்து வடிவமாயிருப்பது அவர் ''மறை மொழி முதல்'' என்னும் உண்மையைக் காட்டுகிறது. கணபதி உபநிஷத் விநாயகரை ''நீதான் பிரமன், விஷ்ணு, உருத்திரன், இந்திரன், அக்கினி, வாயு, சந்திரன், ஓம்'' என்று பேசுகிறது.

விநாயகரை வணங்குவதால் திருவாக்கும், செய்கருமமும் கைகூடும், செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும். ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக் காதலால் கூப்புவர் தம்கை.

கணபதி வழிபாடு புத்தர் காலம் முதலே மகாயான பௌத்தர்களால் கொண்டாடப் பட்டு வந்துள்ளது. ''கணபதி ஹ்ருதயம்'' என்ற மந்திரத்தை அவர்கள் செபிக்கிறார்கள். அவர்கள் வழியாக நேபாளம், திபெத், சீனா, மங்கோலியா, ஜப்பான் தேசங்களிலும் கணபதி வழிபாடு பரவியுள்ளது.

விநாயகருடைய கும்பம் ஏந்திய திருக்கரம் ஆக்கும் தொழிலையும், மோதகம் ஏந்திய திருக்கரம் காத்தல் தொழிலையும் அங்குசம் ஏந்திய திருக்கரம் அழித்தல் தொழிலையும் பாசம் ஏந்திய திருக்கரம் மறைத்தல் தொழிலையும், தந்தம் ஏந்திய திருக்கரம் அருளல் தொழிலையும் சுட்டுவன. எனவே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலுக்கும் உரிய நாயகன்.

விநாயகருடைய செவி, தாழ்ந்த செவி; முறம் போன்றது. அதனால் அவர் ''சூர்ப்ப கர்ணர்''. பிறவிக் கடலில் வீழ்ந்த நாம் அவர் திருவடியைப் பற்றிக் கொண்டால் முக்திக் கரை சேர்வதற்குத் தீமைக் காற்றை எறிந்து செல்ல அது உதவுகிறது.

தம்மை வழிபடுவோருக்குக் காரிய சித்தியும், அதற்குரிய புத்தியும் அருளுபவர் ஆதலின், சித்தி-புத்தி என்ற இரு பண்புகளை மனைவியராக உடையவர். அடியார்களின் இடையூற்றை நீக்கும் அவர் வல்லபமே. தேவியாகிய வல்லபை. புராணத்தில் சித்தியும் புத்தியும் பிரம்மதேவன் புதல்வியர்; வல்லபை மரீசி முனிவரது புதல்வி.

விநாயகரின் மொத்த வடிவங்கள் முப்பத்தி இரண்டாகும்.

காரியங்களைச் செம்மையுற முடித்தற்கு மட்டுமின்றி மிக எளிமையாக ஆன்ம லாபம் பெற அருள்பவரும் விநாயகரே.

வண்டுகளுக்குத் தமிழில் வேறு பெயர் ''அறுகால்'' என்பது. ஆறு கால்களையுடையன வண்டுகள். வண்டுகள், யானையின் மத நீரை விரும்பியுண்ணும். அதனை உண்டால் அவை நீண்ட காலம் வாழும். ஒரு வண்டு யானையின் மதநீரை விரும்பி உண்ண வேண்டும் என்றால் யானை அனுமதிக்காதே! யானையின் மத்தகத்தில் அமர்ந்து வண்டு மதநீரை உறிஞ்ச யானை அனுமதிக்காது. அது தும்பிக் கையை ஆட்டிக்கொண்டே இருக்கும். யானை எப்படி இருந்தால் வண்டு மதநீரை உறிஞ்ச முடியும்? யானையை ஒரு கூடத்தில் கட்டிப் போட வேண்டும். கட்டப்பட்டிருக்கும் தூண் வலுவுள்ளதாக இருக்க வேண்டும். கட்டப் பயன்படும் சங்கிலியும் உறுதியாக இருக்க வேண்டும். யானையைக் கூடத்தில் கட்டி வைத்துவிடுவதாலேயே வண்டு மதநீரை அருந்திவிட முடியாது. அது துதிக்கையை ஆட்டிக் கொண்டே இருக்கும். அப்போது யானை துதிக்கையை ஆட்டா வகையில் அதற்கு வெல்லம், அரிசி முதலியவற்றைப் போட வேண்டும். அது அவற்றை உண்ணும் போது வண்டு மதநீரை அருந்தி வாழலாம்.

வண்டுக்கு ''அறுகால்'' என்ற பெயர் வழங்குவது போல யோக நூலில் மனிதனுக்கும் அறுகால் என்றே பெயர். காரணம் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு நிலைகளை உடையவன் மனிதன். இந்த மனித வண்டு நீண்ட காலம் வாழ என்ன செய்ய வேண்டும்?

தன்னுடைய உள்ளம் என்னும் கூடத்தில் முயற்சி என்னும் தூணை நட்டு, பக்தி என்னும் சங்கிலியால் விநாயகர் என்ற யானையைக் கட்ட வேண்டும். பாச மயக்க உணர்வுகளை அவருக்கு உணவாகத் தர வேண்டும். அதனால் விநாயகப் பெருமான் கருணை என்னும் வெள்ள மதம் பொழிவார். நாம் அருந்தி வாழலாம் என்கிறது திருவிளையாடல் புராணம்.

''உள்ளம் எனும் கூடத்தில் ஊக்கமெனும்
தறி நிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகண்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை என்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வர வினைகள் தீர்ப்பாம்.


இலக்கியத்தில் இறையுணர்வு



நோன்பு

தெருவில் ஆர்ப்பாட்டம்.

அறையில் உட்கார்ந்து குர்ஆன் ஓதிக்-கொண்டிருந்த அப்துல் காதிர் ஆலிம் சாஹிபு ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தார். யாரையோ அடித்துத் துவைக்கும் வேகத்தில் ஏழெட்டுப் பேர் கைலியை மடித்துக் கட்டிக் கொண்டு. கம்புகளைச் சுழற்றியபடி ஓட்டமும் நடையுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஆலிம் சாஹிபுக்கு வியப்பாக இருந்தது. ரம்சான் நோன்புக் காலத்தில், அதுவும் கொளுத்தித் தீய்க்கிற முற்பகல் நேர வெய்யலில் இவர்கள் கச்சை கட்டிக் கொண்டு போகிறார்களே, எதற்காக?

புரியவில்லை அவருக்கு. நோன்புக் காலக் களைப்பைச் சட்டை செய்யாமல் குர்ஆனை மூடிவைத்துவிட்டு ஆலிம் சாஹிபு வாசலுக்கு வந்தார்.

இரண்டாவது அணி அதே வேகத்தில் இப்பொழுது வந்து கொண்டிருந்ததைப் பார்த்தார் அவர்.

ஆலிம் சாஹிபைப் பார்த்ததும் வந்தவர்களின் குரல் இறங்கியது. அவர்மீது அத்தனை மரியாதை... ஒருவித பயபக்தி.

''என்ன ஆச்சு? எங்கே போறீங்க?''

மெதுவாகத்தான் அவர் கேட்டார்.

முன்னால் வந்த ஒரு விடலைப் பையன், ''ஊர் கட்டுமானத்தை மீறி மீரான் இன்னிக்குக் கடை திறந்து வெச்சிருக்கான்!'' என்று ஆர்ப்பரித்தான்.

''அதுக்காக.....''

''ஆளை உண்டு இல்லேன்னு பண்ணிடப் போறோம்!''

எதுவும் செய்வார்கள் போல் ஆவேசம்.

அவர்களைப் போகச் சொல்லிச் சமிக்ஞை கொடுத்தார் ஆலிம் சாஹிபு. மறு நிமிஷமே ஏன் அப்படிச் சொன்னோம் என்று ஆகிவிட்டது அவருக்கு. தடுத்து நிறுத்த வேண்டும் போல ஒரு பரபரப்பு.

நோன்புக் காலமான முப்பது நாட்களும் ஊருக்குள் இருக்கும் தேனீர், சாப்பாட்டுக் கடைகள் பகல் நேரத்தில் திறந்து வைக்கப் படக் கூடாது. மாலை ஆறு மணிக்குப் பிறகு வியாபாரம் செய்யலாம். — இது ஊர் கட்டுப்பாடு. வெகு காலமாகவே நடைமுறையில் இருந்து வருகிறது இந்த விதி. யாரும் இந்த விதியை மீறியதில்லை.

இன்றைக்கு அத்துமீறல் நடந்திருக்கிறது.

மீரான் கடையைத் திறந்து வைத்திருக்கிறானாம். வியாபாரம் நடக்கிறதாம்!

மீரானுக்கு இவ்வளவு துணிச்சலா?

பிழைப்புக்காகச் சில வருஷங்களுக்கு முன் வெளியூரிலிருந்து வந்தவன். குடும்பம் ஏற்பட்டு விட்டது. ஆலிம் சாஹிபிடம் அளவு கடந்த மரியாதை அவனுக்கு உண்டு.

அவர் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் ஊரில் மறு பேச்சே கிடையாது. பெயர் தான் ஆலிம் சாஹிபு. ஆனால் பெருந்தனக்காரர். பரம்பரை பரம்பரையாக மார்க்க ஞானங்களில் ஊறிப்போன ஆலிம் குடும்பம். அத்துடன் நெடுங்காலமாகவே வர்த்தகத் தொடர்பும் உண்டு. ஊருக்கு வாரிக் கொடுத்த குடும்பம். ஆலிம் சாஹிபும் அப்படித்தான் இருந்து வருகிறார். தர்க்கம், தகராறு, வம்பு, வழக்கு என்றால் அவரிடம் தான் யோசனை பெற மக்கள் வருகிறார்கள்.

மீரானுக்குப் பல சமயங்களில் அவர் உதவியிருக்கிறார். அவன் இந்த ஊருக்கு வந்த புதிதில் ஒரு டீக்கடை போட விரும்பிய போது ஆலிம் சாஹிப்பிடம் வந்து நின்றான். அவருடைய ஆசியுடன் கொஞ்சம் தொகை கொடுத்தால் வியாபாரம் விருத்தியானதும் திருப்பித் தருவதாகச் சொன்னான்.

காதும் காதும் வைத்த மாதிரி ஆலிம் சாஹிபு உதவினார். ஆறு மாதத்துக்குப் பிறகு மீரான் தொகையுடன் வந்து நின்றபோது அவனுக்குரிய பணம் என்று சொல்லி வாங்கிக்கொள்ள மறுத்து விட்டார்.

இரண்டு வருஷத்துக்கு முன்னால் ஒரு நாள் மீரான் அவரைப் பார்க்க வந்தான். பணிவோடு 'சலாம்' சொன்னான். பதில் சொன்னார் ஆலிம் சாஹிபு. பையனிடம் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்ததும் உணர்ந்து கொண்டார். எதற்காக வந்து நிற்கிறான் என்பதை உள்ளோட்டமாகப் புரிந்து கொண்டு விட்டார்.

அவர் நினைத்ததையே மீரான் சொன்னான்.

''எனக்கு நிக்காஹ் ஏற்பாடாகியிருக்கு... பள்ளிவாசல்லியே ரொம்ப எளிமையா கலி

யாணத்தை வச்சிக்கலாம்னு நினைச்சிருக்கேன். பெரியவங்க நீங்க வந்திருந்து முடிச்சி வைக்கணும்.'' திருமண நாளையும் நேரத்தையும் மீரான் சொன்னான். வருவதாக ஆலிம் சாகிப் ஒப்புக்கொண்டார்.

துணி மணி எடுத்தாச்சா?'' – அவர் விசாரித்தார்.

''ஏதோ கொஞ்சம் நஞ்சம்!'' என்று மீரான் இழுத்தபோது ஆலிம் சாகிபு தம் மனைவி கதீஜாவைக் கூப்பிட்டு இரண்டு வார்த்தை பேசினார். அந்த அம்மாள் மறு நிமிஷம் இருநூறு ரூபாய் பணத்தைக் கொண்டுவந்து நீட்டியதைப் பார்த்து மீரான் மருண்டு போனான்.

''என்ன யோசிக்கிறே? கலியாணச் செலவுக்கு உதவும். வாங்கிக்க'' என்றார் ஆலிம் சாகிபு.

மீரான் மறுக்கவில்லை.

''அப்ப தாங்கள் கலியாண மஜ்லிசுக்கு வந்து....''

''இன்ஷா அல்லா... நேரத்துக்கு வந்திருவேன். நீ போயிட்டு வா...''



பள்ளிவாசலில் சில நாட்களுக்குப் பிறகு நடந்த திருமண ஒப்பந்தத்தின்போது வந்திருந்த அனைவருக்கும் தேனீர் வழங்கும் செலவை ஆலிம் சாகிபுதான் ஏற்றுக் கொண்டார்.

அவ்வப்போது மீரானைப் பற்றி ஆலிம் சாகிபு விசாரித்துக் கொள்வார். டீக்கடை வைத்திருந்தாலும் கூட மீரான் முப்பது நோன்பையும் விடாமல் நோற்கிறான் என்று சொல்வார்கள். சுடுமான வரை ஐந்து நேரமும் அவன் தொழுது வருகிறான் என்று கேள்விப்படும்போது ஆலிம் சாகிபு மகிழ்ந்து போவார்.

அந்த மீரானா அக்கிரமம் செய்திருக்கிறான்?

அப்துல் காதிர் ஆலிம் சாகிபு சங்கடப்பட்டார்.

புனிதமான நோன்புக் காலத்தில் இப்படி ஓர் அசம்பாவிதமா?

ஆத்திரத்தோடு மீரானைத் தாக்குவதற்குப் போன கும்பல் இதுவரை என்ன செய்திருக்குமோ?

ஜே.எம்.சாலி

ஆலிம் சாகிபுக்கு மனம் கேட்கவில்லை.

உபவாசக் களைப்பையும், தீய்க்கிற வெய்யிலையும் பொருட்படுத்தாமல் ஜுப்பா, தலைப் பாகையுடன் தெருவில் இறங்கிவிட்டார்.

'அவனை ஒன்றும் செய்ய வேண்டாம்... நான் வந்து பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லி அனுப்பியிருக்க வேண்டும். சொல்லாதது குற்றமாகப் பட்டது அவருக்கு.

ஆலிம் சாகிபு ஸ்தலத்துக்கு வந்துவிட்டார்.

கம்பும் கையுமாக குஸ்தி, சிலம்பக் களத்தில் குதித்தவர்களைப் போல் எக்காளமிட்டுக் கொண்டிருந்த கூட்டம் அவரைப் பார்த்ததும் கூச்சலை நிறுத்தியது.

கடை வாசலில் இரண்டிருந்தவர்களைப் பார்த்து வலது கையை உயர்த்தித் தணிய விட்டார் ஆலிம் சாகிபு. அதைச் சமாதானச் சமிக்ஞையாகக் கூட்டம் எடுத்துக் கொண்டது.

கடைக்கு எதிரில் சற்றுத தூரத்தில் இருந்த வேப்ப மரத்தடியில் அவர் ஒதுங்கி நின்றார். கூட்டத்திலிருந்து சில பேர் அவரிடம் வந்தார்கள்.

''நான் வந்திட்டேன் இல்லையா, அதனாலே நீங்க அவ்வளவு பேரும் இங்கேருந்து போயிடலாம்'' என்றார் ஆலிம் சாகிபு.

''இந்த வெய்யில்லே நீங்க எதுக்குங்க இங்கே இருக்கணும்... அவனை மிரட்டி ரெண்டு போட்டா அலறியடிச்சிக்கிட்டுக கடையைப் பூட்டிட்டு ஓடிப் போவான்'' என்றான் ஓர் இளைஞன்.

''இல்லே... எனக்குக் கொஞ்ச நேரம் வேலை இருக்கு...!''

''அப்ப உக்காருங்க... நாக்காலி எடுத்தாந்து போடறோம்.'' மறு நிமிடமே நாற்காலியைக் கொண்டு வந்து போட்டார்கள்.

: ஆக வேண்டியதை நான் பார்த்துக்கிறேன். நீங்க எல்லாரும் பொறப்படுங்க...'' என்று தூண்டினார், நாற்காலியில் உட்கார்ந்தபடி.

ஆலிம் சாஹிப் ஒரு திட்டத்துடன்தான் வந்திருப்பார் என்பது அவர்களுக்குப் புரிந்து விட்டது. அவ்வளவு பேரும் இடத்தைக் காலி பண்ணினார்கள்.

மரத்தடியில் நாற்காலியில் உட்கார்ந்தபடி கையடக்கமான யாசீன் அத்தியாயம் அடங்கிய புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டார். அது சிறு வயதிலிருந்தே மனப்பாடம்; யாசீன் அத்தியாயம் மட்டுமல்ல குர்ஆன் முழுவதுமே!

இடையிடையே ஆலிம் சாஹிபு மீரானின் கடையைப் பார்த்துக் கொண்டார்.

எல்லாமே ஒரு பத்து நிமிஷ நேரம்தான்.

மீரான் கடையை இழுத்து மூடிவிட்டுக் கூனிக் குறுகியவனாகத் தெருவோரமாகப் போய்க் கொண்டிருப்பதை அவர் பார்த்தார்.

இது அவர் எதிர்பார்த்ததுதான். வாய் திறக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் வந்து விட்டார் என்றாலே காரியங்கள் நடந்துவிடும். சற்றைக்கெல்லாம் ஆலிம் சாஹிபு எழுந்து விட்டார்.

தலை குனிவுடன் மீரான் சென்ற காட்சி அவர் கண்ணிலேயே நின்றது.


பள்ளி வாசலில் இரவுத்தொழுகை முடிந்திருந்தது.

ஊர் கட்டுப்பாட்டை மீறிப் பகல்நேரத்தில் கடை திறந்து வைத்திருந்த மீரான் விவகாரத்தை விசாரிக்க வேண்டும் என்று சிலர் கொடி காட்டினார்கள். காரணம், அப்துல் காதிர் ஆலிம் சாஹிபு தொழுது முடித்து விட்டு ஜபமாலையை உருட்டிக் கொண்டிருந்தார்.

செய்தி ஊர் முழுவதும் பரவி விட்டிருந்ததால் ஒத்தி வைக்க முடியாது.

யானை படுத்தால் குதிரை மட்டம், டவுன் பஸ் படுத்தால்? ஆபீஸ் 'மட்டம்'!

-சண்முக அறிவுடை நம்பி



ஆலிம் சாஹிப்பின் மீது பலருடைய கவனமும் இருந்தது. விளக்கம் கோரும் பாவனையில்தான் அவரைப் பார்த்தார்கள்.

அவர் புரிந்து கொண்டு விட்டார்.

தயங்காமல் விவரங்களைச் சொல்ல ஆரம்பித்தார்.

''ஊர்க் கட்டுப்பாட்டை மீறி நோன்பு காலத்தில் மீரான் கடையைத் தெறந்து வச்சிருக்கிறதா கேள்விப்பட்டதும் முதல்லே எனக்குப் பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. அவனுடைய செயல் எனக்கு விநோதமாகப் பட்டது. எந்தச் செய்கைக்கும் ஒரு காரண காரியம் இருக்க வேண்டும்...மீரான் ஊரைப் பகைக்கக் கூடிய விதத்தில் இப்படிச் செய்திருப்பான் அப்படீன்னு என்னாலே நெனைக்க முடியலே. அவனுடைய செயலை ஊர் விவகாரம் ஆக்கறதுக்கு முன்னாலே உள் விவகாரத்தைப் புரிஞ்சுக்க முயற்சி பண்ணினேன். இதில் மீரானுடைய வீட்டுப் பிரச்னை சம்பந்தப் பட்டிருக்கலாம்னு தோணவே என் சம்சாரம் கதீஜாவை ஆலோசனை கலந்தேன். அதன்படி மீரான் வீட்டுக்குக் கதீஜாவை அனுப்பினேன்....

''என் வீட்டுக்காரங்களைப் பார்த்ததும் மீரான் அழுது புலம்ப ஆரம்பிச்சிட்டானாம். ஊர்க் கட்டுமானத்தை மீறினதுக்காகத் தன்னை மன்னிக்கச்சொல்லிக் கண்ணீர் வடிச்சிருக்கான். 'அதுக்குக் காரணம் இதுதான்' அப்படீன்னு வீட்டுக் கூடத்திலே படுத்திருந்த பெண்டாட்டியைச் சுட்டிக் காட்டினானாம். ஆமாம்... நேத்து ராத்திரி வீட்டிலே பிரசவம்... ரொம்பவும் சிரமமான தலைப் பிரசவம். கையிலே பணம் இல்லை. டாக்டர் செலவுக்கும் மருந்துக்குமா தொகை தேவைப்பட்டதாம். பல பேர்கிட்டக் கெஞ்சிப் பார்த்தும்கூட பணம் கிடைக்கலே. அதனாலே 'அல்லா பேர்லே பாரத்தைப் போட்டுட்டு'க் கடையைத் தெறக்க முடிவு பண்ணினானாம்....

''இப்படி ஏதாவது நடந்திருக்கலாம்னு சந்தேகப்பட்டு கதீஜா கையிலே கொஞ்சம் பணம் குடுத்து அனுப்பியிருந்தேன். கூடவே ஒரு சீட்டும் எழுதிக் குடுத்தேன், மீரானுக்காக. இன்னைக்கு ஏற்பட்ட வியாபார நஷ்டத்தை ஈடுகட்ட அந்தப் பணம் உதவியா யிருக்கட்டும்னு எழுதியிருந்தேன். அதை வாங்கிக் கொள்ள மனமில்லாமத் தேம்பித் தேம்பி அழுதானாம் அவன். அவனுக்கு ஆறுதல் சொல்லிப் பணத்தைக் குடுத்திட்டு, பிரசவித்த பெண்ணுக்கு உதவி ஒத்தாசைகளைச் செய்திட்டு கதீஜா திரும்பி வந்தாங்க.. இதுதான் நடப்பு!'' என்றார் ஆலிம் சாஹிபு.

பேச்சு மூச்சு இல்லை. யாராவது இடைக் கேள்வி எழுப்புவாங்களா என்று ஆலிம் சாஹிபு எதிர்பார்த்தார்.

எதிரொலியைக் காணோம்.

மீண்டும் அவரே பேசினார்.

''இந்த நேரத்திலே ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கு. நோன்பு காலத்திலே ஊர் இப்படி இருக்கணும்னு நாம் கட்டுமானம் விதிக்கிறோம். ஆனா மார்க்கம் நமக்குவிதிச்சகட்டுமானத்தை நாம் கடைப்பிடிக்கிறோமா அப்படீன்னு

சிந்திக்கப் பார்க்கணும். மக்கடை நடத்தி அன்றாடம் காய்ச்சியா இருக்கிற மீரானுக்கு ஒரு கஷ்ட நேரத்திலே உதவ யாருக்கும் மனம் இல்லே. ஆனால் அவனே அடிக்க, நொறுக்கிக் கஷ்டத்தைக் கொடுக்க மட்டும் அவ்வளவு பேருக்கும் மனம் இருக்கு. கஷ்ட நேரத்திலே உதவக் கூடிய பணத்துக்காகப் பின்னால் கிடைக்கப் போகிற தண்டனையை இரண்டாம் பட்சமாக நினைச்சித்தான் மீரான் கடையைத் திறந்திருக்கான். இதை என்னால் புரிஞ்சுக்க முடிஞ்சது.

''இல்லாதவங்களுக்கு, ஏழை பாழைங் களுக்கு, சொத்து வசதியில் இரண்டரைச் சதவீதத்தை வருஷந்தோறும் 'ஜகாத்'— ஏழை வரியாக் கொடுக்கணும்கிறது மார்க்கச் சட்டம். நோன்பு காலத்திலே இதை அவசியம் நிறைவேற்றணும்... எத்தனே பேர் அதைச் செய்யறோம்? சுயக் கட்டுப்பாடு முதல்லே அவசியம். அப்புறம்தான் ஊர்க் கட்டுப்பாடு! மீரான் கடையைத் திறந்ததும் வியாபாரம் நடக்க ஆரம்பிச்சுட்டதுன்னு என்ன அர்த்தம்? எத்தனே பேர் நோன்பு வைக்காம திரிஞ்சுக்கிட்டிருக்காங்க அப்படீங்கிறது தெரியுது இல்லேயா? அவங் களை எப்படித் தண்டிப்பீங்க? கஷ்டப்படற வனைத் துரத்தறது தர்மம் இல்லே... அவன் கஷ்டத்தைப் புரிஞ்சுக்கிட்டுத் துடைக்கிறது தான் தர்மம்!'' என்றார் அப்துல் காதிர் ஆலிம் சாகிபு.

மறு பேச்சு எழவில்லை.

ஞானயோகம்



✱ வி. எஸ். ராகவன்

● 'நாம் இறந்த பிறகும், நம் சொத்துக்களைக் கூடவே ஏன் கொண்டுபோக முடியாது? முடியும்!'

என்ன இது? உபந்நியாசத் தத்துவம்மாதிரி இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? இல்லே; தமிழ் நாடகத்தின் மையக் கருத்து! (மூர்ச்சை போட்டு விழாதீர்கள்!)

கம்பெனி ஜி.எம். (வி.எஸ். ராகவன்) தன் நெருங்கிய நண்பன் இறந்துபோன சோகத்தில் இருக்கும்போது மேற்கூறிய சவாலே விட, எல்லாருமே தலே மயிரைப் பிய்த்துக் கொள்கிறார்கள். கடைசியில் அவர் கீழ் பணி புரியும் ராமன் (கே.எஸ். வாசன்) ஓர் உபாயம் செய்து காட்டிச் சிக்கலே அவிழ்க்கிறார்.

ஜி.எம்.மாக வரும் வி.எஸ்.ராகவன் நன்கு நடித்திருக்கிறார். 'இன்றைய அஜெண்டா' என்று செகரட்டரி அடுக்கிக் கொண்டே போனபோது ''நான்சென்ஸ்'' எனச் சீறி விழுந்து, கோட், டை எல்லாம் வீசி எறியும் காட்சியிலும் சரி; தன்னுள் எழுந்த சந்தேகத்தைக் குடும்பத்தினரிடம் பகிர்ந்து கொள்ளும்போதும் சரி, நடிப்புத் திறமையை நன்கு கொணர்ந்திருக்கிறார். ஆனால் அவர் மனைவியாக வருபவருக்குத் திறமை பற்றாது. வெகு சீரியஸான காட்சியில் கூட முகத்தில் பாவத்தைக் காட்ட முடியவில்லேயே!

மாறாக ஓரிரு காட்சிகளே வந்தாலும் கூட வி. கே. சரஸ்வதி தன் முத்திரையைப் பதித்துள்ளார். பேட்டி காண வருபவரிடம் குடும்ப ஆல்பமே கொண்டு வருகிற காட்சி ஒன்றே போதுமே!

ராமனாக வரும் கே. எஸ். வாசன் தேவலே. ஆனால் பரோபகாரியாக ஊருக்கு உழைப்பவராகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறாரே, அதை வலியுறுத்த ஒரு சம்பவத்தையாவது காட்டியிருக்க வேண்டாமோ?

டிரைவர் கல்யாணம், அடிக்கடி 'என் ஒய்ஃப் சொன்னு' என்று சொல்லும் குப்புசாமி, செக்ரட்டரி கோபாலன் (நடையுடை பாவனே படு.இயல்பு) — எல்லாருமே பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து நடித்திருக்கிறார்கள். ஒரு சீரியஸான கருத்தை நாடகத்துக்கு ஏற்றுக் கொண்டு நகைச் சுவை பின்னே எழுதியிருக்கும் கதாசிரியர் கே.கே. ராமன் பாராட்டுக்குரியவர். ஒவ்வொரு கட்டத்தையுமே ஓர் எல்லேக்குள் அடக்கி, நாடகத்தைச் சுவாரஸ்யமாக இயக்கியிருக்கிறார் டைரக்டர்.

தலேப்பு மட்டுமல்ல, நாடகமும் வித்தியாசமானதுதான்.

—தமயந்தி

16

தன்னைத் திடீரென்று கம்பெனி விஷயமாக ஒரு வாரம் திருச்சி, மதுரை என்று பயணம் செய்ய வைத்ததும், செலவுக்குத் தாராளமாகப் பணம் கொடுத்து அனுப்பியதும் அவனுக்கு நினைவு வந்தது. ஊருக்குப் புறப்படு முன் ஹிரண்மயியினிடம் தனியாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவன் அவளிடம் பேச முற்பட்டபோது கேஷியர் குப்புசாமி அவனைக் கூப்பிட்டதும் சொன்ன வார்த்தைகளும் மனத்தில் நினைவோடின.

''முரளி! உனக்குப் பயணம் சௌகர்யமாக இருக்கணும்னுதான் முதல் வகுப்பு டிக்கட் எடுத்திருக்கோம். திருச்சியிலே உச்சிப் பிள்ளையார் கோயில், ஸ்ரீரங்கம் எல்லாம் பார்த்துட்டு வரணும். நல்ல ஹோட்டல்ல ரூம் எடுத்துக்கோ. நம்ம கம்பெனியோட கௌரவத்தைக் காப்பாத்தணும். மதுரையிலும் பார்க்க வேண்டியது நிறைய இருக்கு. நீ முருக பக்தி உள்ளவனாச்சே. திருப்பரங்குன்றம் போயிட்டு வா. இப்பவே புறப்பட்டுப் போ. ரூமுக்குப்' போய்க் குளிச்சிட்டு ஆகாரம் செஞ்சிட்டுப் புறப்படச் சரியா இருக்கும். முதலாளி உன்னை மூணு மணிக்கே அனுப்பிடச் சொன்னார். மணி நாலரையாயிட்டது. ஹிரண்மயி கிட்டே ஊர்லேருந்து வந்த பிறகு பேசிக்கலாம்'' என்றார்.

எத்தனை கரிசனம்! அன்பு உள்ளம்கொண்ட மனிதர். எனக்கும் ஹிரண்மயிக்கும் உள்ள மானசீக உறவைப் புரிந்து கொண்டவர். இவரைத் துணைக்கொண்டே திருமணத்தை முடித்துவிடலாம் என்றெல்லாம் எண்ணினேனே. இவர் பசுத் தோல் போர்த்த புலியாக இருப்பார் என்று தோன்றவில்லையே. வெறும் சொற்கள்! அர்த்தமற்ற சொற்கள். அன்பு, நட்பு, பாசம், காதல் இவையெல்லாம் அகராதியில் காணப்படும் வேறு வேறு வார்த்தைகள்தாம். வாழ்க்கையென்னும் புத்தகத்தில் இவைகளின் பொருளே மாறுபடுகிறது.

ராஜாமணி சொன்னானே: 'பீபிள் ஆர் கான்ஸ்டென்ட்லி இன் அண்ட் அவுட் ஆஃப் லவ்!'' உண்மைதான். எதுவுமே நிரந்தரமற்று, தாற்காலிகமானதாகத்தான் உள்ளது. காதல் என்பது கூட ஓர் உணர்ச்சிப் பெருக்குத்தான். ஆனால் எல்லா உணர்ச்சிகளையும் அணை போட்டுத் தடுத்துவிடச் சிலருக்குத் தெரிந்திருக்கிறது.

ஒரு வித குற்ற உணர்வுடன் தன் எதிரில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கும் இந்த அப



கவர்ச்சிகள்

கிருஷ்ணமணி

லைப் பெண்ணை எப்படித் தேற்றுவது. இவ ளுடைய பெண்மைக்கு விலை பேசி விட் டார்கள். இனியும் இவள் தன்னோடு முன் போல ஒரு சகஜ நிலையில் பழக மாட்டாள். வெளிக்கு ஏதும் நடக்காதது போல் இருக் கலாம். ஆனால்.... ஆனால்....

''ஹிரண்மயி, நீ இன்னும் இந்தக் கம்பெனியிலே வேலை பார்க்கணுமா?''



அவள் தலை நிமிர்ந் தாள். அவள் கண்கள் சிவந்திருந்தன. கண் ணங்களில் நீர்ப்பசை தெரிந்தது.

அவள் சொன்னாள்: ''வேறென்ன செய் வது? ஊரில் என் அப் பாவுக்கு வருமானம் குறைவு. இரண்டு தம்பிகளும் ஒரு தங்கை யும் படித்துக் கொண் டிருக்கிறார்கள். மாதம் நான் முந்நூறு ரூபாய் அனுப்பு கிறேன். வேலையை விட்டால் வேறு இடத் தில் கிடைக்கச் சில காலம் ஆகும். தவிர இந்த விளம்பரத் துறையில் ராமநாராயணன் செல்வாக்குப் பெற்றவர். எனக்குக் கெட்ட பெயர் உண் டாக்க அவருக்கு அதிக நேரம் பிடிக்காது. வேறு துறையில் இத்தனை சம்பளம் கிடைப் பது சந்தேகம்தான். வேலைக்குப் போகும் பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெற முடிகிறது என்பது வாஸ்தவம் தான். ஆனால் சமுதாய சுதந்திரம் என்றுமே எங்களுக்குக் கிடைக்காது. ஆண் வர்க்கமே அப்படித்தான். பெண் என்பவள்என்றுமே ஆணுக்கு அடங்கி நடக்க வேண்டியவள் என்ற கருத்தை உல கத்தில் நீக்கிவிட முடியாது. திருமண பந்தத் தில் சிக்காது தனிமையில் இருக்கும் பெண் களும் ஆண்களின் மிருக வெறிக்குப் பயந்து தான் நடக்கவேண்டியிருக்கிறது. பெண்ணை ஒரு போகப் பொருளாகக் கருதுவதில் உல கெங்கிலும் ஆண்களின் மனப் போக்கு ஒன் றாகத்தான் இருக்கிறது. இந்தச் சம்பவத் தைப் பற்றி நான் புகார் கொடுக்க முடியாது. அவ்வளவு சாமர்த்தியமாக இதில் என்னைச் சிக்க வைத்து விட்டார்கள். குடும்ப வாழ்க் கையில் இருக்கும் பெண் ஒருவனுக்குக் கட்டுப் படுகிறாள். இப்படி என்னைப் போல உத்தி யோக வாழ்வில் இருக்கும் பெண் பல ஆட வர்களிடம் சமாளித்துச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பொருளாதார நெருக்கடிதான் இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம். துறவியாகி வாழ்பவர்கள் மட்டும் இந்தக் காலத்தில் சுதந்திரமாக இருக்க முடி யும். எனவேதான் நான் இந்தக் கம்பெனி யிலேயே இருப்பதாகத் தீர்மானித்துவிட் டேன்.''

அவன் வியப்புடன் அவளை நோக்கினான்.

''ஹிரண்மயி! இப்பொழுதுகூட ஒன்றும் மோசம் போய்விடவில்லை. நான் உன்னை மன் னித்து ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக் கிறேன்!''

அவள் சிரித்தாள்.

''நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக் கிறது. நம்முடைய மண வாழ்க்கை அமைதி யுடன் இருக்க முடியாது. தவிர நீங்கள் என்மீது வைத்திருக்கும் அன்பும் ஆசையும் என்றும் இப்படியே இருக்கும் என்று சொல்ல முடியுமா? நான் செய்யக் கூடிய சிறு தவறு கூட பூதாகாரமாக உங்களுக்குத் தோன்ற லாம். எனக்கு வாழ்க்கைப் பிச்சை அளித்த பெருமானாகத்தான் நீங்கள் உங்களைப் பற்றி எண்ணக் கூடும். நம்மிருவருக்கும் இடையே இனி எந்தக் காலத்திலும் சகஜ பாவம் நிலவ முடியாது.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய். உன்னுடைய நல்ல தன்மையை நான் பூரணமாக அறி வேன். இதை ஒரு கெட்ட கனவு போல மறந்து விடலாம்.''

அவள் மீண்டும் சிரித்தாள். ''முரளீ! லுக் ஹியர்! ஆரம்பமே சரியில்லை. நீங்கள் என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வதாகச் சொல்கிறீர்கள். மன்னிப்பு எப்போது தரப் படுகிறது? தவறான ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, அதற்காகச் செய்தவன்வருந்தி திருந்தும்போதுதானே? இதில் நானாக விரும்பிச் செய்த தவறு ராமநாராயணன் என்னை

ஸேட்டுக்கு அறிமுகம் செய்து வைக்க அழைத்தபோது, எந்தவிதமான தயக்கமுமின்றிச் சென்றேனே அதுதான். அறிமுகம் நான் ஒரு காபிரைட்டர் என்பதனுல் ஏற்பட விருந்தது என்று நம்பினேன். அன்று மாலை நடந்த சிறிய பார்ட்டியில் நானும் கலந்து கொண்டதும் அந்த ஸேட் என் அழகை, இளமையை, கல்வியின் உயர்வை நான் விளம்பரங்கள் தயாரிக்கும் பாங்கை ராமநாராயணன் சொல்லக் கேட்டு, என்னைப் புகழ்ந்ததும் அவை யெல்லாமும் கூட எனக்குச் சாதாரணமான நிகழ்ச்சிகளாகத் தான் தோன்றின. ஸேட்ஜி நம் கம்பெனிக்குப் பெரிய தொகையை விளம்பரத்துக்காக ஒதுக்குவதாகத் தீர்மானித்து விட்டதாகச் சொன்னவுடன்தான் குப்புசாமி விஸ்கி பாட்டிலைத் திறந்தார். கம்பெனிக்காக என்று என்னையும் இரண்டு முறை குடிக்கச் செய்தார்கள். தம்முடைய காரிலேயே என்னையும் அழைத்துப் போய்விடுவதாக ராமநாராயணன் கூறினர். சுரேஷ் என்னை வானளாவப் புகழ்ந்தான். புகழ்ச்சிக்கு மயங்காதவர்கள் யார்? மனத்திலே வஞ்சகமான எண்ணத்தை மறைத்து வைத்துக் கொண்டு, தங்களுடைய காரிய சாதனைக்காக, எவரிடம் அதைச் சாதித்துக் கொள்ள வேண்டுமோ அவரைப் புகழச் சிலருக்கு முடிகிறது. நான் அந்த மாலை நேரத்தில், குளிர் சாதன வசதி பொருந்திய அந்த அறையின் மங்கிய வெளிச்சத்தில் மதுவின் உஷ்ணமும், போதையும் சிறிது சிறிதாக என்னை ஆட்கொண்ட நேரத்தில் மயங்கித் தான் போனேன். ராமநாராயணன் என்னைப் பயன்படுத்திக் கொண்டது போலவே இனி நானும் அவரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.'' சிறிது இடைவெளி விட்டு மீண்டும் தொடர்ந்தாள்.

''ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை இப்படித்தான் நிகழ வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது போலும். காரண காரியங்களைச் சிரமப்பட்டுத் தேடிக் கண்டு பிடித்தாலும் எதுவும் ஒட்டாமல் தனித்தே நிற்கின்றன. இதற்கு அவர்கள் தயிலட்டாவை ஏன் பயன்படுத்தவில்லை? என்னை ஏன் தேர்ந்தெடுக்கவேண்டும்? நானும் ஏன் பார்ட்டிக்குச் செல்ல ஒப்புக் கொண்டிருக்க வேண்டும்?. எல்லாம் சாமானிய மொழியில் சொன்னுல் தலையெழுத்துத்தான். எனக்கு இந்தத் தலையெழுத்தில் நம்பிக்கைஇல்லை. இப்போது மெல்ல மெல்ல நம்பிக்கை தோன்றுகிறது. இனியும் என் வாழ்க்கைப் பாதையை வேறு விதமாக மாற்றி யமைத்துக் கொள்ள முடியும் என்று தோன்றவில்லை. என்னைப்போன்ற பெண்கள் இம்மாதிரியான வாழ்க்கைக்குத் தங்கள் மனத்தைத் தயாரித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஒரே ஒரு மார்க்கம்தான்உண்டு. பிராணஹத்தி செய்து கொள்ளலாம். நான் ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்? என்னுடைய இந்த அழகை வைத்துக் கொண்டு, மனச் சாட்சியைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு.. சௌகரியமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நினைத்தால் தவருகுமா?'' அவள் சற்றே நிறுத்தினுள்.

''நீ சொல்வதைப் பார்த்தால் இனிமேல் உன் வாழ்க்கையில் திருமணத்துக்கே பேச்சில்லேங்கிற மாதிரி இருக்கே?'' என்று கேட்டான் முரளி.

''திருமணம்கிறது புனிதமான சடங்கு என்பது சின்ன வயசிலேருந்து நம்ம மனசில ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு கருத் தோற்றம். அந்தச் சடங்கு மட்டும் புனிதமா இருக்கலாம். ஒருத்தனுக்கு ஒருத்தி என்கிற சமுதாய நியதிக்கு அது ஒரு எடுத்துக் காட்டாக இருக்கலாம். ஆனல் புனிதப் பிணைப்பினுல் ஏற்படற வாழ்க்கை நரகமா அமையும்போது எல்லாமே பொருளற்றுப் போயிடறது. திருமணத்துக்குப் பிறகு ஓர் ஆணும் பெண்ணும் எந்த அளவிலே மத்தவங்களை மதிச்ச, குறை நிறைகளை ஏத்துக்கிட்டு சமனமான ஒரு மனப் போக்கோடு வாழுறுங்க என்கிறதுதான் முக்கியம் இல்லையா? உடல் அவஸ்தையின் தேவைக்காகக் கணவனே மனைவியோ தேவைங்கிறது கூட கொச்சையான அமைப்புத்தான். பொருளாதார ரீதியில் தன்னிறைவு இல்லாத குடும்பங்களிலே இந்த அமைதியும், அன்பும் மறைஞ்சி போய், பூசலும் சண்டையும் தான் இருக்கு. இதுக்கெல்லாம் காரணம் என்ன? எத்தனையோ குடும்பங்களிலே புருஷன் உயிரோடு இருக்கும்போதே குடும்பச் செலவுக்குப் பணம் போரும அந்த வெற்றிடத்தை இட்டு நிரப்பக் குடும்ப நண்பரை மதிக்கிற பெண்களும் இருக்காங்க. புருஷனு இருக்கிறவனும் உசிரோட வாழுணும்கிற கார

கோவா, பஞ்ஜி நகரிலிருந்து இரண்டு வருடங்களுக்கு முன் வேலைதேடி அரேபியா சென்றிருந்த கணவன் வீடு திரும்பியபோது, தான் இந்தியாவை விட்டுப் போகுமுன் வீட்டில் விட்டுச் சென்ற நகைகள், விலைமதிப்புள்ள பொருள்களைக் காணுமல் தன் மனைவியை விசாரித்தான். பம்பாய்க்கு உல்லாசப் பயணம் சென்று வந்ததற்காக சுமார் 18,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்களை அவனுடைய மனைவி விற்றுவிட்டது தெரிய வந்து, கணவன் கொடுத்த புகாரின் பேரில் திருடி விற்ற காரணத்திற்காக மனைவியையும், அவளுக்கு உதவி புரிந்த மற்ளெரு பெண்ணையும் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

-டெக்கான் ஹெரால்டிலிருந்து அ. குமார்



ணத்துக்காக நண்பனுக வந்தவன் நாயகனுக மாறும்பொழுதுகூட பேச முடியாத ஊமை நிலையிலே இருக்க வேண்டிய கட்டாயம் ஏற் பட்டுப் போறது. இதுக்குச் சமுதாயம் என்ன சொல்லப் போகிறது? சமுதாயத்தி னுடை ஏச்சும் பேச்சும் என்னைப் போல் இருக்கிறவங்களுக்குத்தான். அதையெல்லாம் துடைச்சி எறிஞ்சிட்டு, வாழுறதுதான் முக்கியம்னு நினைக்கிறப்போ நியதிகள் மாறு பட்டுப் போகும். அந்த மாதிரி கேலிக் கூத்தான குடும்ப வாழ்க்கை எனக்கு வேண் டாம். நான் என்னையே சார்ந்து நிற்க ணும்னு ஆசைப்படறேன். இது விபரீதப் போக்குஇல்லே. விவேகமா சிந்திச்சுத்தான் சொல்றேன் இல்லேஎன்னுடையதேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்குச் சம்பா திக்கிறவனு இருக்கணும். நான் தேவை களைக் குறைச்சிக்கணும். என்னுடைய தனிப் பட்ட தேவைகளைக் குறைச்சிக்கிட்டாலும் என் குடும்பத்தாருடைய தேவைகளுக்கும் நான் எனக்குக் கணவனு வர்றவன் கிட்டே கையேந்தி நிற்கிறது சரியாகுமா? இதெல லாத்தையும் யோசனை செஞ்சு பார்த்திட் டுத்தான் நான் ராமநாராயணன் கம்பெனி யிலேயே இருக்கிறதா தீர்மானிச்சிட்டேன்'' என்றுள்.

அவள் பேசியவிதம், அந்தப் பேச்சில் இருந்த தர்க்க ரீதியான உண்மை, அப்பட்ட மான சத்தியத்தை, அவள் சொன்ன தோரணை,இவைகள் முரளிதரனின் மனத்தை உலுக்கின.

''உண்மை கசக்கத்தான் செய்யும்! ஆனல் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது நாம் அதைப் பேசித்தான் தீர வேண்டியிருக்கு. அதை மிகுந்த மனேதிடத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கு!'' என்றுள் அவள்.


முரளிக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை. அவன் பேச்சற்றுப் போனுன். அவன் கண்களின் ஓரத்தில் நீர் விளிம்பு கட்டியிருந் தது. மீண்டும் அவர்கள் கண்கள் சந்தித்தன.

''முரளி! சிறிது காலம் நான் உங்களோடு பழகினேன். தூய்மையான அன்பை, அதன் அழகை, இனிமையை எனக்கு நீங்கள் தந் தீர்கள். என் வாழ்க்கையின் இறுதி நாள் வரை இதை நான் மறக்க முடியாது. ஆனல் நாம் இருவரும் சேர்ந்து வாழ்வது என்பது முடியாத காரியம். ஐ வில் கீப் யூ இன் மை மெமோரி. நீங்க வேறொருத்தியைக் கல் யாணம் பண்ணிக்கிட்டுச் சந்தோஷமா இருக்க இறைவனைப் பிரார்த்திப்பேன். இந் தப் பொருளாதார, சமுதாயச் சூழ்நிலையிலே என்னைப் போல லெருக்கு வாழ்க்கை இப் படித்தான் அமைய முடியும். ஸோ! நாம நல்ல நண்பர்களாகப் பிரிஞ்சிடுவோம். குட் பை!'' என்றுள். எழுந்து நடந்தாள்.

அவனுல் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ராமநாராயணன் கம்பெனியில் இனியும் தான் வேலை பார்க்க முடியாது என்ற தீர் மானம் அவன் மனத்தில் உதித்தது. அழுத்த மாகப் பதிந்தது. மௌனமாக அவனுடன் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்து சென்றுன்.

(தொடரும்)

போகிற போக்கைப் பார்த்தால்....



● பவர் கட் இந்த வருடம் வராது என்று திட்ட வட்டமாக அறிவித்தார் மின்சார அமைச்சர். அப்படியே வந்தாலும், காதலர் களுக்கும் (புதிதாக) கல்யாணமானர்களுக் கும் உதவியாக இருக்கும் வகையில் இரவு முழுவதுமே பவர் கட் இருக்கும் என்று தெரி வித்தார்.

● கர்நாடகத்தில் மொழிப் பிரச்னை தீர, தலைவர்கள் ஒரு புதிய யோசனையைத் தெரி வித்திருக்கிறர்கள். இதன்படி பள்ளிகளில் அரசு அலுவலகங்களில், கோர்ட்டுகளில் எல் லாம் ஒரு வருடம் கன்னடம், மறு வருடம் தமிழ், அதற்கடுத்த வருடம் தெலுங்கு, அப் புறம் ஹிந்தி, பிறகு மலையாளம், மறுபடியும் கன்னடம் — என்று உபயோகிக்கப்படும். சண்டை போட்டுக் கொள்ள மட்டுமே ஆங் கிலத்தை உபயோகிக்கலாம் என்பது இவர்கள் கருத்து.

● கஷ்டமான திட்டங்களை அறிவிப்பதில் கஷ்டமேதுமில்லை என்று முதல்வர் எம்.ஜி. ஆர். தெரிவித்தார். ஒரு வருடத்தில் கஷ்ட மான திட்டங்களை அறிவித்தால், அவற்றை அமல்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள்பற்றி ஆராய ஒரு கமிட்டியை நியமித்து இரண்டு வருடங்களில் அவர்கள் தரும் பரிந்துரையை, அடுத்த இரண்டு வருடங்களில் பரிசீலித்து முடிவு சொல்ல இன்னெரு கமிட்டியை நியமித்து விட்டால், ஆறுவது வருடத்தி லிருந்து புதிய புதிய கஷ்டமான திட்டங்களை அறிவித்துவிடலாம் என்கிறர்.

● கிருஷ்ணு நீர், கொற்றளியார் தண்ணீர் எல்லாம் கொண்டு வருவதில் சிரமம் இருக் கிறபடியால் அவரவர் வீட்டிலேயே அரசு கிணறு வெட்டிக் கொடுக்கும். ஆகும் செல வில் ஐந்து மடங்கை, ஐந்து தவணைகளில் அரசுக்குக் கொடுத்தால் போதும். இது பற்றி நாராயணசாமி நாயுடு அவர்களிடம் சொன்னபோது, ''பத்து மடங்காக, பத்துத் தவணைகளில் வாங்கலாம் என்று அறிவித்தால் மூன்று தவணை கட்டிவிட்டு, நாலாவதிலிருந்து போராட்டம் தொடங்க மக்களுக்குச் சௌக ரியமாயிருக்கும்!'' என்றுர் அவர். -சாருகேசி



குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

முலைப்பால் குழந்தைக்கு மிகவும் சிறந்தது—ஏன்?

தூய்மையானது, கிருமிகளற்றது, குழந்தையின் ஜீரண முறைக்கு நூற்றுக்கு நூறு உகந்தது—தாய்ப் பால். பலவித நோய்களையும் எதிர்க்கும் சக்தியை அளிக்கிறது தாய்ப்பால். குழந்தைக்கு அன்பான உணர்வும் பாதுகாப்பும் கிடைக்க உதவுகிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு வாய்வு நோய்கள், சரும நோய்கள் ஏற்படுவது மிகவும் அரிது.


3 மாதம் ஆனபின், டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபாரிசு செய்கிறார்கள்

குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப்பட்டது—ஃபாரெக்ஸ். இதில் புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஷியம், பாஸ்பரஸ் வைட்டமின்கள் உள்ளன. இரும்புச் சத்தும் ஏராளம் அடங்கியது—ஃபாரெக்ஸ். ஆகவே, குழந்தையின் முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு—ஃபாரெக்ஸ்.



டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்

குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு



மருந்துகள் கொல்கின்றன?

டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன்

நோய்கள் பெருகிவிட்டது போல், மருந்துகளும் பெருகிவிட்டன. நோய்களைக் குணமாக்க சர்வதேச மருந்துக் கம்பெனிகள் விழுதூன்றி 'நொடிந்த' நாட்டில் நோய்களைப் போக்கித் தாம் 'கொழுத்துக்' கொண்டிருக்கின்றன.

குதிரைச் சவாரியில் உண்மையில் தேகப் பயிற்சி குதிரைக்கே அன்றி சவாரி செய்பவருக்கு அல்ல!

சாதாரண இருமல் சளிக்கு மெத்தப் படித்த டாக்டரிடம் போனால் முதலில் ஒரு லிஸ்ட். செய்யப்பட வேண்டிய டெஸ்டுகள், எக்ஸ்-ரே இத்யாதி. இத்தனையும் முடிந்தால் மேலும் ஒரு லிஸ்ட். வாங்க வேண்டிய மருந்துகளின் 'பட்டியல்'. சாதாரணமாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்குள் போயிருக்க வேண்டிய நோய்க்கு 'ஐந்நூறு, நானூறு' அந்தஸ்துக் கிடைத்து விட்டது.

உண்மையில் நோயாளி அணுகப்பட்டிருக்க வேண்டியது எப்படி? நோயாளியின் முறையீடுகள், நோயின் அறிகுறிகள், அவற்றின் முடிவுகள், இவற்றுக்கு நிதானமாக டாக்டர் நேரம் ஒதுக்கியிருந்தாலே போதும். நிவாரணம் எளிதில் கிடைக்கும்.

'விழுந்துவிட்டேன்... கால் வீங்கிவிட்டது. அவரிடம் போனேன். 30 மாத்திரைகள்... ஒரு மாத்திரை மட்டும் மூன்று ரூவா...'

வீக்கம் காலுக்கு மட்டுமல்ல: அவருடைய பர்ஸுக்கும்தான். இல்லையென்றால் தானாகக் கரையக் கூடிய அல்லது எளிய மாத்திரைகளால் கரையக் கூடியதற்கு ஏன் அவ்வளவு விலை உயர்ந்த மாத்திரைகள்?

மிகவும் வலிமை வாய்ந்த, விலையுயர்ந்த மருந்துகள் மட்டுமே சிறந்தவையல்ல. மிக விலையுயர்ந்த ஆன்டி-பயாடிக்குகள் antibiotics வந்துவிட்ட போதிலும் இன்றைக்கும் 'பெனிசிலினு'க்கு நிகரான மருந்து எதுவுமே இல்லை. இன்றைக்கும் அது ஆன்டி-பயாடிக்குகளின் ராணி. Still it is the queen of antibiotics)

நோயாளியின் 'அந்தஸ்து' நோய்க்கும் தரப்படுவது வேதனைக்குரிய விஷயம். காரணஸ்தர் டாக்டர் மட்டுமல்ல; அதை விரும்புகிற, வேண்டுகிற நோயாளியுமே.

அளவுக்கு மீறித் தரப்படுகிற மருந்து அதிகச் செலவை மட்டுமல்ல, அதிக ஊறுகளையும் தரும் என்பது நிதர்சனம்.

இன்றுவரை நிகழ்ந்துள்ள முன்னேற்றங்கள் தமக்குத் 'தெரியும்' என்பதற்காகவே எழுதப்படுகிற மருந்துகள், மருந்துக் கம்பெனிப் பிரதிநிதியின் மென்சொல் (இனிக்க, இனிக்க இனிக்க, இனிக்க) அவர் அள்ளி அள்ளித் தருகிற (கைகள் சிவக்க) மாதிரி மருந்துகள், அதனால் டாக்டரிடம் ஏற்படுகிற ஆளுமை (Influence) பிளாஸ்டிக்கிலும், ஜப்பான் ஆர்ட் பேப்பரிலுமாக வார்னிஷிக்கப்பட்ட விதவித கலர் அட்டைகள், இன்ன பிறவும், வந்திருக்கிற நோயாளிக்குத் தெரியாத பெயராக எழுத வேண்டுமே என்கிற 'கட்டாயம்' — யாவுமே வேண்டாத மருந்துகளை நோயாளிகளுக்குத் தந்து கொண்டிருக்கின்றன.

இவை, போதாதென்று கடைக்காரருக்கும், டாக்டருக்கும் உள்ள நெருக்கம் வேறு இருக்கிறது. (Expiry அயிட்டம் சார்... கொஞ்சம் தள்ளி விடுங்க...) விலை மலிவாக உள்ள மருந்துகள் அதிக லாபம் தருவதில்லை என்பதால் விலையுயர்ந்தவை எழுதப்படுகிறது. இவ்வளவும் சொல்லியாயிற்று. பாதிக்கப்படுகிறவர் யார்?


கால் கடுக்க பஸ் ஸ்டாண்டில் 'நிஷ்டை' செய்து ஆபீஸுக்குப் போய், மாலையில் பையுடன் மார்க்கெட்டுக்குப் போய் 'கை'யில் காய்கறி வாங்கி வரும் நடுத்தர வர்க்கம் அதற்கும் கீழே உள்ள தாழ்ந்த வர்க்கம்.

இன்றைக்குத் தரமான கம்பெனிகளென்று வேரூன்றிப் போயிருக்கிற மருந்துக் கம்பெனிகள் இந்தியத் திருநாட்டில் சம்பாதிக்கிற லாபம் மட்டும் 20 சதவீதம் முதல் 6000 சதவீதம் வரை. அதாவது நூறு ரூபாய் முதலீட்டுக்கு 6000 ரூபாய் வரை சம்பாதிக்கின்றன. அவற்றின் தயாரிப்புகளின் தரம் மட்டும் என்னவோ 'ஸ்திரம்' தான். ஆனால் அதற்காக இப்படியா ஒரு பிடி அவலுக்கு ஒரு போக விளைச்சலையே கேட்பது?

இவ்வளவு லாபம் கொழிப்பதால்தான் டாக்டர்களுக்கு நாட்காட்டிகள், வித விதமான பொருட்கள், டயரிகள், நட்சத்திர ஹோட்டல் விருந்துகள்பரிமாறப்படுகின்றன. சரி சரி. தங்கள் தயாரிப்புக்கள்தான்(சுதேசிக் கம்பெனிகளின் தயாரிப்புக்களை விட) உயர்ந்தவை என்று பறைசாற்ற என்னென்ன செய்கிறார்கள் இவர்கள்?

'What looks similar neednot be the same!' 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல!' என்ற பாட்டி காலத்து வாக்கியத்தை எனமலிலும் ஸ்கிரீன் பிரிண்ட்களிலும் ஊற்றி வைத்து விட்டு, தங்கள் தயாரிப்புகளே 'ஊறு அற்றவை' என்று டாக்டரை 'அமுக்கோ அமுக்' கென்று அமுக்கி அவர் மூளையைச் சுத்தமாகத் துடைத்து விடுகிறார்கள்.

'பார்மகாலஜி' (மருந்தியல்) நூலை மருந்துக்கும் தொட்டுப் பார்க்க நேரமில்லாத




பிணி டாக்டர்களுக்கு இவர்கள் ஓதுவது தான் வேதம்.

ஒரு மருந்தைத் தனியாகக் கொடுத்தால் வேலை செய்யாது என்று 'பலமுனைத் தாக்குதல்' நடத்த ஒரு நோய்க்கே உண்டான நான்கைந்து மருந்துகளை வெவ்வேறு விகிதங்களில் கலந்து தங்கள் வியாபாரத்தை இந்தக் கம்பெனிகள் உயர்த்திக் கொள்கின்றன. சமீபத்தில் இந்திய அரசு இவ்வகை மருந்து கலப்புக்கள் சிலவற்றைத் தடை செய்து 'சூர்ய நமஸ்காரம்' செய்திருக்கிறது.

ஒரு ரகசியம் மாத்திரம் புரிய மாட்டேன் என்கிறது. அதுதான் மேலை நாடுகளில் தடை செய்யப்பட்ட மருந்துகள் இந்திய நாட்டில் பவனி வரும் (வெற்றி உலா!) விஷயம். புரிந்தவர் யாரோ?

ஒரு பைசாவுக்கும் உதவாத 'நித்திய கல்யாணிப் பூ' வெளி நாட்டுக்கு ஏற்றுமதியாகி பல ரூபாய் மதிப்புள்ள 'VIN CRISTIN' ஆக இறக்குமதியாகிற கதை நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

நம் நாட்டுப் பாட்டி வைத்தியம் வெளி நாட்டிலிருந்து அலோபதியில் உருமாறி வந்து கொண்டிருக்கிற இந்நேரத்தில் நம் விஞ்ஞானிகள் மருத்துவர்கள் ஏன் நமது பண்டைய முறைகளை அலட்சியம் செய்கிறார்கள்? தப்பித் தவறி ஆர்வம் காட்டுகிறவர்களுக்கும் ஏன் நமது அரசு 'பாரா முகம்' காட்டுகிறது? குறைந்த விலையில், நிறைந்த நிவாரணத்தை இந்திய மக்கள் எப்போது பெறப் போகிறார்களோ? சில நாள் உணவை மறந்து ஒன்றுக்கும் உதவாத 'தித்திப்புத் திரவத்தை' (அதுதான், டானிக்) ஏன் இவர்கள் வாங்குகிறார்கள்? இயற்கை உணவின் முக்கியத்துவம் ஏன் அவர்களுக்குச் சொல்லித் தரப்படவில்லை? ஏன்? ஏன்? எல்லாமே நமக்குக் கேள்விக் குறிகள்தான்!



பிளாஸ்டிக் பைகளின் மூலம் பதநீர் வழங்கும் விழாவொன்று சென்னை குறளகத்தில் நடைபெற்றது. மந்திரியும் - நடிகைகளும் கூட கலந்து கொண்ட அந்த விழாவுக்கான விளம்பரங்கள் நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன. இதில் வேடிக்கை என்னவென்றால் - இந்த விழாவிற்கு முன்னமே - பிளாஸ்டிக் பைகளில் பதநீர் நகரத்திலுள்ள எல்லாப் பால் டிப்போக்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. இதை நகரமக்கள் அனைவரும் அறிவர். பின் எதற்காக அரசாங்கப் பணத்தைச் செலவழித்து - இவ்வளவு பெரிய விழா?

-சூடாரமணி

கதறல்! கதறல்!



● மனோரமாவின் 'கதறல் கதறல்' போட்டியில் எண்ணிலடங்காத வாசகர்கள் கலந்து கொண்டனர். அத்தனை கடிதங்களையும் மனோரமா முன்பு வைத்தபோது அசந்துபோய் விட்டார். பிறகு சொன்னார்:

'' 'பாருக்குள்ளே நல்ல நாடு' படத்து ஸ்டில் இது. படத்திலே நாங்க ஒரு கூட்டம் பெயர் தெரியாத தீவுலே போய் இறங்கறோம். அங்கே சோ சாரை வியப்படுத்த சோத்திலே வசிய மருந்தை வைக்க அதை இந்த யானை தின்னுடறது. பிறகு யானை என்னையே சுற்றிச் சுற்றி வந்து 'லவ்' செய்யுது.

''யானை என்னை வளைச்சுப் புடிச்சப்போ எனக்கு உயிரே கூண்டிலே இல்லே.''

கடிதங்களின் வாசகங்களை ரொம்ப நேரம்

● ''யாராவது சீக்கிரமாஓடிப்போய் கூரிலே மணி சாரைக் கூட்டிக்கிட்டு வந்து இந்த யானையைப் பயமுறுத்தி என்னைக் கீழே இறக்கி விடச் சொல்லுங்களேன்!''

ஆர். கண்ணன், பி.காம்
மதுரை-625001

● ''நைனா...நைனா....என்னைக்காப்பாத்துங்களேன். நா போயிட்டா வருஷா வருஷம் வாங்கற சிரிப்பு நடிகை விருது யாரு வாங்குவாங்க? நைனா....காப்பாத்துங்களேன்.''

—ப. சுப்பிரமணியன்
கோயமுத்தூர்—15

● ''ஐயய்யோ! [illegible]



படித்தேன்...

தார்.

—திரை ஞானி

படங்கள்: ஈ.வெ.ரா. மோகன்

முதல் பரிசு ரூ. 15

● ''அய்யய்யோ அடே கோவாலு! அந்த நாடவத்துல* ஒம் பேச்சைக் கேட்டு அந்தப் பொலவனுக்குப் பக்கதயா ஆக்டு குடுத்தேன்.அத்தநெசமாங்காட்டிபும்னுநெனச்சிக்கினு*அந்தப் பொலவனச்சாகடிச்ச மாதிரியே என்னையும் இந்த யானே கொன்னுடும் போலயிருக்கே.''

* இந்தியா டுடே * பாரதியார்.

வெ. பரமசிவ பாண்டியன்,
காந்தி கிராமம்,மதுரை மாவட்டம்

இரண்டாம் பரிசுகள் (இரண்டு) தலா ரூ. 10

● ''இன்னு ஜனங்கய்யா நீங்க! வெய்ய நேரத்திலே யானையாண்டே போயி நாங்க 'மனோரமா விசிறி மனோரமா விசிறி'ன்னிங்க. அது நான்தான் விசிறியாங் காட்டிபும்னுட்டு சும்மா தூக்கி விசுறுது.''

அ. கௌரி ஷங்கர்
சென்னை-15

● ''அய்யோ காப்பாத்துங்க காப்பாத்துங்க! யானையைக் காப்பாத்துங்க... என்னோட வெயிட் தாங்காமே துதிக்கை ஒடிக்கிட்டுப் போவுது!''

மா. மணிரோஜா
வடக்கன்குளம்

மூன்றாவது பரிசுகள் (10) தலா ரூ 5

● ''டேய் பூபதி!வாடா சிக்கிரம். நிறைய புரொடியூசருங்க கிட்டேருந்து பணம் வர வேண்டி இருக்குடா! சொல்றேன். உடனே டைரிலே நோட் பண்ணிக்கோ. இல்லேன்னு அப்படியே அமுக்கிடுவாங்கடா.''

—வசந்தப்ரியன்
சென்னை-91

பொடி வாங்கிக் கொடுங்களேன்!''

—கே. மனோகரன்,
தூத்துக்குடி.

● ''பிடி (பெண் யானை)தானேன்னு தூக்க அனுமதிச்சா புருஷன் மாதிரி இந்தப் பிடி பிடிக்குதே!யாராச்சும்காப்பாத்துங்களேன்!''

ஆர். நந்தகோபால்
திருச்சி-620013

● ''அட ஜோராகீது இந்த ஊஞ்சல்! இப்படி ஆடினு நல்லாக் காத்து வருது. இந்த வெய்யிலுக்கு நல்லாக்கீது!''

எஸ். ராஜலெட்சுமி
கும்பகோணம்

● ''ஒனக்கு தேங்கா வேணுமுன்னு தேங்காய் சீனிவாசனை அனுப்பறேன். தூக்கிப் போட்டு ஒடச்சுத் துன்னு. என்னை உட்டுடேன்!''

திருமதி கிரிஜானந்தி
திருச்சி-20

● ''அன்னைக்கு ஒரு நாள் 'சரஸ்வதி சபதம்' படத்திலே ''யானை உன் கழுத்திலே மாலை போடாது.மண்ணை வாரித்தான் போடும்'னு நாகேஷைப் பார்த்துச் சொன்னது தப்புத்தான். உட்டுடு, உட்டுடு!''


கவிஞர் இறைமணி
தூத்துக்குடி-2

● ''ஐயோ! பிள்ளையாரப்பா!தயவு செய்து என்னைக் கொஞ்சம்-தூரம் எறிடாப்பா. ஒரே யடியா விலைவாசி உயரம் எறிஞ்சிடாதே! அப்புறம்என்னலேகிழேயேஇறங்கமுடியாது.''

டி. ரவிச்சந்திரன்
விருத்தாசலம்

● ''பஞ்சாயத்துத் தேர்தல் போல ஆடி அசைஞ்சு வருதே இந்த யானைன்னு சொன்ன வுடன் இந்த யானைக்கு இப்படிக் கோபம் வந்துடுச்சி,யாராவது காப்பாத்துங்களேன்!''


ஆர். அரி கோபி
குடியாத்தம்





தன் கடைசிக் காலத்தைத் திருச்சியிலேயே கழிப்பது என்ற முடிவுடன் ரயிலேறி விட்டாலும், பார்வதிக்குத்

பாவமன்னிப்பு



தான் எடுத்திருக்கும் முடிவின் விளைவுகளை எப்படிச் சந்திக்கப்போகிறோம் என்று உள்ளூற ஒரே கலக்கமாகத்தான் இருந்தது. பதினைந்து வருடங்களுக்கு முன்பு கட்டிய கணவனையும், கண்ணான குழந்தையையும் தவிக்க விட்டு விட்டு வேறு ஒருவனுடன் தில்லிக்கு ஓடிவந்த அவளுக்கு இப்பொழுது மறுபடியும் அவர்கள் முகத்தில் எப்படி விழிக்கப் போகிறோம் என்று மலைப்பாக இருந்தது. கான்சர் என்னும் கொடும் நோயால் தாக்கப்பட்டு இன்றோ, நாளையோ என்ற நிலையில் இருந்த பார்வதி இறப்பதற்கு முன்பு கணவரைச் சந்தித்துத் தான் அவருக்கு இழைத்த துரோகத்துக்கு மன்னிப்பு வேண்டுவதற்காகப் பலவிதமான போராட்டங்களுக்குப் பிறகு தயக்கத்துடன் இப்பயணத்தை மேற்கொண்டிருந்தாள். அவளுடைய கவலைகளுக்கும், தனக்கும்யாதொரு சம்பந்தமும் இல்லாதது போல் ரயில் தில்லி ஸ்டேஷனை விட்டு அதிவேகமாக ஓட ஆரம்பித்தது. பார்வதியின் சிந்தனையோ பின்நோக்கி ஓட ஆரம்பித்தது.

பார்வதி பிறந்து வளர்ந்து படித்தது எல்லாம் தில்லியில்தான். அவள் பி.ஏ. இறுதி ஆண்டில் படித்துக் கொண்டு, தில்லிக் கல்லூரி வாழ்க்கையின் சுதந்திரத்தையும், உல்லாச வாழ்வையும் அனுபவித்துக் கொண்டிருந்த சமயத்தில், பார்வதியின் தந்தைக்குத் திடீரென்று ஐந்து ஆண்டுகளுக்கு வெளி நாட்டுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. தான் வெளியூருக்குப் போவதற்கு முன் பெண்ணின் திருமணத்தை நடத்தித் தம் கடமையை முடித்துவிட எண்ணின பார்வதியின் தந்தை பார்வதியை ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் திருச்சியில் வக்கீல் தொழிலில் ஈடுபட்டிருந்த தன் சகோதரியின் மகன் கணேசனுடன் அவளுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்து விட்டார்.

தந்தையின் இந்தத் திடீர் தீர்மானத்தைப் பார்வதியால் அவ்வளவு எளிதில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சுதந்திரப் பறவையாகத் திரிந்து கொண்டிருந்த அவள் மனத்தளவில் அப்போது கல்யாணம் என்ற பந்தத்தில் தன்னைக்கட்டிப் போட்டுக்கொள்ளத் தயாராக இல்லை. மேலும் எப்பொழுதோ பார்த்திருந்த அவனைப் பொருத்தவரை, முன்பின் தெரியாத ஒருவனை, அதுவும் தன்னைவிடப் பன்னிரண்டு வயது மூத்தவனான கணேசனைத் தனக்குக் கணவனாக அவளால் கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியவில்லை.

என்னதான் பெண்ணைக் கல்லூரியில் படிக்க வைத்து, அவளுக்கு ஓரளவுக்குச் சுதந்திரம் அளித்திருந்தாலும், பார்வதியின் தந்தை சுபாவத்தில் ஒரு சர்வாதிகாரி. வீட்டில் அவர் வைத்ததுதான் சட்டம். அதனால் வேறு வழியின்றிப் பார்வதி இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கவேண்டியதாயிற்று.

திருச்சியில் குடித்தனம் ஆரம்பமாகியது. மாமனார், மாமியார், மைத்துனர், ஓரகத்தி என்று கூட்டுக் குடும்பம். தினமும் அதிகாலையில் எழுந்திருந்து மாமியாருடன் சமையல் வேலை, ஒரு மணி நேரம் பூஜை செய்யும் மாமனாருக்குப் பூஜை சாமான்கள், நைவேத்தியம் எல்லாம் எடுத்து வைப்பது, கோர்ட்டுக்குக் கிளம்பும் கணவனுக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்வது என்று வேலை சக்கையாகப் பிழிந்து எடுத்து விடும். காலையில் கோர்ட்டுக்குப் போனால் மாலை நான்கு மணிக்

கெல்லாம் வீடு திரும்பும் கணேசன், வீட்டுக்கு வந்த பிறகும் வரிசையாக வரும் கட்சிக்காரர்களைக் கவனிப்பதிலும், மறு நாளைக்கு வேண்டிய குறிப்புக்கள் தயாரிப்பதிலும் தன்னை மறந்து விடுவான்.

புது மனைவியை ஆசையாக வெளியில் அழைத்துக் கொண்டுபோகவேண்டும் என்றோ, அவளுடன் நாலு வார்த்தை வேடிக்கையாகப் பேசவேண்டும் என்றோ தன் கணவனுக்கு ஏன் தோன்ற மாட்டேன்கிறது என்று பார்வதிக்கு ஆதங்கமாக இருக்கும். உல்லாசப் பேர்வழியான பார்வதிக்கு யாருடனும் அதிகம் பழகாது உம்மணாமூஞ்சிபோல் எப்பொழுதும் தீவிரமாக இருக்கும் கணவன் மீது நாளடைவில் எரிச்சல் உண்டாகலாயிற்று. சுதந்திரப் பறவையாகத் திரிந்து கொண்டிருந்த அவளுக்கு நான்கு சுவர்களுக்குள் தன்னை அடைத்துக் கொண்டு, உணர்ச்சியற்ற ஜடமான வயதான கணவனுடன் வாழும் உப்புச் சப்பற்ற வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா என்று தோன்ற ஆரம்பித்தது. எப்படியோ, இயந்திர கதியில் தானும் கணவருடன் வாழ்கிறோம் என்று உலகிற்கு நிரூபிப்பது போல் ஒரு வருடத்துக்கெல்லாம் ஒரு குழந்தையும் பிறந்து விட்டது.

இந்தச் சமயத்தில்தான் மோகனின் அறிமுகம் அவளுக்குக் கிடைத்தது. திருச்சியிலிருந்த தன் பூர்வீக வீட்டை விற்பது சம்பந்தமாகக் கணேசனைச் சந்திக்க வந்த மோகன், தில்லியைச் சேர்ந்தவன் என்று தெரிந்தவுடன் பார்வதிக்குத் தன்னை அறியாமல் அவனிடம் ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. அவனுடைய இளமையும், நாகரிகமான நடை உடை பாவனையும், கலகலப்பான சுபாவமும் அவளைக் கிறங்க அடித்தன.

மோகனும் வேண்டுமென்றே கணேசன் கோர்ட்டிலிருந்து வீடு திரும்புவதற்கு முன்பே பார்வதியைப் பார்ப்பதற்கென்று வந்து



விடுவான். ஏற்கனவே தன் திருச்சி வாழ்க்கையில் அலுப்படைந்த பார்வதியின் மனசைக் கலைப்பது மோகனுக்குச் சுலபமான வேலையாக இருந்தது.

''பார்ட்டி, பிக்னிக் என்று ஜாலியாக வாழ்ந்த உன்னால் எப்படி இங்கு வீட்டுக்குள் அடைந்து கிடக்க முடிகிறது? என்னுடன் புறப்பட்டு வந்துவிடு. நான் உனக்கு வாழ்க்கை என்றால் என்ன என்பதைக் காட்டுகிறேன்'' என்று மோகன் ஆசை காட்டவும், இளமை வேகத்தில் பார்வதியும் தான் என்ன செய்கிறோம் என்று சிந்தித்துக்கூடப் பார்க்காமல், தன் கணவனுக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு மோகனுடன் புறப்பட்டு விட்டாள்.

தில்லிக்கு வந்து சேர்ந்த பிறகுதான் அவளுக்குப் புரிந்தது, அங்கு தனக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை காத்திருந்தது என்று. ஏற்கனவே திருமணமாகியிருந்த மோகன், இவளுக்கென்று தனி வீடு, கார் ஃபோன் என்று எல்லா வசதிகளும் செய்து கொடுத்தவுடன் ஒரேயடியாக மயங்கிப் போன பார்வதிக்குத் தன்னை ஒரு வியாபாரக் கருவியாகப் பயன்படுத்துவதற்காகவே இத்தனை ஏற்பாடுகளும் என்பது புரிய அதிக நாட்கள் ஆகவில்லை.

கட்டுப்பெட்டியான மோகனின் மனைவியால் சாதிக்க முடியாத பல விஷயங்களைத் தன்மூலமாக அடைவதற்காகவே தன்னை இவ்வளவு தூரம் ஆசை காட்டி அழைத்து வந்திருக்கிறான் என்பதை அறிந்தவுடன் தான் நன்றாக ஏமாந்து போய்விட்டோம் என்பது விளங்கியது. பார்வதி பெயரளவுக்கு மோகனின் மனைவி போல் இருந்தாலும், உண்மையில் வீட்டில் பலவிதமான விருந்துகள் வைத்து, கண்ட கண்ட ஆடவர்களுடன் நெருங்கிப் பழகி மோகனுக்கு வேண்டிய காண்ட்ராக்ட்களையும் லைசென்ஸ்களையும் பெற்றுத் தரும் ஒரு நல்ல 'ஹோஸ்டஸ்'.

எப்படிப்பட்ட வலையில் தான் சிக்கிக் கொண்டு விட்டோம் என்று வேதனையால் துடித்தாள் பார்வதி. அவள் என்ன முயற்சி செய்தாலும் இந்த வலையிலிருந்து இனி மீள முடியாது. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாகி விட்டது அவள் வாழ்க்கை.

பதினைந்து ஆண்டுகள் தனக்கு விருப்பமில்லாத நரக வாழ்க்கையை அனுபவித்த பார்வதிக்கு அவ்வப்பொழுது தன் குழந்தையையும் கணவனையும் பார்க்க வேண்டும் என்று தோன்றாமல் இல்லை. யார் மூலமாவது அவர்களைப் பற்றித் தகவலும் கிடைக்கும். தன் கணவன் வேறு திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதிலிருந்து அவர் எவ்வளவு உயர்ந்தவர், அவரை நாம் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இளமை வேகத்தில் அவருக்கு இவ்வளவு பெரிய துரோகம் இழைத்து விட்டோமே என்று அவள் பட்ட வேதனை கொஞ்ச நஞ்சமல்ல.

ஆறு மாதங்களுக்கு முன்பு மார்பில் புற்றுநோய் வந்து ஆபரேஷன் ஆனதிலிருந்து பார்வதியின் உடல் நலம் குன்ற ஆரம்பித்தது. மோகனோ, 'காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறி' என்பது போல் பார்வதியை உதாசீனப்படுத்த ஆரம்பித்தான். டாக்டர்கள் நேரிடையாகச் சொல்லா விட்டாலும் பார்வதிக்குத் தெரிந்து விட்டது, தான் இன்னும் அதிக நாட்கள் இருக்கப் போவதில்லை என்ற உண்மை. இறப்பதற்கு முன்பு கடைசியாக ஒரு தடவை தன் கணவனையும், குழந்தையையும் பார்க்க வேண்டும் என்ற ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல், இத்தனை நாட்களாக எடுக்கத் தயங்கிய முடிவை இப்பொழுது துணிந்து எடுத்து விட்டாள் பார்வதி.

இத்தனை பலவீனத்திலும் ஒருவித மனோதிடத்துடன் தன் நெடிய பயணத்தை முடித்துக் கொண்டு அதிகாலையில் திருச்சி வந்தடைந்தாள் பார்வதி. அதே பழைய வீடு, வாசலில் வக்கீல் கணேசன் என்ற பலகை, ஒன்றுமே மாறவில்லை. இந்தப் பழைமையே இப்பொழுது அவள் கண்களுக்கு அழகாகத் தோன்றியது. சுமார் பதினைந்து வயது மதிக்கக் கூடிய பையன் ஒருவன் வந்து கதவைத் திறந்தவுடன், அவன் தன் மகன் தான் என்று அவளுக்குப் புரிய அதிக நேரமாகவில்லை.

''யாரோ ஒரு மாமி வந்திருக்கா'' என்று சொல்லிக் கொண்டே அவன் உள்ளே போய் விட்டான். தான் பெற்ற பிள்ளையே தன்னை யாரோ ஒரு மாமி என்று குறிப்பிடும் அவல நிலையை எண்ணித் துக்கத்தால் அவள் நெஞ்சம் வெடித்து விடும்போல் இருந்தது.

''யார் வாசலில்?'' என்று கேட்டுக் கொண்டு நேராகப் பூஜை அறையிலிருந்து நெற்றியிலும், மார்பிலும் பட்டை பட்டையாக, விபூதியும், கழுத்தில் ருத்திராட்ச

''ஏன் சார்? உங்க மகன் எப்போ பார்த்தாலும் ஹாலிடே மூட்லேயே இருக்கான்?''

''அதுவா அவன் சண்டேல பொறந்தவன் ஸார்!''

ப-பானுமதி



மாலையுமாக, சிவப்பழமாக வந்த தன் மாமனாரைப் பார்க்கவே பார்வதிக்குக் கண்கள் கூசின. இவளைப் பார்த்த உடன் தூக்கி வாரிப் போட்டது அவருக்கு. கண்கள் கோபக் கனலைக் கக்கின.

''எந்தத் தைரியத்தில் நீ இங்கு வந்தாய்? கண்டவனுடன் ஓடிப்போய்க் கேடு கெட்ட வாழ்க்கையை நடத்தும் நீ இந்த வீட்டு வாசற்படியை மிதிக்காதே'' என்று அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வெடித்தன.

இதற்குள் வீட்டிலுள்ள எல்லோரும் வாசலில் கூடிவிட்டனர். இவளைப் பார்த்தவுடன் எல்லோருக்கும் ஒரே அதிர்ச்சி. பயந்த சுபாவமுடைய பார்வதியின் மாமியாரோ என்ன செய்வது என்று புரியாமல் ஒருவித பீதியுடன் கணவனின் பின்னால் போய் நின்று கொண்டாள். எளிதில் உணர்ச்சி வசப்படாத, சாந்தமே உருவான கணேசனின் முக பாவத்திலிருந்து அவனுடைய மன நிலையைப் பார்வதியால் எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை.

பார்வதி தன் நிலையை விளக்கிக் கண்ணீர் விட்டுக் கதறினாள்.

''நான் உங்களுடன் தங்கி, உங்கள் குடும்ப கௌரவத்தைக் கெடுக்க விரும்பவில்லை. நான் இருக்கப் போவது இன்னும் சில நாட்களே. அதற்கு முன்பு என் கணவரைப் பார்த்து மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறேன்.''

ஆத்திரக்காரியான பார்வதியின் ஓரகத்தியோ பிச்சைக்காரனையோ, நாயையோ விரட்டுவது போல், ''அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வேடிக்கை பார்க்க வருவதற்குள் சட்டுப் புட்டென்று இந்த இடத்தை விட்டுப் போய்விடு'' என்று பார்வதியைத் துரத்த ஆரம்பித்தாள். பார்வதியும் வேறு வழியின்றிக் கண்ணீர் விட்டபடி மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தாள்.

இதுவரை வாயைத் திறவாமல் இருந்த கணேசன் திடீரென்று ஏதோ தீர்மானத்துக்கு வந்தது போன்று ''நில் பார்வதி. நீ எங்கேயும் போக வேண்டாம். உன் கடைசிக் காலத்தை நீ இங்கேயே கழிக்கலாம்'' என்று நிதானமாக, அதே சமயம் உத்தரவு இடுவது போல் தன் மனைவியைத் தடுத்து நிறுத்தினான்.

பார்வதிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. தான் கேட்பது கனவா, நனவா என்ற குழப்பத்திலிருந்து அவள் விடுபடுவதற்கு முன்பே, கணேசனின் அண்ணன் தம்பியைப் பார்த்துக் கோபாவேசமாகக் கூப்பாடு போட ஆரம்பித்தான்.

''உனக்கு என்ன புத்தி பேதலித்து விட்டதா? இந்தச் சிறுக்கியை வீட்டிற்குள் சேர்த்துக் கொள்வதற்கு. நான் பெண் குழந்தைகளைப் பெற்று வைத்துக் கொண்டிருக்கிறேன். இது என்ன குடும்பமா விபசார விடுதியா?'' என்று வார்த்தைகளை அள்ளிக் கொட்டினான் கணேசனின் அண்ணன்.

கணேசனோ அதே நிதானத்துடன் பதிலளித்தான்..''நான் ஊரறிய அக்கினி சாட்சியாக, ஈரேழு ஜன்மத்துக்கும் உன்னை வைத்துக் காப்பாற்றுவேன் என்று இவளுக்குத் தாலி கட்டிய கணவன். சுக துக்கங்களில் கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் துணை என்று சொல்கிறது நமது சாஸ்திரம். அதனால் இந்தச் சமயத்தில் பார்வதிக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டியது எனது கடமை.''

''இந்தச் சிறுக்கி இங்கு இருக்கப் போவதானால் நாங்கள் இனி ஒரு விநாடி கூட இந்த வீட்டில் தங்க மாட்டோம்'' என்று கணேசனின் அண்ணனும் மன்னியும் குதி குதியென்று குதித்தார்கள்.

எந்த விஷயத்திலும் தீவிரமாக இருக்கும் கணேசனோ, தன் கொள்கையை விட்டுக் கொடுக்காமல், அங்கு நடக்கும் நாடகத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல்,

''உங்களுக்காக நீங்கள் யாரும் வீட்டை விட்டுப் போக வேண்டாம். நான் போகிறேன் பார்வதியுடன். தான் செய்த தவறுக்காக மனம் வருந்தி வந்திருக்கும் அவள், தன் கடைசி நாட்களையாவது என்னுடன் நிம்மதியாகக் கழிக்கட்டும்'' என்று சொல்லிக்கொண்டே துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு தன் கடமையை நிறைவேற்றுவதற்காகப் புறப்பட்டு விட்டான்.

பார்வதிக்கு மகிழ்ச்சி, வியப்பு எல்லாமாகச் சேர்ந்து பேச முடியாமல் தொண்டையை அடைத்தது. அப்படியே கணவனின் பாதங்களில் சரணடைந்து விட்டாள். அந்த நிமிடத்தில் அவள் கண்களுக்கு, தன்னிடம் மன்னிப்புக் கேட்டு வந்த பக்த கோடிகளுக்குப் பாவ மன்னிப்பு வழங்கிய ஏகநாதராகக் காட்சியளித்தான், கணேசன்.




(சைக்கிளை ஒரு பாதசாரி மீது இடித்துவிட்டு சைக்கிள் காரர் சொன்னார்) "நீ ரொம்ப அதிர்ஷ்டசாலிப்பா!"

"ஏன்?"

"நான் கார் ஓட்டி வருவதாகத்தான் பிளான் போட்டேன். கடைசி நிமிஷம் ஐடியாவை மாத்திண்டு சைக்கிளில் வந்தேன்!"

-அ. கிருஷ்ணசங்கர்

விஞ்ஞானப் பக்கங்கள்



✖ ரேடார் எடுத்த புயல் படம்

"ஆகாசவாணி — மன்னிக்கவும். ஆல் இந்தியா ரேடியோ — சென்னை வானொலி நிலையம். புயல் பற்றிய விசேஷ அறிக்கை. வங்காள விரிகுடாவில் நாகப்பட்டினத்துக்குத் தெற்கே நூறு கிலோ மீட்டர் தூரத்தில் மையம் கொண்டுள்ள புயல்..."

"அப்பா! புயல்னு என்னப்பா?"

"காற்று...அசுரக் காற்று... பெரியபெரிய மரத்தை யெல்லாம் வேரோடு பேர்த்து எடுத்துடற காற்று!"

"அது எங்கேருந்தப்பா வருது?"

"கடல்லேருந்து."

"எப்படிப்பா வரும்?"

"மகனே! நல்லவேளை, நான் விஞ்ஞானி. பதில் சொல்லத் தவிக்க மாட்டேன்! கடல் தண்ணி சூரிய வெப்பத்தினால் சூடேறும். அந்தச் சமயம் கடல் பரப்புக்கு மேலே இருக்கிற காத்து சூடாகி மேலே போகும். அதனால அந்த இடத்துல அழுத்தம் குறையும். அப்போ சுத்துப்புறத்திலே இருக்கிற காத்து வேகமா அந்த இடத்துக்கு வரும். இப்படியே நடந்து, அந்த இடத்துல சுழல் காத்து வீச ஆரம்பிக்கும். இதுதான் புயல். புயலுக்கு நாலு பகுதிகள் உண்டு:"

"என்னென்னப்பா?"

"நடுவுலே 10 கி. மீட்டர்லேருந்து 30 கி. மீ. வரை விட்டமுள்ள நடுப் பகுதி. இதுக்குக் 'கண்'ணுன்னு பேர். இது அமைதியான பகுதி. ரொம்ப லேசான காத்துத்தான் இங்கே வீசிண்டு இருக்கும். அடுத்தது 'கண் சுவர்'. இது முதல்ல சொன்ன பகுதிக்கு சுவர் போல. இதனுடைய அகலம் சுமார் ஐம்பதிலேருந்து நூறு கிலோ மீட்டர் வரை இருக்கும். இந்தப் பகுதில மணிக்கு நூறு கி.மீக்கும் அதிகமான வேகத்தில் சுழற்காற்று இருக்கும். கனத்த மழை தரும் மேகமும் இருக்கும். இதை அடுத்து, இதைவிடக் குறைந்த வேகத்தில் காற்று வீசும் 'வெளிப் புயல் பகுதி. இதற்கடுத்து வெளிப்பகுதி. இங்கு வலுவில்லாத காற்று இருக்கும். புயலுக்கு மேலே நிறைய மேகம் இருக்கும். புயலை மேலே இருந்து பார்த்தா, நிறைய கயிறு சுருக்கி வைத்தாற் போல இருக்கும். இங்கிலீஷ்ல Cyclone என்ற பெயரே Coil of snakes என்ற அர்த்தம் கொண்ட கிரேக்க வார்த்தையிலேருந்து வந்ததுதான்."

✖ உருத் தெரியாமல் போன உருக்கட்டு



"எப்பா அடிக்கடி மழை வருகிற மாதிரி புயல் வருமா?"


"நோ....நோ... வட கிழக்குப் பருவக் காற்று, தென் மேற்குப் பருவக் காற்று என்றெல்லாம் படிச்சிருப்பியே. இந்தக் காற்றுகள் வீசற காலத்துக்கு முந்தியோ இதற்கு அடுத்தோதான் வரும். இரண்டு சீசன்களிலும் ஒவ்வொரு கடுமையான புயல் வந்துடறது வழக்கமாயிருக்கு. அரபிக் கடலைவிட வங்காள விரிகுடாவில்தான் அடிக்கடி கடும் புயல் வருகிறது."

"ஏன்பா, இன்னிக்கு காலைல பேப்பர்லே 'புயல் நாகப்பட்டினம் நோக்கி நகர்கிறது'ன்னு போட்டிருந்ததே அதெப்படிப்பா?"

"ஆமாம் கண்ணு! கடல் பரப்பு பெரிசில்லையா? சுழல் காற்றும் நகர்ந்து கொண்டே இருக்கும். மணிக்கு 25 கி. மீ. வேகத்துல,

கடல் பரப்புல அனுப்பிக் கொண்டே இருக்கும். அந்த அலைகள் மழைத் துளில பட்டு, திரும்ப வருகிற எதிரொளி, ராடாரின் 'கேதோட் ரே' குழாயில் புள்ளி புள்ளியாத் தெரியும். இது சங்கேதக் குறிகளாய் மாற்றப் பட்டு, டெலிபிரிண்டரில் செய்தி கிடைக்கும்.

''அதோட இல்லாம, அமெரிக்காவும் ரஷ்யாவும் ஸாட்டலைட்டுகள் விட்டிருக்காங்க. அதெல்லாம் புயல் அறிகுறி ஏற்பட்டவுடனேயே அதைப் படம் எடுத்து, பூமிக்கு



✖ செயற்கைகோள் எடுத்த புயல் படம்

ஒரு புயல் உருவாகிறது!

நாள் ஒன்றுக்கு 300–500 கி. மீ. வரை கூட நகரும். நேர் கோடுல நகரும்னு சொல்ல முடியாது. வளைஞ்சு வளைஞ்சு கூடப்போகும். சில சமயங்களில் மூணு, நாலு நாள் நகராமல் ஒரே இடத்துல இருக்கிறது கூட உண்டு.''

''எப்படிப்பா அதுக்கு அத்தனை வேகம் வருது?''

''சாய்வான தரையில ஒரு பந்தை உருட்டி விட்டா என்ன ஆகிறது? வேகம் அதிகரிக்குது இல்லையா? அதே போலக் கடல் பரப்புல வேகமான சுழல் காற்று அழுத்தம் குறைவான இடத்தை நோக்கி வீசறது. அப்போ வேகம் அதிகரிக்கிறது. கரையை நெருங்க நெருங்க வேகம் அதிகமாகிக்கிட்டே போகும்.''

''அதெல்லாம் சரி, புயல் வர்றதை எப்படிக் கண்டு பிடிப்பா?''

''ராடார்'ன்னு ஒரு சாதனம். ஒரு குழிவான தட்டுப் போல இருக்கும். இதை மெட்ராஸ் போர்ட் டிரஸ்ட் கட்டடத்துக்கு மேலே கடலைப் பார்த்த மாதிரி தரையிலேயிருந்து 22 மீட்டர் உயரத்துல வச்சிருக்காங்க. இது ஜப்பான் நாட்டில் செய்யப் பட்டது.''

''அதுல கண் வெச்சுப் பார்த்தாத் தெரியுமாப்பா?''

''இல்லே...இல்லே... ராடாரைச் சுற்றி நானூறு கி. மீ. வட்டாரத்தில் எந்தப் புயல் வந்தாலும் உடனே ராடார் நமக்குக் காட்டி விடும். இந்த ராடார் மின்காந்த அலைகளைக் அனுப்பிடும். ஆனால், ஸாட்டலைட்டை விட ராடார்தான் சரியான தகவலைத் தருகிறது. காரணம், ஸாட்டலைட் ரொம்ப உயரத்துலேந்து போட்டோ எடுக்கிறதாலே படம் அவ்வளவு க்ளியரா இருக்காது. புயல் நேரங்களில் ராடார்மூலம் 24 மணி நேரமும் புயலைக் கவனிப்பாங்க.''

''புயல் கரையைக் கடந்தது என்கிறார்களே அப்படின்னா என்னப்பா?''


''நகர்ந்து வரும் புயல் ஒரு இடத்தில் நிலப் பரப்பைச் சந்திக்கும். இதுக்குத்தான் 'கரை கடத்தல்'னு பேரு. இந்தச் சமயத்துல வேகமா ஒரு திசைலகடுங்காற்று இருக்கும். அடுத்து காற்றே இருக்காது. மறுபடி இரண்டு மூணு மணி நேர இடைவெளிக்குப் பிறகு, எதிர் திசைல கடுமையான காற்று வீசும். முதல் காற்று ஓய்ந்ததும், புயல் நின்னு போச்சுன்னு சில பேர் நடமாட ஆரம்பிப்பாங்க. ஆனால் எதிர்பாராத எதிர் திசைக் காற்றுக்குப் பலியாயிடுவாங்க. புயல் கரையைக் கடக்கும் சமயத்தில கடற் கரை கிட்ட இருக்கவே கூடாது. அந்தச் சமயத்தில், மணிக்கு நூறு முதல் நூற்றைம்பது கி. மீ. வேகத்துல காத்து இருக்கும். ரெண்டு மூணு மீட்டர் உயரத்துக்கு அலை அடிக்கும். விளக்குக் கம்பம், தந்திக் கம்பம் இவையெல்லாம் விழுந்துடும். பெரிய பெரிய மரங்கள் கூட வேரோடு சாயும். வீட்டுக் கூரை பறந்து விடுவது கூட உண்டு.''

— சந்திரமௌலி

தகவல், படங்கள் உதவி: சென்னை, நுங்கம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையம்

வேஸ்ட்! வேஸ்ட்!

''யார் அவ்வளவு உயரம் ஏறுவது?'' - பழவந்தாங்கல் ரயில்வே மேம்பாலம்



மக்களுடைய வசதிக்காக அரசாங்கம் கட்டும் சில பாலங்கள், சுரங்கப் பாதைகள் போன்றவை பயன்படுத்தப்படாமலே கிடக்கின்றன. சென்னை யில் அப்படிப்பட்ட நான்கு இடங்கள்:

வால்டாக்ஸ் ரோடு சுரங்கப்பாதை


ஏழரை லட்சம் செலவில் சென்ட்ரல் அருகில் 1979ல் கட்டப்பட்ட இந்தச் சுரங்கப் பாதையின்மீது தினசரி ஆயிரக் கணக்கானவர்கள் சாலையைக் கடக்கிறார்கள். ஆனால் யாருமே சுரங்கப் பாதையை லட்சியம் செய்வதில்லை. போக்குவரத்துப் போலீஸ்காரர்களே இந்த இடத்தில் போட்டுச் சுரங்கப்பாதையை உபயோகித்துத்தான் சாலையைக் கடக்க வேண்டும் என்று மக்களை வற்புறுத்தினால் தான் இந்தச் சுரங்கப் பாதை பயன்படுத்தப் படும்.

பழவந்தாங்கல் ரயில்வே மேம்பாலம்


பழவந்தாங்கல் ரயில் நிலையம் அருகில் இந்த இரும்பு மேம்பாலம் 1981ல் கட்டப் பட்டது. 'இதை ஏன் மக்கள் பயன்படுத்துவதில்லை என்று நங்கநல்லூரில் வசிக்கும் ஒருவரைக் கேட்டபோது ''அட போங்க சார்; அவ்வளவு உயரமான பாலத்தைக் கஷ்டப் பட்டு ஏறித்தான் ரயில்வே லைனைக் கடக்க வேண்டுமா?'' என்று கூறினார். ரயில்வே வட்டாரங்களில் விசாரித்தபோது இதன் மதிப்பு சரியாகத் தெரியவில்லை. ஒரு கட்டிட இன்ஜினீயரைக் கேட்டபோது,''சுமார் பத்து லட்ச ரூபாய் செலவாகியிருக்கும்'' என்றார். இருப்புப் பாதையை யொட்டி ஒரு தடுப்புச் சுவர் எழுப்பினால்தான் மக்கள் இந்த இரும்பு மேம்பாலத்தை உபயோகிப்பார்கள். அடிக்கடி இந்த இடத்தில் நிகழும் விபத்துக்களையும் தவிர்க்க முடியும்.

கதீட்ரல் சாலை சிக்னல்

ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி அருகே வளைவான இரும்புக் கம்பத்தில் சாலையின் இரு பக்கத்திலும் அமைக்கப்பட்டுள்ள இந்த சிக்னல் விளக்குகள் பயன்படுத்தப்படுவதில்லை. இரும்புக் கம்பங்கள் துருப்பிடித்துக் கொண்டிருக்கின்றன. ''இது ஏன் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது'' என்பது அங்கு இருந்த போலீஸ்காரருக்கே புரியாத புதிராக இருக்கிறது. சுமார் ஒரு லட்சம் செலவில் அமைக்கப்பட்ட இந்தச் சிக்னல் விளக்குகள் இங்கு தேவையில்லை என்றால் வேறு ஏதாவது ஒரு போக்குவரத்து மிகுந்த சாலையில் வைக்கலாமே?




× பயன்படுத்துவாரில்லாத சென்ட்ரல் சப்வே



பெரம்பூர் ரயில்வே சுரங்கப்பாதை

பெரம்பூர் ரயில் நிலையத்தின் அருகிலும், பெரம்பூர் பஸ் நிலையத்தின் எதிரிலும் அமைந்துள்ள இந்தச் சுரங்கப் பாதையின் உள்ளேயே நுழைய முடியவில்லை. ஒரே குப்பையும் சாக்கடைத் தண்ணீருமாகக் காட்சி யளிக்கிறது.



✽ விளக்குகள் இல்லை; குப்பை இருக்கிறது - [illegible] சுரங்கப்பாதை

இப்படி இருந்தால் மக்கள் இதை எப்படிப் பயன்படுத்துவார்கள்? இதைப் பராமரிக்கும் வேலையை ரயில்வே இலாக்கா செய்வதா அல்லது கார்ப்பரேஷன் செய்வதா என்ற சர்ச்சை நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சுரங்கப் பாதையைக் கட்ட சுமார் இருபது லட்ச ரூபாய் செலவாகியிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் உள்ள குப்பை, சாக்கடை நீரை அகற்றி, விளக்குகள் போட்டு வைத்தால் மக்கள் இதை உபயோகிப்பார்கள்.

—தில்லப்பா

படங்கள்: ஜெய்மோகன்

இங்கு தேவை இல்லை எனில் வேறு எங்கேனும் பயன்படுத்தலாமே? —கதீட்ரல் சாலையில் சிக்னல் விளக்குகள்



வாகவுக்குச்சிரிப்பு வந்தது. நியாயப்படி அவனுக்குக் கண்ணீர் வந்திருக்க வேண்டும். கண் மூடிக் கண் திறப்பதற்குள் கைப் பையைப் பறி கொடுப்பதென்றால்? அந்தத் திடீர் இழப்பு அவனுக்கு அதிர்ச்சி அளித்ததென்னவோ உண்மைதான். ஆனால் அந்த அதிர்ச்சி சில கணங்களுக்குத்தான் இருந்தது. சட்டென்று அதிர்ச்சி மறைந்து சிரிப்பு வந்தது. அந்தப் பையைப் பறித்துச் சென்றவன் அடையப் போகும் ஏமாற்றத்தை நினைத்து அவனால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

பையில் இருக்கும் ரொக்கப் பணம் ஓர் ஐந்து பைசா நாணயம்தான் என்பதைக் கண்டு அந்த மனிதனுக்கு ஏமாற்றம் மட்டுமா ஏற்படும்? எப்படி ஆத்திரம் உண்டாகும்! வாய்க்கு வந்தபடி திட்டினாலும் திட்டிக் கொண்டிருப்பான்.

அந்த ஐந்து பைசா நாணயம் கூட ருக்மிணி போட்டு வைத்தது. கைப்பை துடைத்தாற்போல் இருக்கக் கூடாது என்பதற்காக. மற்றபடி ஏதேதோ கடிதங்கள், பேப்பர்கள், இவற்றைத்தான் அவன் அந்தப் பைக்குள் அவ்வப்போது திணித்து வைத்திருந்தான்.

ருக்மிணியிடம் இதைச் சொல்லி அவன் சிரித்தபோது ருக்மிணிக்குச் சிரிப்பு வரவில்லை. பெருமூச்சே வந்தது. "நம்ம கண்ணுக்குக் கண்ணான வஸ்து ஒண்ணு அந்தப் பையில் இருந்துதே மறந்துட்டீங்களா?"

"எதைச் சொல்றே?"

"உங்களுக்கு ஞாபகம் வராட்டி வேண்டாம். விட்டுடுங்க!"

சட்டென்று மின்னல் போல்அந்த நினைவு அவனது நெஞ்சத் திரையில் பளிச்சிட்டது. அலட்சியமாகக் கருதிய அந்தப் பையின் இழப்பு இப்போது அளப்பரிய இழப்பாக அவனுக்குத் தோன்றலாயிற்று.

விலை மதிக்க முடியாத பொருளைத் தன்னுள் வைத்திருந்தஅந்தப்பை பறி போய்விட்டதே, அதை மீண்டும் பெற முடியாதா? நினைக்க நினைக்க அவனுடைய நெஞ்சத்தின் தவிப்பு அதிகரித்துக் கொண்டே போயிற்று. மறு நாள் காரியாலயத்தில் இருக்கையில் அமர்ந்திருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை. ஐந்து மணி அடித்ததும் அடிக்காததுமாக அர்த்தமற்ற அவசரத்துடன் எழுந்து பரபர வென்று வெளியே நடந்தான்.

அவன் பையைப் பறிகொடுத்தது மயிலாப்பூர் லஸ் பகுதியிலிருந்த பிரசித்தமான பூங்காவை அடுத்த பஸ் ஸ்டாண்டில் பஸ் ஏறும் போதுதான். அந்தப் பூங்காவை நோக்கியே அவன் கால்கள் அவனை இப்போது இழுத்துச் சென்றன. இருட்டும் வரை அங்கே காத்திருந்தால் பிக்பாக்கெட் தானாக அவனிடம் வந்து மாட்டிக் கொள்வான் என்ற நைப்பாசையா?

பூங்கா பெஞ்சு ஒன்றில் உட்கார்ந்திருந்தான் வாசு. அந்தி மயங்கி வானில் கருமை படரத் தொடங்கி யிருந்தது. பூங்காவில் மங்கலான விளக்குகள் அங்கங்கே எரிய ஆரம்பித்தன. மெதுவாக எழுந்து நடக்க ஆரம்பித்தான்.

உமா சந்திரன்



சட்டென்று புதர்ச் செடி வரிசையின் மறு பக்கத்திலிருந்து வந்த அடங்கிய குரல்கள் அவன் கால்களைக் கட்டிப் போட்டு நிறுத்தின.

"என்ன சோலை அண்ணே, நேத்து நின்டு மாதிரி ஒரு பையைத் தேட்டை போட்டியாமே! ரொக்கப் பணம் எக்கச் சக்கமா சிக்கியிருக்குமில்லே?"

"வயத்தெரிச்சலைக் கௌப்பாதே முனுசாமி! சரியான சாவு கிராக்கி. கத்தை கத்தையா காகிதங்களைத் திணிச்சு வச்சிருந்தான் பைக்குள்ளே! ரொக்கமா அதிலிருந்து எனக்குக் கெடச்சது அஞ்சே பைசாதான்! எனக்கு வந்த ஆத்திரத்திலே...."

"பையைத் தலையைச் சுத்திக் குப்பைத் தொட்டியில தூக்கி எறிஞ்சிட்டுப் போயிட்டியா?"

"பின்னே என்ன! தூக்கி யெறியறதுக்கு முன்னால ஒரு தடவை கையை விட்டுத் துளாவிப் பார்த்தபோது சின்னதா ஒரு பொருள் தட்டுப்பட்டது. அதை மட்டும் எடுத்து வைச்சுக்கிட்டுப் பையைக் கடாசிட்டேன்!"

சட்டென்று புதர்ச் செடிகளைக் கடந்து அவர்கள் எதிரே போய் நின்றான் வாசு. அவன் கையில் பத்து ரூபாய் நோட்டு ஒன்று இருந்தது இப்போது.

"சோலை, உன்கிட்ட நேத்துப் பையைப் பறிகொடுத்தவன் நான்தான். ஆனா நான் உன்னைக் காட்டிக் கொடுக்க வரலே. என்னால உனக்கு ரொம்பஏமாத்தம் இல்லையா? அதுக்கு நஷ்ட ஈடா இந்தப் பத்து ரூபாவை வச்சுக்க!"

"என்ன சார் ரோதனையாப் போச்சு உன்னால! என்னை யாருனு நெனைச்சுக்கிட்டு எனக்குப் பணம் குடுக்க வர்றே! பெரிய பத்து ரூபா! யாருக்கு வேணும் இந்தப் பிச்சைக் காசு!"

"இது போதாதுன்னு இன்னும் பத்து ரூபா சேத்துக்குடுக்கிறேன். அந்தப் பையில் இருந்த ஒரு பொருளை எடுத்து வச்சுக் கிட்டதாச் சொன்னியே அதை மட்டும் எனக்குத் திருப்பிக் குடுத்திடு போதும்."

"சார், நீ புதிர் போடற மாதிரி ஏதேதோ பேசறே. பையாவது பொருளாவது! என்

பிக்பாக்கெட்டுக்குப் பரிசு!

கனே யாருன்னு நெனெச்சுக்கிட்டிருக்கே? நாங் கல்லாம் மானம் மரியாதையோட வாழற வங்க சார்.''

''இருபது ரூபா போதாதுன்னு அம்பது ரூபாயா வாங்கிக்க. எப்படியாவது அந்தப் பொருளெ.....

சோலையின் கண்களில் ஆவல் மின்னு வதை அந்த மங்கிய ஒளியிலும் வாசுவால் பார்க்க முடிந்தது.

''எந்தப் பொருளா இருந்தாலும் கையி லயா இருக்கும்? வீட்டிலதானே இருக்கும்!'' என்றான் சோலை பொதுப்படையாக.

''நான் உன் கூட உன் வீட்டுக்கு வரேன். அதை எடுத்துக் குடுத்துடு.''

''பெரிய கில்லாடி சார் நீ! வீட்டை அடையாளம் கண்டுக்கினு அடுத்தாப்பல போலீசை இட்டாறதுக்கா! அந்தப் பாச் சால்லாம் நம்ம கிட்டப் பலிக்காது. ஒரு ரோசனெ சொல்றேன் கேட்டுக்கோ. நீ இங் கேயே நில்லு. – முனுசாமி, ஐயாவை இங் கிருந்து நகர விடாமப் பாத்துக்க, நான் ஓட் டமாஓடிப்போயி அஞ்சேநிமிஷத்திலே ஊட்டு லேருந்து அந்தப் பொருளெ எடுத்துக்கிட்டு ஓடியாந்துடறேன்.''

''உம். உம். நான் பாத்துக்கறேன். நீ போய் வந்துடு, கடுசா'' என்றான் முனிசாமி.

ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களைக் கையில் வைத்துக் கொண்டு, முனிசாமியின் கண் காணிப்புக்குக் கட்டுப்பட்டுப் படபடக்கும் நெஞ்சுடன் நின்றிருந்தான் வாசு. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது.

சற்றுப் பொறுத்துச் சோர்ந்த நடையுடன் திரும்பி வந்தான் சோலை. ''சாரே, எனக்கு உன்னோட ரூபா குடுப்பினெ இல்லே, உனக் கும் உன்னோடபொருள்குடுப்பினெ இல்லே.''

''ஏன் சோலை?'' – நெஞ்சில் இடி விழுந் தாற்போன்றநிராசையுடன்கேட்டான் வாசு.

''நிஜார் பாக்கெட்லதான் வச்சிருந்தேன். என் சம்சாரம் சில்லறைக்குத் துளாவி யிருக்கு. இது தட்டுப்படவே எடுத்துக்கிடுச்சு போல இருக்கு. உபயோகமத்த பொருள்னு எங்கே வீசிப் போட்டதோ! கேட்டா ஒன் னுமே தெரியாதுன்னு ஒரேயடியாச் சாதிக் குது!''

வாசுவின் நெஞ்சிலிருந்து விம்மல் வெடிக் காத குறை!

தகரத்தை ஆணியால் கீறினாற்போல் வறண்ட முறையில் சிரித்தபடி சோலை கேட்



டான் — ''ஆமாம்... தெரியாமத்தான் கேக்கறேன். அப்படி என்ன பிரமாதப் பொருள் அது? காக பெருத பித்தளை மோதிரம்! அதுக்கு அம்பது ரூபா கொடுக்க வந்திருக்கியே!''

''உம்! அதோட அருமை உனக்கு எப்படிப் புரியும்?'' என்று இடித்தாற்போல் கூறிய வாக, கனத்த நெஞ்சுடன் அங்கிருந்து நகர்ந்தான்.

நான்கு வருடங்களுக்கு முன்னால் மீரா குழந்தையுடன் பம்பாயிலிருந்து வந்திருந்த போது நிகழ்ந்தது அது. ருக்மிணியும் வாசுவும் மூன்று வயசுப் பேத்தியைக் கொஞ்சிக் குதூகலித்திருந்தார்கள். புதிது புதிதாக விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வந்த வண்ணமிருந்தான் வாசு. ஆனால் பேத்தி மாலாவுக்கு அவையெல்லாம் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அவள் ஓடித்துப் போடாத விளையாட்டுச் சாமானுண்டு?

ஒரு தடவை எல்லோரும் கோவிலுக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது, கோவில் வாசலில் நடைபாதைக் கடை ஒன்றில் பார்த்த மோதிரம் மாலாவின் கவனத்தைக் கவர்ந்தது. 'அந்த மோதிரத்தை வாங்கி என் விரலில் போடு' என்று தன் அம்மாவைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்திருந்தாள். 'சீச்சீ! அது வெறும் பித்தளை மோதிரம். அதெல்லாம் வாங்கிக் குடுக்க மாட்டேன்!'' என்று மீரா அதட்டல் குரலில் கூறவே குழந்தைக்கு அழுகை வந்து விட்டது. அதை வாங்கிக் கொடுத்தால்தான் ஆயிற்று என்று அடம் பிடிக்க ஆரம்பித்தாள். ஆனால் மீரா சிறிதும் செவி சாய்க்கவில்லை. வாசுவும் ருக்மிணியும் எவ்வளவோ கூறியும் கேட்காமல் குழந்தையைக் கதறக் கதற இழுத்துக் கொண்டு போய்விட்டாள்.

மறுநாள்காலை வெகு நேரம் வரைகுழந்தை கண் விழிக்காமலே படுத்திருந்தது மீராவுக்கு வியப்பை அளித்தது.

''மாலா, மாலா'' என்று அழைத்துக் கொண்டே குழந்தையைத் தொட்டு எழுப்பப் போனவள் சட்டென்று பதறினாள். ''அம்மா! இங்கே வந்து பாரேன்! குழந்தை உடம்பு அனலாக் கொதிக்கிறதே!''

ருக்மிணி, வாசு இருவருமே ஓடி வந்தனர். கடுமையான காய்ச்சலால் கண்களை விழிக்கக் கூடத் திராணி யில்லாமல் துவண்டு படுத்திருந்த குழந்தையைப் பார்த்து இருவருக்கும் கைகால் ஓடவில்லை.

ஒரு வாரம் ஆகியும் குழந்தை படுத்த படுக்கையாகவே இருக்கவே, எல்லோர் மனத்திலும் கவலை. டாக்டருக்கும் ஒன்றும் புரியவில்லை. எல்லா வித பரிசோதனைகளும் செய்து பார்த்தாயிற்று. எவ்விதக் கோளாறும் இல்லை என்று தெளிவாகியும் குழந்தை மட்டும் ஒழித்த நாராய்ப் படுக்கையிலேயே கிடக்கிறாளே, என்ன காரணம்?

நெஞ்சை அழுத்திய கவலையுடன் ஆபீசிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த வாசுவின் மனத்தில் பளிச்சென்று ஓர் எண்ணம் தோன்றியது. கோவில்நடைபாதைக்கடைக்கு விரைந்து சென்று பார்த்தான். அன்று மாலா விரும்பிக் கேட்ட மோதிரம்! ஐம்பதே பைசாதான்! அதை வாங்கிக் கொண்டு வீடு திரும்பிய வாசு ருக்மிணியிடம் அதைக் கொடுத்ததும் அவள் முகம் மலர்ந்தது.

''வெங்கடாசலபதி மோதிரம்! நல்ல சகுனம்தான்! அன்னிக்கு இதை வாங்கிக் குடுக்காத தோஷம்தான் குழந்தையை இப்படிப் படுத்தறதோ என்னவோ!'' என்று கூறிய ருக்மணி, கண்களை மூடியபடி கட்டிலில் படுத்திருந்த குழந்தையின் கையைப் பற்றி மோதிரத்தை விரலில் போட்டாள்— 'வெங்கடாசலபதி, நீதான் குழந்தையை இந்தக் கண்டத்திலிருந்து காப்பாத்தி எங்களுக்கு குடுக்கணும்!' என்று மனத்துக்குள் வேண்டிக் கொண்டவாறு. கண்களை மூடிய நிலையிலேயே குழந்தையின் இதழ்களில் புன்னகை அரும்பினாற்போல் இருந்தது.

அடுத்து எல்லாமே நல்லபடியாக நடந்தன. காய்ச்சல் முழுவதுமாக இறங்கி இரண்டொரு நாட்களிலேயே குழந்தை விரும்பி உட்கொள்ளத் தொடங்கினாள். ஒரு வாரத்தில் பழைய ஆரோக்கியமும் மலர்ச்சியும் திரும்பிவிட்டது. எப்போதும்போல் சிரிப்பும் கும்மாளமுமாக விளையாட ஆரம்பித்து விட்டாள்.

அதன் பிறகு பத்து நாள் கழித்து மீராவையும் குழந்தையையும் அழைத்துப் போக மாப்பிள்ளையே வந்து விட்டார். புறப்படுவதற்கு முன்னால் மீராவும் மாப்பிள்ளையும் சில தேவைப் பொருட்களை வாங்கி வருவதற்காக வெளியே சென்றிருந்தபோது மாலா குறும்புச் சிரிப்புடன் வாசுவிடம் வந்தாள்.


''தாத்தா, இந்தச் சாமி மோதிரம்எனக்கு ரொம்பப் பிடிக்கும். இதைக் கழட்டி நீயே வச்சிண்டிரு. உன்கிட்ட இருந்தாத்தான் இது பத்திரமா இருக்கும்'' என்று அவள் மழலை மொழியில் கூறியதைக் கேட்டு வாசுவும் ருக்மிணியும் சிரித்தனர். குழந்தையின் விருப்பப்படியே வாசு மோதிரத்தைக் கழற்றியெடுத்துத் தன் கைப்பையில் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

மாலாவுக்கு ஏழு வயது இப்போது. எல்லாப் பாடங்களிலும் முதல் மார்க் வாங்குவதாக மீரா ஒவ்வொரு கடிதத்திலும் பெரு

✖ ''பழி ஒரு இடம், பாவம் ஒரு இடம்'' என்றா என்னடா?

✖ நம்ம அப்பா போட்டுக் கொடுத்த தப்பான கணக்குக்கு நாம வாத்தியார் கிட்டே குட்டு வாங்கறோமே! அதுதான்.

-வெ. சீதாராமன்




"மழலைச்செல்வங்கள்...
மளமளன்னு வளரத் தேவை
அளவிலாத தெம்பு—
அருந்தத் தருகிறேன்
அதற்காக விவா".
''என் குழந்தைகள் அலுக்காமல்
அரும்பாடுபட்டுப் படிக்கிறதையும்,
ஆர்வமுடன் விளையாடுவதையும்
பார்த்தால் வியப்படைவீர்கள்.
அதற்குத் தேவையான வற்றாததெம்பு
அவர்களுக்கு விவாவிலிருந்து
கிடைக்கிறது. பார்லி, கோதுமை
இவற்றின் மால்ட் சத்துக்கள்,
பால், வைட்டமின்கள் அடங்கிய
விவா ஜீரணிக்க எளிதானது.
பாலிலேயும் சரி, நீரிலேயும் சரி
கலக்க இலகு. சூடான பானமாகவோ,
குளிர் பானமாகவோ சுவையுடன்
அருந்தலாம். அலுக்காமல்
படிக்கவும் விளையாடவும் சளைக்காத
தெம்பு— தருகிறது விவா''
VITAMINISED
ViVA
The Family Health Drink
BUILDS UP
STAMINA
ViVA
"தெம்பு தரும் விவா
உனக்கு நன்றி!"
மாண்ட் (உலக) தேர்வில் வெள்ளிப்
பதக்கம் வென்றது, ஆம்ஸ்டர்டாம் 1981
JiL ஜகத்ஜீத் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ASP/JIL: V/2/2015 TM

மைப்பட்டு எழுதிக் கொண்டிருக்கிறாள். மாலாவே தன் குழந்தைக் கையெழுத்தில் கடிதங்கள் எழுதுவதுண்டு. ஒவ்வொரு கடிதத்திலும், 'என்னோட சாமி மோதிரம் பத்திரமா இருக்கா?' என்று அவள் விசாரிக்காமல் இருப்பதில்லை.

ஆயிற்று. இன்னும் இரண்டொரு வாரங்களில் கோடை லீவுக்கு மாலாவை அழைத்துக்கொண்டு வரப் போவதாக மீரா எழுதியிருந்தாள். அப்போது குழந்தை மோதிரத்தைப் பற்றிக் கேட்காம லிருப்பாளா? பாசத்துடன் போற்றி வைக்க வேண்டியதைப் பறிகொடுத்து விட்டேன் என்று எப்படி அவளிடம் சொல்வது?

மறுநாள் காலையில்தான் அவன் தன் ஆற்றாமையை ருக்மிணியிடம் பகிர்ந்து கொண்டான். பையைப் பறித்துச் சென்றவனைக் கண்டுபிடித்த பிறகும் வெறும் கையுடன் வீடு திரும்ப நேர்ந்ததைப் பற்றி வருத்தத்துடன் கூறினான்.

''போனால் போகிறது. குழந்தைக்கு ஏதாவது சமாதானம் சொல்லிக்கலாம். இதுக்காக நீங்க மனசை வாட்டிக்கிறதினால என்ன லாபம்?'' என்று கூறிய ருக்மிணி, சட்டென்று குரலைத் தணித்து, ''நம்ம வேலைக்காரி வீரம்மாவுக்கு ரப்பர் காதாச்சே நாம பேசிண்டிருந்ததையெல்லாம் ஒட்டுக் கேட்டுண்டுநிக்கறான்னு நினைக்கறேன்'' என்று எச்சரித்தாள்.

வாசு குளித்துக் கொண்டிருந்தபோது வீரம்மாள் ருக்மிணியிடம் வந்தாள். ''நீங்களும் ஐயாவும் பேசிக் கொண்டிருந்தது என் காதிலும் உழுந்துச்சுங்க. ஐயா தொலைச்ச மோதிரம் இதுதானு பாருங்க'' என்று கூறியவாறு தன் முந்தானையில் முடிந்து வைத்திருந்த மோதிரத்தை எடுத்துக் காட்டினாள் அவள்.

''இதுதான் வீரம்மா!... எப்படிக் கிடைச்சது உனக்கு?''

''நான் வர்ற வழியில கண்டெடுத்தேன். பித்தளை மோதிரமானாலும் சாமி மோதிரமா இருக்கே, நம்ம கிட்டவே இருக்கட்டும்னு வச்சுக்கிட்டேன். உங்களுக்கு வேணும்னு நீங்களே எடுத்துக்குங்க.''

ஆவலுடன் அதைக் கையில் வாங்கிக் கொண்ட லட்சுமி, உடை மாற்றிக்கொண்டிருந்த வாசுவிடம் ஓடினாள். 'மோதிரம் கிடைச்சுடுத்து. வீரம்மா வர வழியில் கிடந்ததாம். நமக்குக் குடுத்திட்டா!'' என்றாள் குதூகலத்துடன்.

''அவ ஒட்டுக் கேக்கறான்னு பழிச்சயே! அவளோட அந்தச் சுபாவம் நமக்கு எவ்வளவு நல்லதா முடிஞ்சுது பாத்தயா?'' என்று கூறிய வாசு மோதிரத்தைத் திரும்பத் திரும்ப முத்தம் கொடுத்துச் சந்தோஷப்பட்டான்.

''பெரிய பாரம் மனசை விட்டு இறங்கித்து. வீரம்மாவுக்குப் பத்து ரூபாயாவது வெகுமதியாக் கொடு.''

''அதெப்படி! அந்தப் பிக்பாக்கெட்டுக்கு வெகுமதி ஐம்பது ரூபா குடுக்க ரெடியா இருந்தீங்களே! நம்ம வீரம்மாவுக்கு அதையே குடுத்திடலாம்!'' என்றாள் ருக்மிணி, ஐந்து மடங்கு தாராள மனத்துடன்.

பாசத்தில் சிக்குண்ட அப்பாவிகள்!

பிக்பாக்கெட் சோலையின் வாழ்க்கைத் துணைவிதான் வேலைக்காரி வீரம்மா என்ற உண்மை அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது!

வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.



பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்



பாமோலிவ், எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது, வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது. பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது- உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GK&E PS 7 TM

காலேஜ் ஃபாஷன்கள்!

கல்லூரிகள் திறக்கப் போகின்றன. கல்லூரியில் புதிதாக நுழையும் மாணவிகளுக்கு லேட்டஸ்ட் ஃபாஷனில் செல்ல வேண்டும் என்று ஆசை இருக்கத்தானே செய்யும்.

சூரிதார் கம்மீஸ், துப்பட்டாதான் பொதுவாக எல்லா மாணவிகளும் விரும்பி அணியும் உடை. சூரிதார் கம்மீஸுடன் துப்பட்டா அணியாமலிருப்பது ஒருவகை. இவற்றில் தொன்மையான இந்திய பாணி பிரிண்டட் சித்திரங்கள் பாதிக் பிரிண்டிங் அல்லது ஹைதராபாத் கைவேலைப்பாடு, அமைந்தால் மேலும் சிறப்பு. பொதுவாக ஐஸ் கிரீம் கலர், பிரவுன், மற்றும் மெரூன் கலர்கள் இளம் பெண்களுக்கு அழகாக இருக்கும்.

வெள்ளியினால் செய்யப்படுகிற அல்லது வெள்ளி முலாம் பூசப்பட்ட தொங்கட்டான்கள் மாணவிகள் மத்தியில் ரொம்பப் பிரபலம். தூரத்தில் இருந்து பார்த்தாலும் மாணவியைத் தனித்துக் காட்டிவிடும்.

கண் இமைகளுக்குமேலே மஸ்காராபூச்சை மாணவிகள் விரும்புகிறார்கள். இதனால் கண்கள் கருப்பாகவும் தெளிவான தோற்றத்தோடும் துருதுருவென்று பெரிதாகவும் அழகாகவும் இருக்கும்.

திருமணமான பெண்கள் மட்டுமல்லாது மாணவிகளுக்கும் மெட்டி மோகம் பிடித்துக் கொண்டுள்ளது. காலில் மெட்டி விரலில் மெலிதாக வெள்ளியில் அணிகிறார்கள்.

நகம் கடிக்கும் மாணவிகள் மற்றும் நகங்கள் சரியாக வளராதவர்கள் தற்போது தங்களுக்குப் பிடித்த வண்ணத்தில் தேவையான நீளத்துக்குப் பிளாஸ்டிக்கினாலான நகங்களை அணிகிறார்கள். தேவையில்லாத நேரத்தில் தொப்பி மாதிரி இவைகளைக் கழற்றி வைத்துவிடலாம்.

இடுப்பில் பிளாஸ்டிக் பெல்ட்டுடன்கூடிய மிடி அணிவது இப்போது பிரபலமாகி வருகிறது. கைத்தறி மிடி உடைகளையே பெரிதும் விரும்பி அணிகிறார்கள். இவை அணிவதற்குப் பூப்போன்று லேசாக இருப்பதோடு நீண்ட நாள் உழைக்கின்றன.

மாணவிகள் அதிகமாக ரசிப்பது கோலாப்பூரி வகைச் செருப்புகளைத்தான். பார்ப்பதற்கு அழகாகவும் கலை நயத்துடனும் இருக்கின்றன.



முன்பு கைகளில் அடுக்கடுக்காக வளையல்களை அணிந்த காலம் போய் இப்போது, ஒருவித வேலைப்பாடும் இல்லாத மெல்லிய வெள்ளி வளையல்கள் பிரபலமாகியுள்ளன. ஒரு கைக்கு ஒன்று அல்லது அதிகப்படியாக இரண்டுதான் போட வேண்டும்.

கொலுசு அணிவதும் தற்போது மாணவிகளிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வட இந்தியத் தயாரிப்பான இந்த வகைக் கொலுசுகள் மெலிதாக வெள்ளியில் செய்யப்பட்டவை.

இவ்விதழ் மேலட்டையில் தோன்றுபவர் ப்ளஸ் டூவில் பல சிறப்புகளுடன் தேர்ச்சி பெற்றுக் கல்லூரியில் அடியெடுத்து வைக்கின்ற குமாரி நயன்தாரா வீரராகவன். ஜெர்மன் மொழியில் டிப்ளமா பட்டமும் பெற்றவர் இவர்.

—''சிக்கி''

வண்ணப்படம் எடுத்தவர்: உத்ரா



சர்வர்: ''நீங்க மெட்ராஸுக்குப் புதுசுன்னு சொன்னிங்களே! மெட்ராஸைச் சுத்திப் பார்த்திட்டீங்களா?''

சாப்பிட வந்தவர்: ''இல்லையே''

சர்வர்: ''அப்ப போய் மெட்ராஸைச் சுத்தி பார்த்துட்டு வாங்க. அதுக்குள்ளே நீங்க ஆர்டர் கொடுத்த மசால்தோசை ரெடியாயிடும்''

-கிருஷ்ணசங்கர்

25

உஷாவைக் கண்டதும் ஆசையும் அன்பு மாக வரவேற்ருள், ஜகதா. சாதாரண மாகக் கணேசன் தன் மனைவியோடு தன் காரிலேயே புறப்பட்டு வந்து விடுவான்.



சேலம் என்ன அப்படி ஒரு தொலை தூரம் என்பான். இப்போது தனியாக – பஸ்ஸில் புறப்பட்டு வந்திருக்கிருளே?... பலவும் எண் ணியபடி ''வாம்மா உஷா''.... என்று புன் னகைத்தாள். எல்லாரும் சுகந்தானே'' கேட்டபடி உள்ளே வந்த உஷா பஸ் பய ணத்தில் களைத்து விட்டிருந்தாள். கையில் பிடித்திருந்த சின்ன பெட்டியைக் கூடத்தில் சுவரோரமாக வைத்துவிட்டுப் புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண் டாள்.

''சந்தியா வேலையிலிருந்து வந்ததும் காப் பிக்குப் பரப்பாள். அதனுலே முன்னலேயே போட்டுப் பிளாஸ்கில் ஊற்றி வச்சுடற பழக் கம். இதோ வரேன்.'' அவசரமாக உள்ளே சென்று இரண்டு டம்ளர்களில் ஊற்றி எடுத்து வந்தாள் அத்தை.

''ரெண்டு பேரும் முதல்லே இதைச் சாப்பிடுங்கோ. வெந்நீர் தயாராப் போட்டு வச்சிருக்கேன். ரெண்டு பேரும் குளிச்சிட்டு வாங்கோ. ராத்திரிச் சமைய லேயும் முடிச்சுட்டேன். சொன்னு நம்பு வியோ என்னவோ? வெங்காயப் புளிக் குழம்பைத் தாளிச்சப்ப உன்னை ரொம்ப நினைச்சுக்கிட்டேன்...''


பதிலுக்கு உஷா லேசாக முறுவலித் தாள். வழக்கமான மலர்ச்சியை முகத் தில் காணவில்லை. அத்தையின் மனதை என்னவோ முள்ளாக நெருடியது.

''இரண்டு நாள் இருந்துட்டுத்தான் போவே இல்லியா... ஒரு சமயம் கணே சன் கார் எடுத்துட்டு வந்து கூட்டிட்டுப் போவானு?....''

''இல்லே. அவசரமா வந்தேன். நாளைக் காலே முதல் பஸ்ஸிலேயே ஊருக்குத் திரும்பச் சொல்லியிருக்கார் உங்க மருமகன்.''

அத்தை இப்போ கவனித்தாள். தனியாக் பஸ்ஸில் வந்ததினால் உஷா தன் வைரத் தோடுகளைக் கழற்றி வைத்துவிட்டு கவரிங் தோடும் கைகளில் பிளாஸ்டிக் வளைகளும் கழுத்தில் தாலிச் சரடுமாக வந்திருந்தாள்.

அப்படியிருக்க, பெட்டியில் பதினைந்தாயிரம் ரூபாய்களைக் கொண்டு வந்திருப்பாளா?... பணத்துடன் அவளைத் தனியே அனுப்பக் கணேசன் பயப்பட மாட்டானா? ஒரு சமயம் செக்காக எழுதிக் கொடுத்திருக்கிறானோ என்னவோ? இல்லா



விட்டால் இத்தனை அவசரமாகப் புறப்பட்டு உஷா வந்திருப்பாளா...? பலவும் எண்ணித் தவித்துப் போனாள் ஜகதா.

சாப்பாட்டுக்குப் பின்னர் அத்தையும் உஷாவும், சந்தியா விரித்துப் போட்ட பாய்மீது உட்கார்ந்து கொண்டனர்.

சமையலறை வேலைகளைச் சடுதியில் முடித்துக் கொண்டு வெற்றிலை பாக்குத் தட்டுடன் சந்தியா வந்து கூடத்தில் அவர்களுடன் உட்கார்ந்து கொண்டாள்.

"கடிதாசிலே எழுதறதை விட நேரே விவரமாச் சொல்லிட்டு வான்னு உங்க மருமகன் அனுப்பிச்சு வச்சார்." — வெற்றிலைகள் சிலவற்றை எடுத்து நாற்காலிக் கை மேல் கிடந்த துண்டால் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டு பேசினாள் உஷா. சந்தியா அவசரமா முடிவு எடுக்கு முன் நீ போய் விஷயத்தை விவரமாச் சொல்லிட்டு வான்னு அனுப்பினார்."

"என்னக்கா சொல்றீங்க..." சந்தியா குழப்பத்துடன் கேட்டாள்.

"நீ கடிதம் எழுதிக் கேட்ட பதினைந்தாயிரம் ரூபாயை எங்களால் கடன் கொடுத்து உதவச் சாத்தியப்படாது. மேலும் அத்தனை பணம் போட்டு வீட்டைப் பழுது பார்க்கறதை விட வித்துடறதே நல்லதுன்னு அத்தான் அபிப்பிராயப்படறார்...."

"வீட்டை வித்துட்டு....?" — எரிச்சலை அடக்கி சந்தியா கேட்டாள்.

'கணேச அத்தானும் இவ்வளவுதானா:' என்ற ஏமாற்றத்தின் அதிர்ச்சியில் அவள் மார்பு படபடத்தது. "பூதலூர் போன்ற டவுன்களில் வீடு கிடைக்கிறது கஷ்டம். வாடகையும் அதிகமாக இருக்கும். இதே கிராமத்தில் ஒரு வீடு வாடகைக்குச் சுலபமாகக் கிடைக்கும். அதை முதலில் கவனிக்கச் சொல். வாடகை வீட்டில் முக்கியமான தேவைப்பட்ட சாமான்களை எடுத்துப் போட்டுக் கொண்டு அங்கே குடியேறிய பின் இந்த வீட்டைத் தரகர் மூலம் விற்க ஏற்பாடு செய்யச் சொல்லுன்னு அத்தான் சொல்லி அனுப்பினார்."

"வாடகைக்கு இப்போ வீடு எதுக்கு எங்களுக்கு:"


"உளறாதே! இந்த வீட்டை வித்தா வர பணம் உன் கல்யாணத்துக்கு உதவும் இல்லையா?"

"எந்த ரோவில வேணுமானாலும் டிக்கெட் கொடுங்க, 'வி' ரோ மட்டும் வேண்டாம்!"

"ஏன் சார்?"

"முன்னாலே "பி ரோ" இருக்குமே மறைக்கும்!"

- பானுமதி



"சரி, அப்படியே செய்றேன்னு வைச்சுக்குவோம். வீட்டை விற்று வந்த பணத்தில் வரதட்சிணை கொடுத்து எனக்கு ஒரு கணவனைத் தேடிக் கொண்டு விடலாம்.—ஆனால் செல்லக் குட்டியோட கன்னுக்குட்டி 'ஸாம்சன்' அத்தை இவங்களை எங்கே போகச் சொல்றது?"

"நாயை யாருக்காவது வளர்க்கக் கொடுத்துடு. கன்னுக்குட்டியை வித்துடு." என்று அவள் முடிக்கு முன் சந்தியா கோபத்துடன் வெடித்தாள்.

"அத்தையை வயதானவங்களுக்குன்னு திருச்சியிலே கட்டிக்கிட்டு இருக்கிற புதிய கருணை இல்லத்துக்கு அனுப்பிவிடலாம் இல்லையா அக்கா?"

"உனக்கேன் இப்படிக் கோபம் வரது? எங்க வீட்டிலே வந்து கொஞ்ச காலம் தங்கிக்கட்டும். பிறகு சூரியா வீட்டில் அதுக்கப்பாலே உன் புக்ககத்திலே... இப்படியே அவங்க இருக்க முடியும். இல்லாட்டா இங்கேயே ஒரு வீடு எடுத்துக் குடி வச்சுடுவோம். ஆளுக்குக் கொஞ்சம் பணம் அனுப்பி உதவி செய்வோம்."

"அத்தையை இந்த வயசிலே நாலு மூலைத் தாச்சி விளையாடச் சொல்றீங்க. அவங்களுக்கு யாருடைய பணமும் தேவையில்லை. அவங்க கணவன் வச்சுட்டுப் போன காசில் வட்டி வரது. அவங்க சாப்பிட்டுக்க முடியும். ஆனால் பணம் மட்டும் அவங்க வயசான காலத்திலே உதவியா இருக்க முடியாது—மனிதத் துணையும் அவசியம். அத்தை என் வரை பெத்த தாயைப் போன்றவங்க. அவங்களைப் பிரிஞ்சு நான் வாழறதா உத்தேசமில்லை. அத்தான் யோசனைக்கு நன்றி. நான் உடனடியா வீட்டை விக்கப் போறதில்லை." படபடவென்று பேசினாள் சந்தியா.

"வேறு யார் கிட்டயாவது கடன் வாங்க நீ புறப்பட்டுடக் கூடாதுன்னு உனக்கு அறிவுரை சொல்லத்தான் அத்தான் என்னை அவசரமா அனுப்பி வச்சார்..."

"சேலம் பக்கம் சமீபத்தில் குமரேசன் அத்தான் வந்திருந்தாரா அக்கா?"

"முந்தாநாள் சேலத்திலே ஏதோ காரியம்னு வந்திருந்தார். ஒரு ராத்திரி எங்களோட தங்கியிருந்தார்."

"அஞ்சு நிமிஷம் கிடைச்சாலே ஊரைப் பொசுக்கத் திட்டம் போட்டுடுவார் குமரேசன் அத்தான். ஒரு ராத்திரி உங்களோட தங்கியிருந்தாரா... அதான் கணேச அத்தானுக்குச்சரியா வேப்பிலை அடிச்சிருக்கார். ஊரான் வீட்டுக் காரும் ஓசிப் பெட்ரோலும் கிடைச்சா குமரேசன் அத்தான் சேலம் என்ன சந்திர மண்டலத்துக்கே போய்ட்டு வந்துடுவாரே "

"நீ கோபத்தைக் கொஞ்சம் அடக்கணும். பெண் பிள்ளைக்கு ஆனாலும் இத்தனை ஆத்திரம் ஆகாது."

"பெண் — பொறுமைன்னு எருமை மாதிரி இருக்கக் கூடாது! அநியாயத்தைக் கண்டு சீறி எழணும் என்கிற தத்துவத்தைப் போதிக்கத்தான் நம்ப பெரியவங்க ஆவேசத்தின் உருவமாக, கோபத்தின் எல்லையாகக் கடவு

ளைப் பத்திரகாளின்னு பெண்ணாக வச்சு வழி படறாங்க தெரியுமா அக்கா?''

''அத்தான் இன்னும் என்னவெல்லாமோ சொன்னார். அதைக் கேட்டா நீ பத்ரகாளியாகிவிடுவாயோ என்னவோ? எனக்குக் கேட்க மனம் கஷ்டப்பட்டது.''

''அவர் அங்கே வந்து என்ன சொல்லியிருப்பார்னு தெரியும். எனக்கும் பூத ஊர் பாலி கிளினிக்கில் வேலை பார்க்கும் டாக்டர் கிரிதரனுக்கும் ரொம்ப நெருக்கம் ஏற்பட்டிருக்கு. அவருடைய காரில் ஊரைச் சுத்தறேன்னு சொல்லியிருப்பார்.''

''அது உண்மையா சந்தியா...?''

''அவரை நான் விரும்பறேன். அவருக்கு என்னைப் பிடிச்சிருக்கு. இதில் தப்பு என்ன?''

''காதல் கத்தரிக்காய்னு சொல்லிட்டுக் கடைசியிலே அவன் கைவிட்டுட்டு ஓடிட்டா நாமதானே அவமானப்படணும்?''

''காதலில் தோல்வி அடைஞ்சா நான் தலையைத் தண்டவாளத்தில் கொடுக்கமாட்டேன். மூட்டைப் பூச்சி மருந்தை விழுங்கிச் சாக மாட்டேன். பயப்படாதீங்க... சரி இவ்வளவுதான் உன் லட்சணமா என்று உலக இயல்பைப் புரிஞ்சு கொண்டு புத்திசாலியா வாழ்க்கையை வேறு விதமா வாழத் தெரிஞ்சுக்குவேன்.''

''ஏடா கூடமாப் பேசாதே. வீட்டை வித்துட்டு வந்த பணத்தில் வரதட்சணை கொடுத்து நல்ல இடமாப் பார்த்து...''

''அக்கா, வரதட்சணை கொடுத்தா மட்டும் நல்ல இடமாக் கிடைச்சுடுமா? வரதட்சணை வாங்கிய பின்னும் பெண்களைக் கொடுமைப் படுத்தற கதைகள் பல கேட்டு அலுத்துப் போயிருக்கிறோம்.''

''அப்போ என்னதான் உன் முடிவு?''

''உங்க முடிவைச் சொல்லிட்டீங்க. கடன் கொடுத்து உதவ முடியாதுன்னு கை விட்டு விட்டீங்க... நான் வேறே என்ன பண்றதுன்னு யோசிச்சு முடிவெடுக்கணும். உங்களுக்கு எங்களைப் பத்தி ஏன் வீண் கவலை.? எனக்குத் தூக்கம் கண்ணைச் சுத்துது.'' என்று கூறிவிட்டு சந்தியா படுத்துக்கொண்டு மேலே பேசப் பிடிக்காது தூங்குகிறவள் போலக் கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டு விட்டாள்.

மறுநாள் காலை உஷா எழுந்து அவசரமாகப் புறப்படத் தயார் செய்து கொண்டு முதல் பஸ்ஸில் சேலத்துக்குக் கிளம்பினாள்.

அவளைப் பஸ் நிலையம் வரை சென்று வழி அனுப்பி விட்டு வந்த அத்தை பெருமூச் செறிந்தாள்.

''கொண்டான் கொடுத்தான் கிட்டப் பணம் கடனாகக் கேட்கிறது தப்புன்னு சொன்னேன். பார்த்தியா என்ன நடந்தது'' என்று கோபத்துடன் கேட்டாள்.

''கேட்காமல் இருந்திருந்தால் உண்மை நிலை தெரியாது போயிவிட்டிருக்கும். வீட்டை ஏன் வித்தீங்க... நாங்க கடன் கொடுத்து உதவியிருப்போம்னு பகட்டாகப் பின்னால் பேசுவார்கள். இப்போ ஒரேயடியாக அவர்கள் வாயைப்பூட்டியாச்சு...ஆபத்துக்கு உதவுங்க என்று அணுகும்போதுதான் நமக்கு யார் உண்மையான உறவினர்கள் — நண்பர்கள் என்பது விளங்கும் அத்தை.'' புன்முறுவலித்தாள் சந்தியா.

''இப்போ என்ன புரிஞ்சுகொண்டுட்டேன்னு நீயே சிரிக்கக்கிறே?''

''தன் கையே தனக்குதவி'ன்னு அப்பா நான் சின்னப் பிள்ளையா இருக்கிறச்சே ஒரு குருவிக் கதை சொல்வார்... அதை நினைச்சுப் பார்த்தேன். எத்தனை பெரிய உண்மை — இது தெரியாம இவ்வளவு பெரிய பெண்ணா வளர்ந்து நிக்கிறேனே— வாத்தியார் வேலை வேறே செய்யறேனேன்னு நினைச்சேன்... சிரிப்பு வந்தது.'' சொல்லிக் கொண்டே உரக்கச் சிரித்தாள். (தொடரும்)



நீங்கள் கேட்டவை



✠ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

✠ கு. மா. கணேசன், குப்புச்சிபாளையம்
? ஜனநாயகம் உருப்பட ஏதேனும் வழி சொல்லுங்களேன்?
! பிள்ளை, நாடார், பார்ப்பான், ஹரிஜன், முஸ்லிம், ஹிந்து, திராவிடன், ஆரியன், தமிழன், மலையாளி போன்ற எண்ணங்கள் மறைந்து காஞ்சி ஆசாரியாள் அண்மையில் கூறியதுபோல் ஒவ்வொருவரும் தங்களை முதலில் இந்தியன் என்று கருதத் தொடங்கிவிட்டால் தேசம் உருப்பட்டு விடும். ஆனால் அரசியல்வாதி இதை அனுமதிக்க மாட்டானே!

✠ எம். நாகேந்திரகுமார், ஒசூர்
? ஆசையை அடக்க முடியுமா?
! கஷ்டம்தான். ஆனால் சிலரிடம் அந்த மன உறுதி காணப்படுகிறது. (உம்) அம்மா படத்தில் ஹிப்பிகள் அடிக்கும் கூத்து ஒரு காட்சி. பாடலில் இரு வரிகளுக்கு சென்ஸார் ஆட்சேபனை. அந்த இரு வரிகளை வெட்டிவிட்டு மற்றபடி ஆபாச நடனத்தை விட்டு வைத்திருக்கலாம். ஆனால் ஏ. வி. எம். சகோதரர்கள் சென்ஸார் ஆட்சேபனையைத் தொடர்ந்து அந்த நடனக் காட்சியையே நீக்கி விட்டார்கள்! விளைவு பாக்ஸ் ஆபீஸ் ஃபார்முலாவின் ஒரு முக்கிய அம்சம் அம்மா படத்தில் இல்லை. பாக்ஸ் ஆபீஸ் ஆசையை வென்று படத்தைச் சுத்தப்படுத்திய ஏ. வி. எம். சகோதரர்களுக்கு நம் வாழ்த்து!

✠ ந. லதா, தூத்துக்குடி
? நக்கலாகக் கேள்வி கேட்பவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்?
! சிக்கலான கேள்வி கேட்பவரை விடத் தேவலாம் என்று.

✠ ச. புகழேந்தி, திருவையாறு
? உலகிலேயே உயர்ந்த சக்தி எது?
! விதி! சென்ற மாதம் 19ம் தேதி லண்டனில் ஒரு பூங்காவில் நடந்து சென்று கொண்டிருந்தாள் ஐரிஸ். திடுமென ஒரு மின்னல் பளிச்சிட அவள் இறந்து விழுந்தாள்! உடலைச் சோதித்ததில் அவள் அணிந்திருந்த பிராவில் உள்ளுறையும் உலோகக் கம்பி மின்னலை ஈர்த்து அவளைக் கொன்றுவிட்டதாகக் கண்டு பிடித்தார்கள்!

✠ ஆர். கணேசன், திருநெல்வேலி
? மணியாச்சி புகைவண்டி நிலையம் பெயரை வாஞ்சிநாதனுக்கு மாற்ற வேண்டுமா?
! தேவையில்லை. மணியாச்சி என்றதுமே வாஞ்சி நினைவு வரும்; வரவேண்டும். பொதுவாகவே ஊரோ, தெருவோ, பாலமோ, கட்டிடமோ எதுவானாலும் சரி, அதன் பெயரில் ஒரு சரித்திரம் தொக்கி நிற்கும். சரித்திரத்தை மதிப்பவர்கள் பெயர் மாற்றத்துக்கு இசைய மாட்டார்கள். புதிய தலைவர்கள் பிரமுகர்கள் பெயரைச் சூட்டப் புதிய கட்டிடங்கள், நகர்கள் ஆகியவற்றைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

✠ குமாரி எஸ். லதாஸ்ரீ, ஈரோடு
? சிவானந்த விஜயலக்ஷ்மியின் உபந்நியாசத்தை ரசித்ததுண்டா?
! சிரிப்புக் கதைகள், அரசியல் கவடபு போன்றவற்றால் அன்றிப் பன்மொழிப் புலமையுடன் பல்வேறு நூல்களிலிருந்து மேற்கோள்களை அநாயாசமாக எடுத்தாண்டு இறையுணர்வூட்டும் இனிய சாரீரத்தைக் கேட்கும்போது சிலிர்க்கிறேன். ஆனால் ஒன்று. ''புரியறதுன்னு நினைக்கிறேன்'' என்று அவர் அடிக்கடி அவையோரைப் பார்த்துக் கூறுவதைத் நிறுத்தி விட வேண்டும்!

✠ கே. எஸ். கணபதி சுப்பிரமணியம் சென்னை-45
? இரண்டுவாரம் முன் ராதாகிருஷ்ணனைப் பற்றி தராசு சர்க்காஸ்டிக்காக எழுத இந்த இதழில் அதே ராதாகிருஷ்ணனுக்குப் புகழ்மாலை! கல்கி கூட தடம் புரளுமா?
! அது அவர் பதவி உயர்வு பற்றியவிண்டல். இது அவர் நகைச் சுவை உணர்வு பற்றிய கண்டல்! இரண்டையும் தனித் தனியே பகுத்துப் பார்த்து ரசிக்கக் கற்றுக்கொள்ளுங்களேன்!

✠ எஸ். பி. குணசேகரன், வடகாடு
? அரசியலில் விசித்திர மனிதர்கள் யார்?
! மேற்கு வங்கத் தேர்தலில் தங்கள் கட்சி படுதோல்வியுற்றதைக் கண்ணியமாக ஏற்



⌘ அன்னை தெரசா



⌘ சிவானந்த விஜயலக்ஷ்மி



⌘ "அம்மா"

றுப் பொறுப்புள்ள எதிர்க் கட்சியாக இயங்கத் தெரியாத இ. காங்கிரஸ் எம்.எல். ஏக்கள் விசித்திரமான பேர்வழிகள். மேற்கு வங்க சட்டசபைத் தொடரைத் தொடங்கி வைக்க வந்த ஆளுநருக்குக் கருப்புக்கொடி காட்டி தேசிய கீதம் ஒலிக்கும்போதே அவரைத் திருடன் என்றும் ஆளும் கட்சியின் கைப்பாவை என்றும் ஏசியது அவர்களின் விசித்திரமான போக்கு. ஆளுநரின் கார் முன் படுத்தும் அதில் இருந்த தேசியக் கொடியைப் பிடுங்கி எறிந்ததும் அதி விசித்திரம். இவர்களை ஜனநாயக மரபு பேணுமாறு கட்டுப்படுத்தாத தில்லி தலைமை அதி அதி விசித்திரம்!

⌘ எஸ். முல்லை மணாளன், தென்காசி ★
? கவர்ச்சி ஆபாசம் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?
! அமெரிக்கா சென்ற அன்னை தெரசா 20,000 மாணவ மாணவிகள் அடங்கிய மாபெரும் கூட்டத்தில் உங்கள் கன்னித் தன்மையையும் பிரம்மச்சரியத்தையும் காத்துக்கொள்ளுங்கள் என்று உருக்கமாக வேண்டிக் கொண்டார். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒருவருக்கொருவர் வழங்கிக் கொள்ளக்கூடிய மிகப் பெரிய வெகுமதி கன்னித் தன்மையும் பிரும்மச்சரியமும் தான் என்று அறிவுறுத்தினர். அபார்ஷன் தான் உலகிலேயே மிகப் பெரிய கொடுமை என்றார்.

இப்படி நமது மாணவ மாணவியரிடையேயும் வெகு சீக்கிரம் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும் விதத்தில் நம் பத்திரிகைகளும் சினிமாவும் இருந்தால் அது ஆபாசம்; இல்லையெனில் கவர்ச்சி.

⌘ ஏ. கே. நாசர், லெட்சுமாங்குடி
? இலக்கியம் பொழுதுபோக்குக் கருவியாக இருக்க வேண்டும். இலக்கியம் கருத்துச் செறிவுடையதாக இருக்க வேண்டும். எது சரி?
! இலக்கியம் இரண்டுமாக இருக்கவேண்டும்.

⌘ ஜி. சிவகுருநாதன், விழுப்புரம்
? நாம் பஸ்ஸில் போகும்போது வண்டி நிற்கிறென்றுநின்றால் முன்னால் தள்ளப்படுகிறோமே, ஏன்?
! விஞ்ஞானப் பள்ளிப் பாடம் நினைவிருக்கிறதா என்று சோதிக்கிறீர்கள் போலும்! பஸ்ஸின் வேகத்தில் நாம் நகர்ந்துகொண்டிருக்கிறோம். பஸ் பிரேக் போடப்பட்டு நின்றுவிடுகிறது. ஆனால் நமது இயக்கம் தொடர்கிறது. முன்னால் தள்ளப்படுகிறோம்.

⌘ ஜபைப்பன், மணலூர்
? ஆனால்... இந்த வார்த்தை இல்லாவிடில்...?
! திண்டாட்டம்; ஆனால்... இருக்கிறதே!

⌘ இரா. புதுவை வேறு பாஸ்கரன், புதுச்சேரி
? படித்தவர்களே பாரினில் வேலை இன்றித் தவிக்கும் போது படிப்பவர்களாகிய நாங்கள் மேலும் படிக்கத்தான் வேண்டுமா? என்று மனமுடையும் மாணவர்களுக்குத் தாங்கள் கூறுவது என்ன?
! இரண்டையும் இணைத்துப்பார்க்காதீர்கள். வேலை வாழ்க்கையை ஓட்ட; படிப்பு அதனை அர்த்தமுள்ளதாக்க.

⌘ நீலமலை வி. அறிவொளி, நடுவட்டம்
? 'அஸால்ட்' என்ற ஆங்கிலப் பதத்திற்கு அலட்சியம், கவனமின்மைதான் சரி என நானும் எதிர் தாக்குதல்தான் சரி என எனது நண்பரும் 'சேலஞ்ச்' செய்து கொண்டுள்ளோம் எது சரி?
! இருவருமே தவறுதான். அஸால்ட் என்பதற்குப் பொருள் தாக்குதல் என்பதே. டிபன் காப்பி 'பெட்' கட்டியிருந்தால் எனக்குத்தான் வாங்கித் தரவேண்டும்.

⌘ ஆர். பார்த்திபன், புதுவை
? மனத்தை ஒரு நிலைப் படுத்தி நிம்மதியாய் இருக்கத் தாங்கள் கூறும் அறிவுரை?
! யோகாசனம், தியானம் — நல்ல ஆசானைப் பெற்றுப் பழகுதல்.

★ ரூ 10 பரிசு பெறுபவர்:

எஸ். முத்துக்குமாரசுவாமி
(முல்லைமணாளன்)
17/1, மேற்குமாசி வீதி
தென்காசி - 627 811

தராசு

ரயில்வே போலீஸ் பின்தொடர ஒரு கும்பல் அந்த அறைக்குள் நுழைந்தது.

டிக்கட் இல்லாதவர்கள், முதல் வகுப்பில் இரண்டாம் வகுப்பு டிக்கட்டுடன் பிரயாணம் செய்தவர்கள், காலாவதியாகி விட்ட சீசன் டிக்கட்டை வைத்துக் கொண்டு பிரயாணம் செய்த இளவட்டங்கள்—

அந்த ஸ்டேஷனில் வெயிட்டிங் ரூம் இந்த மாதிரி மொபைல் கோர்ட் ஸ்தலமாக அடிக்கடி மாறிவிடும். வட்ட வடிவ மேஜையின் மீது இடது கையை ஊன்றிக் கொண்டு நான் விசாரணை செய்து கொண்டே அபராதத் தொகைகளைச் சொல்லிக் கொண்டே வருவேன். இருப்பவர்கள் கட்டுவார்கள்; இல்லாதவர்கள் யார் மூலமாவது சொல்லி அனுப்புவார்கள்.

இந்தக் கும்பலில் மாட்டிக் கொள்ளும் சிறுமியர்கள், பெண்கள் — இவர்களிடம் தான் அதிக ஜாக்கிரதையுடன் செயல்பட வேண்டியிருந்தது.

என் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்தபடி மாட்டிக் கொண்டவர்களை ஒரு முறை பார்த்தேன்.

''என்ன ஸார்... டிக்கட்தான் இருக்கே... என்னமோ... கூட்டமாயிருக்குதுன்னு முதல் வகுப்புலேதான் ஏற முடிந்தது.''

''...ஆமா ஸார்... எங்களை மாதிரி அப்பாவிகளைப் பிடிக்கறீங்க... ரௌடித்தனமா ஒருத்தர் பேசிட்டு, தபால்னு அந்தப் பக்கம் குதிச்சுட்டு ஓடிட்டார். என்ன செய்ய முடிஞ்சுது?''

''ஆபீஸ் போற அவசரம் ஸார்... சீசன் டிக்கட்லே கையெழுத்துப் போடலே...''

அபராதம் கலெக்ட் பண்ணி, ரசீது போட ஆரம்பித்தேன்.

''....ஸார்...ஸார்.... எழும்பூர் ஸ்டேஷன்லே சாம்பசிவம் இருக்காரே... அவர் அக்கா பையன் ஸார் நான்... இப்ப வேணும்னாலும் போன் பண்ணுங்க ஸார்....''

பொட்டில் அடித்த மாதிரி இருந்தது எனக்கு. மீண்டும் கலாவைப் பார்த்தேன்.

பகீரென்றது. இதோ நிற்கும் இவள்...

போலீஸ்காரர்கள், டிக்கட் செக் செய்யும் அதிகாரிகள், மாட்டிக்கொண்ட புண்யாத்மாக்கள் என்னைச் சுற்றி யிருக்கிறார்கள்....

அபராதம்

பாமா கோபாலன்

எனக்கு அதிர்ச்சி. இள வயதுப் பெண். இவளா? கலா! மாட்டிக் கொண்டுவிட்டாளா? வேலைக்குப் போகும் பெண். மாசக் கடைசி. கையில் பணம் இல்லையா?

தற்செயலாக அவளது பார்வை என்மீது படிந்தது. அவள் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். தப்பித்து விடலாம் என்ற எண்ணமா? கூடாது. தப்ப விடக் கூடாது. தவறு செய்தவர்கள் தண்டனை பெறத்தான் வேண்டும்.

வேண்டுமென்றே அவள் முறை வரும்போது தாமதப்படுத்தினேன். என்ன திமிர் இவளுக்கு? என் குடும்ப மானம் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் இப்படி ஒரு காரியம் செய்து விட்டாளே! பிரகாஷுடன் ஓடிப்போனவள்தானே? கல்யாணமும் முடிந்து விட்டது என்று கேள்விப்பட்டேனே? இவளை...இவளை...

''ஸார்... காப்பி ஆறிப் போவுது...'' அஸிஸ்டெண்ட் சொல்ல, கண்ணாடி டம்ளரை எடுத்துக் கொண்டேன்.

அந்த அறைக்குள் ஏக சப்தம்.

கலாவைப் பார்த்தேன். ஹாண்ட் பாக்கிலிருந்து ஒரு போட்டோவை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

என் முதுகுத் தண்டு சில்லிட்டது.

சிறிது நேரம் முன்பு யாரோ ஒருவன் கெஞ்சினானே.... சாம்பசிவன் பெயரைச் சொல்லி... அதைப் போல் இந்தக் கலா...

பெங்களூரிலோ, திருச்சியிலோ, எங்கோ தன் கல்யாணத்தை நடத்திக் கொண்டு, என் குடும்ப மானத்தைத் தூக்கி எறிந்தவள்... இப்போது சென்னையில் ஸ்க்வாட் மூலம் பிடிபட்டிருக்கிறாள். அபராதம் போட வேண்டும். அந்தச் சமயத்தில் விசாரிக்கும்போது—

''மாமா... சௌக்கியமா? வீட்டிலே அத்தை — என் மாமியார் — சௌக்கியமா? உங்க பிள்ளை பிரகாஷ், மெட்ராஸ் டிரான்ஸ்ஃபர் ஆகி வந்து விட்டார். எனக்கும் மெட்ராஸ்லேயே கஷ்டப்பட்டு மாற்றல் வாங்கியாகி விட்டது.''

—என்றெல்லாம் இந்தப் பெண் கலா பேசி இங்கே என் மானத்தை வாங்கி விட்டால்? என்ன வழி?

அவள் முறை வந்தது. கண்களில் ஜலம். அவளைப் பிடித்த டிக்கட் பரிசோதகர் ஏதோ பேப்பரை என்னிடம் காட்டிப் பேச வந்தார்.

நான் அவரைத் தடுத்து அந்தப் பேப்பரை மடித்துக் கொடுத்தேன். நாளுக்காக எழுதிக் காண்பித்திருப்பாள்... என் மாமனார்தான் அவர்... இப்படி ஏதாவது—

''ஓகே. சரவணன், இந்தப் பெண் எனக்குத் தெரிந்த குடும்பத்துப் பெண்....''

''ஸார்... விட்டுடலாமா? பாவமாயிருக்கு.'' என்று மெல்லக் காதருகே சொன்னார்.

''நோ...நோ... அபராதம் கட்டியே ஆகணும். எனக்குத் தெரிந்த குடும்பம்... ம்... நானே கட்டிடறேன். தப்பு செய்தால் தண்டனைதான். யாராய் இருந்தால் என்ன?''

பர்ஸில் இருந்து பணம் எடுத்துக் கட்டினேன். ரசீதை அவளிடம் கொடுத்தேன். கலா, சற்றும் எதிர்பார்க்காத சமயத்தில் என் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள். புத்திசாலிப் பெண். மானசீகமாக ஆசீர்வாதம் செய்தேன்.

அவள் அறையை விட்டு வெளியே போன பிறகு, டிக்கட் பரிசோதகர் அந்தப் பேப்பரை நீட்டினார். வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். கடவுளே! மூன்று மாசம் முன்பு ஜுரத்தில் நாக்கு இழுத்துக் கொண்டு பேச்சுப் போய்விட்டது!—

பளாரென்று என் முகத்தில் விழுந்த அறை போல இருந்த வாசகம். இப்போது இவள் ஊமையா?

பேசிவிடுவாளோ என்ற பயத்தில் நானே அபராதம் கட்டினேனே? இவள் காதல் திருமணத்துக்கு மறுப்புச் சொன்னதற்காக ஆண்டவன் என்னை அபராதம் கட்ட வைத்தானா?

நான் ஊமையானேன்.

குற்றம் செய்துவிட்டுச் சிறைச்சாலைக்கு வரும் கைதிகளுக்கு வரவேற்பு கொடுக்கிறார்கள். சிறையில் உள்ள வசதிகள் பற்றி புத்தகம் ஒன்று கொடுக்கிறார்கள். எந்தத் தொழிலையும் கற்றுக்கொள்ள உதவி செய்கிறார்கள். உங்கள் வரவு நல்வரவாகட்டும். உங்கள் வாழ்க்கை இங்கு சௌகர்யமாக இருக்கட்டும்' என்கிறார்கள்.

இத்தனையும் நடப்பது அர்ஜென்டைனாவில்!

-எஸ். கிருஷ்ணன்





ஹரே கிருஷ்ணா!

சென்னையில் பவனி வந்த ரதமும் ஹரே கிருஷ்ண பக்தர்களும்

'**ப**கவான் ஸ்ரீ ஜகந்நாதரைச் சென்று தரிசனம் செய்ய உங்களுக்கு நேரமில்லாததால் ஜகந்நாதரே வந்து உங்களுக்குத் தரிசனம் தருகிறார்' என்று பெரிதாக விளம்பரம் செய்து அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தினர் (ISKCON) சென்னை ராஜாஜி ஹாலிலிருந்து ஒரு ரத உற்சவம் ஏற்பாடு செய்தனர்.


காவி உடை, மழுங்க மழிக்கப்பட்ட தலையில் சின்னதாகக் குடுமி, கழுத்தில் துளசி மாலை, எழும்பி எழும்பிக் குதித்தபடி வாயெல்லாம் 'ராமா... கிருஷ்ணா' நாமஸ்மரணை இப்படியாக மூன்று நான்கு வயதுச் சிறுவன் முதல் நாற்டதுவயதுக்கும்மேற்பட்ட பெரியோர் வரை பல மேல் நாட்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் அமெரிக்கர்கள்.

1965ல் கல்கத்தாவாசிஒருவர் அமெரிக்கா சென்று பக்தி வேதாந்த ஸ்வாமி பிரபுபாதாவாகி 1966ல் அங்கு ஸ்தாபித்த கிருஷ்ண பக்தி இயக்கம்தான் இது. இவ்வியக்கத்துக்கு இன்று உலகெங்கும் லட்சக்கணக்கில் ஆதரவாளர் உள்ளனர். ஸ்ரீ பிரபுபாதர் 1977ம் ஆண்டு மறைந்த பின்பு 13 பிரதம சீடர்கள் இயக்கத்தில் பொறுப்பேற்று உலகெங்கும் கிருஷ்ண பக்தியைப் பரப்பி வருகின்றனர்.

நியூயார்க்கில் ஒரு மின் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த ரிச்சர்ட் எனும் இளைஞர் 1973ம் ஆண்டு இவ்வியக்கத்தைப் பற்றி அறிந்து பிறகு பிரபுபாதரைச் சந்தித்துகிறிஸ்துவ மதத்தைவிடுத்து இதில் ஈடுபட்டு முக்கிய பொறுப்பேற்று உள்ளார். அவரது தற்போதைய பெயர் ஸ்ரீ ரகுநாத தாஸ். 35 வயது பிரமச்சாரி.

இவரிடம் பேச்சுக் கொடுத்தோம்.

''நீங்கள் இவ்வியக்கத்தில் எதனால் சேர்ந்தீர்கள்?''



''கிருஷ்ண பக்தி மன அமைதியை அளிப்பதை உணர்ந்து கொண்டேன். அதனால்''

''முதல் முதல் இவ்வியக்கம் உங்களை எப்படி ஈர்த்தது?''

''இவ்வியக்கத்தினர் வெளியிடும் புத்தகங்களைப் படித்ததும் மனத்துக்கு இதமாக இருந்தது. குரு மகராஜ் அவர்களை (ஸ்ரீ பிரபுபாதர்) சந்தித்தேன். பகவத் கீதையைப் படித்தேன். எனது அஞ்ஞானங்கள் நீங்கி மனத்தில் ஒளி பரவியது.''

''பைபிளுக்கும் பகவத்கீதைக்கும் அப்படி என்ன வித்தியாசத்தைக் கண்டீர்கள்?''

''பைபிளில் எனது பல கேள்விகளுக்குக் கிடைக்காத பதில்கள் பகவத் கீதையில் கிடைத்தன.''

''நீங்கள் வணங்கும் கிருஷ்ணர், பல தாரங்கள் உடையவர் ஆயிற்றே... அது மாதிரி பல தாரங்களை உங்கள் இயக்கத்தினரும் கொள்வதை ஆதரிக்கிறீர்களா?''

''பல தாரங்கள் என்ன, ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்குசாஸ்திரப்படி 16,108தாரங்கள். பகவான் செக்ஸுக்காகப் பல தாரங்களை மணக்கவில்லை. லோகத்தின் ரட்சகர் அவர். வாழ்க்கையின் தத்துவங்களை மக்களுக்கு உணர்த்த அவதரித்தவர். பிரேமையின்

ஸ்வரூபம் அவர். பலவித பலவீனங்களுக்கு அடிமைப்பட்ட மனிதனும் அவரைப் போல் பல தாரங்கள் மணப்பதற்கு அனுமதிப்பீர்களா? எனக் கேட்பது அர்த்தமற்றது.''

''உங்கள் இயக்கத்தில் சேர எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்?''

''புகை பிடிக்கக் கூடாது. குடிக்கக் கூடாது. மாமிசம் உண்ணக் கூடாது. சூதாட்டங்களில் ஈடுபடக் கூடாது. செக்ஸ் கூடாது. பகவத் கீதையை வாழ்க்கை நெறியாக ஏற்று ஸ்ரீ கிருஷ்ண பகவானை வழிபட வேண்டும்.''

''பிரம்மச்சாரிகள் மட்டும்தான் இவ்வியக்கத்தில் சேர முடியுமா?''

''அப்படியொன்றும் இல்லை. பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய எந்த நிலையில் உள்ளவரும் சேரலாம்....''

''செக்ஸ் கூடாது என்கிறீர்களே... கிரஹஸ்தர்களால் எப்படி முடியும்?''

''அதற்காக ஏங்கித் திரியாமல் மனத்தை அடக்க வேண்டும் என்பதே கருத்து. அடியோடு விலக்க வேண்டும் என்பதல்ல.''

''நீங்கள் பிராமணர்களா?''

''ஆமாம்.''

''பூணூல் போட்டதால் மட்டும் பிராமணனாகிவிட முடியாது என்று ஒரு வைஷ்ணவ மதகுரு சமீபத்தில் கூறியுள்ளாரே...''

''நாங்கள் பிராமணர்களுக்கும் மேம்பட்டவர்கள். பிறப்பு காரணமாகத்தான் ஒருவர் பிராமணராக முடியும் என்று நாங்கள் கருதவில்லை. எங்களைப் போல் நன்னெறிகளைக் கடைப் பிடிப்பர்கள் பிராமணர்களே!''

''விவரமறியாத உங்கள் குழந்தைகளையும் இதில் ஈடுபடுத்துகிறீர்களே... நாளை அவர்களுக்கு இது தங்கள் பிராசீனமான மதமல்ல என்று தெரிய வரும்போது....''

''நீங்கள் ஏன் உங்கள் பிள்ளைகளைக் குறிப்பிட்ட பள்ளிக்கும், குறிப்பிட்ட படிப்புத் துறைக்கும் அனுப்புகிறீர்கள்... பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தானே! அம்மாதிரிதான் நாங்களும்... கிருஷ்ண பக்தியும், பகவத் கீதையும் பிள்ளைகளின் நெறியான வாழ்க்கைக்கு ஒளி விளக்குகள் என்று நம்புகிறோம்.''

''உங்கள் இயக்கத்தில் சேராதவர்கள் கெட்டு அழிவார்கள் என்பது தங்கள் முடிவா?''

''நிச்சயமாக... இன்று இல்லா விட்டால் நாளை கெட்டு அழிவார்கள்... கடைசியில் கிருஷ்ண பக்திதான் அவர்களைச் சீர்படுத்த முடியும்... அவர்கள் இங்கு ஒரு நாள் வந்துதான் தீர வேண்டும்...''

''இம்மாதிரியான மிகைப்படுத்தப்பட்ட பக்தி இளைஞர்களின் ஆக்கத் திறனையும் (Creative ability) விஞ்ஞானத் திறனையும் பாதிக்காதா?''

''தற்போதைய விஞ்ஞானம் ஆக்கப்பூர்வமாக என்ன செய்து விட்டது? அழிவுக்குத்தான் அடிகோலுகிறது. உயிர் பொருளிலிருந்து வருகிறது என்கிறது விஞ்ஞானம். உயிர் உயிரிலிருந்து வருகிறது என்கிறது மதமும். தெய்வ நம்பிக்கையும். மத உணர்வும் கிருஷ்ண பக்தியும்தான் இவ்வுலகை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.''

''ஹரே கிருஷ்ணா என்று உச்சரிப்பதனாலேயே இறை பக்தி வந்துவிடுகிறதா?''

''நிச்சயமாக. நாமஸ்மரணையிலேயே கிருஷ்ண பரமாத்மாவுடன் தொடர்பும் அதனால் மன அமைதியும் நிச்சயமாகக் கிடைக்கிறது.''

''இவ்வியக்கத்தில் நீங்கள் சேராதிருந்தால்....?''

''என் வாழ்க்கை இருள் மயமாகியிருக்கும்.''

''இங்கு தங்களை எல்லோரும் வேடிக்கை பார்க்கிறார்களே...''

''வேடிக்கை பார்க்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பமும். பிறகு சிந்தனை பிறக்கும்... நாளாவட்டத்தில் ஞானம் உதயமாகும்.''


''பிற்பகல் மூன்று மணிக்கு ரத உற்சவம் என்று அறிவித்துவிட்டு ஆறு மணிக்கு மேலாகிறதே...''

''என்ன செய்வது Indian standard time அனுசரிக்க விருப்பப்பட்டோம். ஆனால் Indian stretching time ஆகி விட்டது.''

இப்படியாக ஸ்ரீ ரகுநாத தாஸ் எவ்வித தயக்கமும் இன்றிப் பதில் சொல்லிக் கொண்டே போகிறார். பதில்கள் அறிவு வெளிப்பாட்டுடன் கூட மனப் பக்குவத்தையும், உறுதியான இறைப் பற்றையும் வெளிப்படுத்துகின்றன. வார்த்தைக்கு வார்த்தை பகவத் கீதையிலிருந்து அவர் எடுத்துச் சொல்லும் ஸ்லோக விளக்கங்கள் நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துகின்றன.

இது செயற்கையில்லை... நிஜம்... பலவித ஆபாசங்கள் நிறைந்த இவ்வுலகச் சூழ்நிலையில் ஒரு பரிசுத்த அமைதியைப் பெற வழி கண்டு கொண்டுவிட்ட இளைஞனின் நிறைவு என்பது மனத்துக்குப் புரிகிறது.

பேட்டி: ரங்கநாயகி - கௌசல்யா
புகைப்படம்: எம்.என். ராஜன்



தப்பில்லையோ !

சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒரு ரூபாய் தபால் தலையில் "SOLIDARITY WITH THE PALESTINIAN PEOPLE" என்ற கோஷம் எழுதப்பட்டுள்ளது. ஒரு அந்நிய நாட்டு விவகாரத்தை நமது நாட்டுத் தபால் தலையில் பொறிப்பது தப்பில்லையோ? இரா. கந்தையா

சினிமா

எ

அகர வரிசைப் பேட்டி: சிவகுமார்



என்னெஸ்கே :

எனக்கு ஒரு குறை. இவரை நான் நேரில் பார்த்ததில்லை. நான் சென்னை வருவதற்கு முந்தைய ஆண்டு இவர் காலமானார்.

என்னெஸ்கே என்னைச் சிரிக்க வைத்த காட்சி எது என்று சொல்வதை விட அவர் என்னை அழவைத்த காட்சி எது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். 'தங்கப் பதுமை'யில் சிவாஜி கணேசன் இவரது முகத்தில் பாலை வீசிக் கொட்டுவார். படம் வெளி வரும்போது இவர் உயிரோடு இல்லை. ஆகையால் அக்காட்சி என்னை அழ வைத்து விட்டது.

எலி :

எலி என்றதும் என் அண்ணன் நினைவு வருகிறது. நான்கு வயதுச் சிறுவனாக நான் இருந்த சமயம் பிளேக் நோய் கண்டு இறந்து போனான்.

சினிமாவை நினைவுபடுத்திக் கொண்டால் 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி' படப்பிடிப்பு அத்தனூரில் நடந்தபோது ஒரு காட்சிக்காக 50 எலிகள் தேவைப்பட்டன. புகை மூட்டி எலிகளைப் பிடித்தோம். நானும் பிடித்தேன்.

எல்லோரா :

ஓவிய மாணவனாக இருந்தபோது இங்கே போயிருக்கிறேன். கைலாசநாதர் கோவிலில் ஒரே கல்லால் மேலும் கீழுமாகச் செதுக்கப்பட்டு அந்தரத்தில் நடமாடிக் கொண்டிருந்த நடராஜர் சிலை அமைக்கப்பட்ட கைவண்ணத்தைப் பார்த்து வியந்து போய் நின்றேன்.

என் ராசி :

என் ராசியைப் பற்றி எனக்குத் தெரியாது. அதில் நம்பிக்கையுள்ள நண்பரின் ஆலோசனைப்படி ஆர். ஷிவகுமார் (R. SHIVAKUMAR) என்றுதான் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடுகிறேன். எட்டாம் நம்பருக்கும் எனக்கும் ஒரு ராசி உண்டு. சென்னைக்கு வந்தது 8ம் தேதி. நான் குடி வந்தது 17ம் நெம்பர் வீடு. இந்த வீட்டை விலைக்கு வாங்கியதும் 8ம் தேதிதான்.

எலிமெண்டரி ஸ்கூல் :

நான் படித்தது திண்ணைப் பள்ளிக்கூடம் தான். படித்த ஊர் காசங்கல். வாத்தியார் பெயர் கல்யாணசாமி நாயுடு. வீசை, மாகாணி வாய்ப்பாடு படித்த காலம் அது. ஒரு நாள் சக மாணவன் ஒருவனுடன் பேசி விட்டுச் சாப்பிட வீட்டுக்குப் போனேன். திரும்பி–வரும்போது அவன் பிணமாகக் கிடந்தான். பருத்தி அம்பாரி மீது ஏறிய அவன் அதன் நடுவில் புதையுண்டு மூச்சுத் திணறி இறந்துபோனதாகச் சொன்னார்கள்.

ஒரு மரணத்தை நேருக்கு நேர் நான் பார்த்தது அதுதான் முதல் தடவை.

எம்.ஜி.ஆர்.

நான் முதன் முதலாக இவரைப் பார்த்தது 1958ல். அப்பொழுது நான் மோகன் ஆர்ட்ஸில் உதவி ஓவியராக இருந்தேன். கச்சா பிலிம் இறக்குமதி தடையை எதிர்த்து ஊர்வலம் வருகிறது எனக் கேள்விப்பட்டு ஆயிரம் விளக்குப் பகுதி தர்க்கா அருகே நின்று கொண்டு பார்த்தேன்.

நான் நடிகனான பிறகு இவருடன் சேர்ந்து நடித்த முதல் படம் 'காவல்காரன்'. மேக்கப் போட்டுக் கொண்டு முதன் முதலாக செட்டிற்குள் நுழைந்தபோது இவரும் நம்பியாரும் இரு நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். என்னைப் பார்த்ததும் இன்முகத்துடன் எழுந்து எனக்கு ஒரு நாற்காலி போடச் சொல்லி அதில் உட்காரச் சொன்னார். எளியவனை – புதியவனை – தமக்குச் சமமாக அவர் உட்காரச் சொல்லி உபசரித்தது கண்டு என் உள்ளம் பூரித்தது.



ஏழாவது மனிதன்

மகா கவி பாரதியார் எங்கே சிமெண்ட் தூசி எங்கே!

இந்த இரண்டுக்கும் 'பாலம்' கட்டியிருப்பது சாமர்த்தியம்தான்.

பாலசந்தர் 'தண்ணீர்' பிரச்னையை எடுத்துக்கொண்ட மாதிரி இவர்களுக்குத் 'தூசு!'

சிமெண்ட் தொழிற்சாலைப் புகைக்கூண்டு வழியே எழும் தூசு அக்கிராமத்தின் சுகாதாரத்தைக் கெடுக்கிறது. ஒரு இறப்பிற்குப் பிறகு தொழிலாளர்களை உசுப்பி விடுகிறான் ஆனந்த். யூனியன், போராட்டம், ஊர்வலம், அரசியல்வாதியின் தலையீடு இத்தனைக்கும் நடுவே காதலும் தலை நீட்டுகிறது. கடைசியில் தொழிலாளர்கள் பக்கம்வெற்றி.

என் கணக்குப்படி இப்படியொரு பிரச்னையைத் துணிச்சலோடு தேடிப் பிடித்த தயாரிப்பாளர் பாலு என். சண்முகம் முதல் மனிதனாகிறார்.

எடுத்துக் கொண்ட தூசுப் பிரச்னைக்கு பாரதியாரைத் துணை சேர்த்துக்கொண்டு பெருமை சேர்த்த இரண்டாவது மனிதன் இப்பட இயக்குனர் கே. ஹரிஹரன்தான்.

அப் பாடல்களைப் படமாக்கி யிருக்கும் நேர்த்தியிலும் கிராமியச் சூழ்நிலைகளைத் தத்ரூபமாக நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்தியிருக்கும் கைவண்ணத்திலும் ஒளிப்பதிவாளர் தர்மா மூன்றாவது மனிதனாகிறார்.

பாரதியார் பாடலுக்குப் புதிய கோணத்தில் மெட்டு அமைத்த வைத்தி லக்ஷ்மன் நான்காவது மனிதன்.

பேனாவில் மசி தீர்ந்த மாதிரி 'நறுக்'கென வசனங்கள் எழுதியுள்ள சோமசுந்தரேஸ்வரரும், அருண்மொழியும் ஐந்தாவது, ஆறாவது மனிதர்களாகிறார்கள்.

ஏழாவது மனிதன்?

சந்தேகமே இல்லை! கதாநாயகன் ரகுவரன்தான்! இயற்கையான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இவ்வளவுதானா? இல்லை! இன்னமும் பல 'புதிய மனிதர்கள்' கதையோடு இணைந்து நிற்கிறார்கள். ரத்னா, அனிதா மெத்யூஸ், ரூபா சௌடா, தீபக், சத்யஜித், சத்யேந்திரா, ரங்கா, அனில் குமார், ரமணமூர்த்தி, பாலாசிங், 'வாத்தியார்' ராமன், குகன், வலம்புரி நாகராஜன், ஓவியர் தாமரை, அர்ஜுன் கிருஷ்ணன், சாரதி, கலோசனா, விஜயா, பேபி லதா... யதார்த்தமான மனிதர்கள் எண்ணிக்கையில் நீண்டுகொண்டே போகிறார்கள்.

படத்தில் குறைகள் இல்லாமல் இல்லை. செந்தாமரை கொலை செய்யப்பட்ட பிறகு பரபரப்பே இல்லை. கிராமமே விழித்துக் கொள்ள வேண்டாமா?

தொழிற்சாலையைக் கைப்பற்றிக்கொண்ட தொழிலாளர்கள் தூசுப் பிரச்னையை ஒழிக்க என்ன முடிவு எடுத்தார்கள்? இப்படிப் பல...

என்றாலும் ஏழாவது மனிதன் வித்தியாசமான எண்ணத்தில் பிறந்திருக்கிறான் என்பதற்காகக் குறைகளை மன்னித்து அவனை வரவேற்கலாம்.

● ஹேமமாலினியின் தாயார் ஜெயா சக்கரவர்த்தி தான் தயாரித்த ''பண்ணைபுரத்து பாண்டவர்கள்'' படத்தைச் சில பத்திரிகையாளர்களுக்குத் திரையிட்டுக் காட்டிவிட்டுச் சொன்னார்:

''வினியோகஸ்தர்களுக்கும் எங்களுக்கும் வியாபார ரீதியான பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. விரைவில் படத்தைத் திரையிட எல்லா ஏற்பாடுகளும் செய்து வருகிறேன்...''

சேரிப் பெண்ணாக வந்து நடிப்பில் சக்கைப் போடு போட்டிருக்கிறார் சரிதா. காலம் சென்ற சுருளிராஜனும் தொங்கு மீசையுடன் சிரிக்க வைத்துள்ளார். அருமையான சேலன்ஜ் சப்ஜெக்ட். கங்கை அமரனின் இசை. இத்தனையும் இப்படத்தில் இருந்தும் தயாரிப்பாளரை வினியோகஸ்தர்கள் கண் கலங்க வைத்திருக்கிறார்கள். என் என்று புரியவில்லை.



நினைவெல்லாம் நித்யா..



கவிஞர் அன்றே சொன்னார்!

● சமீபத்தில் காலம்சென்ற படாஃபட் ஜெயலட்சுமி நடித்த ஒரு படத்தில் இடம் பெற்ற **வாலி** பாடல் இது:
''சுகம் எதிர்பார்த்துக் கிடைக்காத தலைவி
ஏக்கங்கள் உணராத தலைவன் — இதை
இணை சேர்த்து வைத்தானே இறைவன்
அவன் எடைபோட முடியாத ஒருவன்''

● ஜெமினி ஸ்டுடியோ மதில் சுவர் முழுவதிலும் 'அம்மா', 'சகல கலாவல்லவன்' என்னும் போஸ்டர்கள் கொட்டை எழுத்தில் மாறி மாறி எழுதப்பட்டுள்ளன. கண்ணை உறுத்துகிறது என்றாலும் தாறுமாறாக போஸ்டர் ஒட்டிப் பாழடிப்பதற்கு இது தேவலாம்.


[தயவுசெய்து கடைசியில் உள்ள பின் குறிப்பு வரை படிக்கவும்.]

● காதல் காட்சிகளைப் படமாக்குவதில் ஸ்ரீதருக்கு நிகர் ஸ்ரீதர்தான் என்ற பெயரைக் காப்பாற்றிக் கொண்டுள்ளார்.
● காதலுக்குப் புதிய கோணம் படைத்துள்ளார் ஸ்ரீதர்.
● ஸ்ரீதரின் கண்டுபிடிப்புகளுக்கெல்லாம் சிகரம் வைத்த மாதிரி அமைந்து விட்டார் புது முகம் ஜி.ஜி.
● பாரதிராஜா படத்துக்கு மட்டும்தான் இளையராஜா விழுந்து விழுந்து இசை அமைக்கிறார் என்பதெல்லாம் சுத்தப் பொய். இந்தப் படத்திற்கு மியூசிக் தான் உயிர்நாடி.
● விலை உயர்ந்த கார், ரொக்கம் ஆயிரத்து நானூறு ரூபாய், ஒரு நண்பன், காதலி, ஒரி வீடு இத்தனையும் வைத்துக் கொண்டு காதலன் தனிக் குடித்தனம் நடத்துகிற பாங்கு இருக்கிறதே ஏ ஒன்.
● அடாடா! ரொம்ப நிறைவாக சார்த்திக் நடித்திருக்கிறார்!
● பாரதி ராஜாவுக்குத்தான் தெரியுமா! எனக்கும் 'அலைகள் ஓய்வதில்லை' மாதிரி ஒரு காதல் படத்தை எடுத்துக் காட்ட முடியும் என்பதை ஸ்ரீதர் நிரூபித்துள்ளார்.
● இந்தப் படத்தைப் பார்க்காதவர்கள் எல்லாருமே வருத்தப்பட வேண்டியவர்கள் தான்!

பின் குறிப்பு: மன்னிக்கவும். 'நினைவெல்லாம் நித்யா' படத்தைப் பார்த்து விட்டு ஸ்ரீதரைப் புகழ்ந்து எழுத வேண்டும் என ஆசைப்பட்டேன். எழுதிவிட்டேன்.

அப்படியானால், உண்மையான விமர்சனம்? 'நெகடிவ்' தான்!





பேசினால் பிழைத்தீர்கள்

எந்தத் தொழிலிலும் வெற்றி பெறுவது எளிது — உங்களுக்குப் பேசத் தெரிந்திருந்தால்! உங்கள் வாடிக்கையாளரை உங்கள் பேச்சினால் பிரமிக்க வைக்க வேண்டும். அல்லது குறைந்தபட்சம் குழப்பி வைக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு புரியாத வார்த்தைகளைப் போட்டுப் பேசுகிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு லாபம். இதைச் சமீபத்தில் இரண்டு மூன்று பேரிடம் சென்றபோது நான் அறிந்து கொண்டேன்.

• ஜோசியர் சோணாசலத்திடம் போயிருந்தேன். ஜாதகத்தைக் கொடுத்தேன்.

''....உம்... ஏழில் குரு. குரு தன் வீட்டில் இருக்கிறான். சனியைப் பார்க்கிறான். ஆனால் சுக்கிரன் நீசமாகி விட்டான். ரிஷப ராசியில் மிதுன அந்தரத்தில் சூரியன் உச்சமாகிறான்.''

''சூரியன் உச்சமானால் நல்லதா கெட்டதா?''

''புதன் எப்படி இருக்கிறான் என்பதைப் பொறுத்திருக்கு. எட்டாம் வீட்டில் இருக்கிறான். அது சந்திரனின் வீடு.''

''ஏதோ ஒரு வீட்டில் இருந்துவிட்டுப் போகட்டும். எனக்கு என்ன ஆகும்?''

''முதலில் இருபது ரூபாயை வையும்... குரு பார்வை சரியில்லை. சந்திரன் தன் சொந்த வீட்டுக்குப் போனால் உங்களுக்கு நல்ல காலம்''

''வெரி குட்'' என்று சொல்லிவிட்டு வந்தேன். 20 ரூபாய் அழுதுவிட்டோமே என்று தோன்றினாலும் அவரது ஞானம் என்னை வியப்படையச் செய்தது.

• டி. வி. மெக்கானிக் பத்ரிநாத்திடம் என் டிரான்சிஸ்டரைக் காட்டினேன். சரசர வென்று பிரித்தார்.

''ஐ.எஃப்.டி. போயிருக்கும்னு நினைக்கிறேன். டயோட் மாத்தணுமான்னு மல்டி மீட்டரை வச்சுப் பார்த்துத்தான் சொல்ல முடியும். ஐயாயிரம் ஓம்ஸ் நடுவிலே ஸோல்டர் பண்ணிடணும்...''

''எதையாவது பண்ணுங்க. பாடணும்.''

''டிரான்ஸ்ஃபார்மர் ஒபனாயிட்டதுபோல இருக்கு. ஃபெர்ரைட் ராட் புதுசா போட்டு காயிலைச் செக் பண்ணிப் பார்க்கணும். முப்பதுரூபாய் ஆகும்'' என்றார்.

முப்பது ரூபாய்க்கு இவ்வளவு செய்யப்போகிறார் என்ற திருப்தியுடன் ரூபாயைக் கொடுத்துவிட்டு வந்தேன்.

• சின்ன வழக்கு விஷயமாக வக்கீல் சட்டநாதனைப் பார்க்கப் போனேன்.

''...ஒன்றும் கவலைப்படாதீங்க. கேஸ் ரொம்ப ஸ்ட்ராங்காக இருக்கு. சுப்ரீம் கோர்ட் வரை போகலாம். முதலில் ஒரு ரிட் போடலாம். சி.ஆர். பி. சி.யில் இடம் இருக்கான்னும் பார்க்கிறேன். ரங்கசாமி வர்ஸஸ் ஸ்டேட் ஆஃப் காட்டாங்குளத்தூர் கேஸ்லே எவிடன்ஸ் ஆக்ட்டுக்குக் கொடுத்திருக்கிற இன்டர்பிரடேஷன் நமக்குச் சாதகமாக இருக்கும். ஹேபியஸ் கார்பஸ் அப்ளை ஆகாது. ஆனால் ஜூரிஸ்புரடன்ஸையும் புரட்டிப் பார்க்கணும். முதலில் நூறு ரூபாய் பீஸை வையுங்க. எஃப். ஐ. ஆர். காபி கேட்கலாம். ஆனால் விட்னஸ் ஹாஸ்டைல் ஆகிவிட்டால் ஆபத்து... சரி....முதலில் டைம் பார் ஆகிறதுக்குள்ளே ஃபைல் பண்ணிடலாம்....''

''இவ்வளவு வேலை இருக்கிறது. நூறு ரூபாய்தான் கேட்கிறார். நல்ல மனிதர்'' என்று நினைத்துக்கொண்டு வீடு திரும்பினேன்.

இந்த உத்தியைப் பின்பற்றி ஒரு எடிட்டரிடம் என் கதையைக் கொடுத்துவிட்டுப் பேசினேன்:

''ஒரு அழுத்தமான கேரக்டரைப் பரவலாக உலவ விட்டு, டீப் ஸ்டெடி பண்ணி சிச்சுவேஷன்லே பஞ்ச் கொடுத்திருக்கேன். கதையின் அட்மாஸ்ஃபியருக்காக நிறைய ஃபீல்ட் ஒர்க் பண்ணி, ஒரு இன்-டெப்த் அனலிஸிஸ் செஞ்சு ஒரு கான்ஸெப்ட்டை லாஜிக்கலா அப்ரோச் பண்ணி எழுதியிருக்கிறேன்'' என்றேன்.

ஆசிரியர் கதையை மளமளவென்றுபடித்துவிட்டு 'ரிஜக்டட்' என்றார்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran

REGISTERED No. M. 4367
Registered as a Newspaper in Sri Lanka

சிறந்ததும் சிக்கனமும் ஆன டிஸ்டெம்பர் பற்றிய முழு விவரங்களை அறிந்து கொள்ள வாரீர்.

சிறந்ததே வேண்டும், அதுவும் பட்ஜெட்டிற்குள் அடங்கும் விலையில், என்று நினைப்பவர்கள் நெரோலாக்கின் ஸோல்ஜர் பிராண்ட் ஆயில் பௌண்ட் டிஸ்டெம்பரையே தேர்ந்தெடுக்கின்றனர். அது ஏன் என்பதைத் தெரிந்து கொள்ள, 'All you wanted to know about painting' என்ற **நெரோலாக் பெயிண்ட்ஸ்** இலவச விளக்கப் புத்தகத்திற்கு இன்றே எழுதவும்.

கீழே தரப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி உடனே தபாலில் அனுப்பி வைக்கவும்.

> தயவு செய்து நெரோலாக் பெயிண்ட்ஸ் விளக்கப் புத்தகம் ஆங்கிலப் பிரதி ஒன்று அனுப்பவும்.
>
> பெயர் ____________________
>
> முகவரி ____________________
>
> ____________________ பின்கோட் __________
>
> **குட்லாஸ் நெரோலாக் பெயிண்ட்ஸ் லிமிடெட்**
> தகவல் டெஸ்க்,
> த.பெ. எண் 16322, பம்பாய் 400013.
>
> 166 R-V

தயவு செய்து 35 காசு தபால் முத்திரையும் வைத்து அனுப்பவும்.





நெரோலாக் பெயிண்ட்ஸ்

இல்லங்களுக்கு எழிலூட்டும் வண்ணங்கள்!

ULKA-GNP-166 R TAM